SOUTHERN LANGUAGES BOOK TRUST

யுனெஸ்கோவின் உதவியுடன்,
தென்மொழிப் புத்தக டிரஸ்டின்
ஆதரவில் பதிப்பிக்கப்பெற்றது

ரூ. 1.75





# மனித உரிமைகள்

ஏ. ஜி. வெங்கடாச்சாரி





தமிழகம் சென்னை-1.

(1959)

# மனித உரிமைகள்

ஏ. ஜி. வெங்கடாச்சாரி

தமிழகம்

# மனித உரிமைகள்

ஆசிரியர்

ஏ. ஜி. வெங்கடாச்சாரி

தமிழகம்

59, பிராட்வே-சென்னை-1.

TAMIL
First Edition : 5000
August, 1959

# MANITHA URIMAIGAL

(HUMAN RIGHTS)

BY

A. G. VENKATACHARI

Library Edition

**Price : Rs. 1-75**

---

Published with the assistance of UNESCO
and under the auspices of
The Southern Languages Book Trust, Madras
TAMIL 51

---

*Copyright of this Tamil Edition belongs to :*

**THAMIZHAGAM**

**59, BROADWAY :: MADRAS-1**

---

M.W.N. Press, 11, Lloyd's Road, Madras-5.

# அணிந்துரை

டாக்டர் ஏ. எல். முதலியார்

துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்

தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்டு, தன்னுடைய முன் அனுபவங்களாலும், பொதுமக்களைக் கவர்வனவாயும் அதனோடு அவர்களுக்கு நற்பயன் அளிப்பனவாயும் உள்ள நூல்களை வெளியிட்டதால் பெற்ற அறிவின் திறத்தாலும், இரண்டாம் வரிசை நூல்களை வெளியிடத் தலைப்பட்டுள்ளது. அவற்றைத் திராவிட மொழிகள் அனைத்திலும் ஆக்கி அளிக்கவும் அது கருதுகின்றது. இந்த நூல்களெல்லாம் மிக்க கவனத்தோடும், படிப்பவர்களின் பலதிறப்பட்ட சுவை களுக்கு ஏற்பவும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. வாழ்க்கை யின் பலவகைக் கூறுபாடுகளையும் பற்றிய பலபல பொருள் கள் அடங்கிய நூல்களை வெளியிட இந்தப் புத்தக டிரஸ்டு இயற்கையாகவே ஈடுபடத் தொடங்கியுள்ளது. இந்தியப் பெருந்தலைவர்களுள் சிலருடைய வாழ்க்கை வரலாறுகளையும் அவர்கள் சாதித்தவைகளையும் விரித்துரைப்பதற்கென ஒரு பகுதியும் இதில் தனியாக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. நாட்டின் நலன்களில் அக்கறைகொண்டு, மக்களின் அடிப் படை உரிமைகளுக்காகப் போராடவும், நாட்டின் மதிப்பை யும் செல்வாக்கையும் வலுப்படுத்தவும் அரும்பணி ஆற்றிய இப்பெருந்தலைவர்களுக்குத் தாங்கள் எவ்வளவு கடமைப் பட்டவர்கள் என்பதை வருங்கால மக்கள் அறிந்து கொள் வது நல்லது.

தத்துவம், சமயம், விஞ்ஞானம், பேரிலக்கியங்கள், பொருளாதாரம் என்பனவும் இவ்வரிசையில் இடம் பெற்றுள்ளன. சிறு கதைகளுக்கும் பண்டைய கலைகளைப் பொதுமக்களிடையே பரப்புவதற்கும் இதில் இடம் வகுக்கப்

பட்டுள்ளது என்பதைத் தெரிந்துகொள்வது நலமாகும். நடன நாடகக் கலைகள், சிற்ப சாஸ்திரங்கள், தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்டறிந்த உண்மைகள், என்னென்றும் வியத்தகு பொருளகளாய் விளங்கும் தென்னிந்தியப் பெருங் கோயில்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் ஆகியவையும் இதில் சேர்க்கப்பெற்றுள்ளன. இப்போது வெளியிடப்பெறும் இந்த நூல் வரிசை படிப்பவர்க்குச் சுவையூட்டும் பல்வேறு வகைப் பட்ட பொருள்களை வழங்கும் என்பது என் துணிபு. பொது முறைக் கல்விக்குரிய பொருள்களைக் கொண்ட இத்தகைய வெளியீடுகள் மென்மேலும் பெருகும் பெருந்தொகையினராக வாசகர்களைக் கவர்ந்துகொள்ளும் என்பதில் ஐயமில்லை.

இந்த நூல் வெளியீட்டுத் திட்டத்தில் தென்னிந்திய மொழி நூல்களுள் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மொழி பெயர்க்கும் அம்சம், பாராட்டுத் தகுதியுடையதாகும். இவ் வரிசை முற்றுப் பெற்றதும், எழுதப்படிக்கமட்டும் தெரிந்த ஏராளமான மக்களைத் தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள உண்மையான ஆர்வம் கொள்ளும்படி செய்து, அவர்களைப் பழக்கமாகப் படித்துவரும் தொகையினருடன் இணைத்து இவற்றால் அவர்கள் தாங்களாகவே மிக்க திறம் உடையவர் களாவதற்கு இவைகள் உறுதுணை ஆகும் என்பது என் துணிபு. தென்னிந்திய மொழிகளின் புத்தக டிரஸ்டு எந்த உயரிய நோக்கங்களோடு தொடங்கப்பெற்றதோ அந்நோக்கங் கள் அஃது ஆற்றிவரும் அரும்பணியால் மேன்மேலும் நிறை வேறிவரும் என்று நான் நம்புகிறேன்.

**ஏ. எல். முதலியார்,**
துணை வேந்தர்.

# முன்னுரை

"மனித உரிமைகளின் பிரகடனம்" (Declaration of Human Rights) என்பதை 1948-ம் ஆண்டில் அக்டோபர் 10ஃ யன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (ஐ. நா. அசெம்பிளி) அங்கீகரித்து வெளியிட்டது. எதிர்ப்பு இல்லாமல் இதை எல்லா தேசங்களும் ஏற்றுக் கொண்டன. இந்த மாதிரி ஒரு பிரகடனம் வெளியாகவேண்டிய அவசியம் இருந்தது. இரண்டு உலக யுத்தங்களின்போதும், அவற்றின் விளைவாகவும், எல்லா தேச மக்களும் அளவிடுதற்கரிய கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாயினர். போரில் நேரடியாக ஈடுபட்ட தேசத்தவர் மட்டுமின்றி பிறரும் இவற்றை யெல்லாம் அனுபவிக்க நேரிட்டது. மீண்டும் உலகில் யுத்தமே வரலாகாது; எல்லாத் தகராறுகளையும் சமாதான முறைகளிலேயே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று உறுதி செய்து, அதற்காக ஐ. நா. ஸ்தாபனத்தை அமைத்து, அதில் பெருவாரியான தேசங்கள் இணைந்தன. சமாதானத்தைக் காப்பாற்றவும், மற்றபடி தேசங்களிடையே ஒத்துழைப்பையும், பரஸ்பர உதவிக்கான வழிமுறைகளையும் வகுத்துக் கொண்டார்கள். இவற்றிற்கான ஆலோசனைகள் நடந்த காலத்தில் சில அடிப்படையான விஷயங்கள் பரிசீலனைக்கு வந்தன. எந்த தேசமும் போரைத் துவக்குவதில் அக்கறையில்லாதபடி செய்யவேண்டுமாயின், ஒவ்வொன்றிலும் வசிக்கும் மக்கள் சுதந்திரர்களாக, நிம்மதியுடன், திருப்தியுடன் வாழ வழி செய்யவேண்டும் என்பதைப் பலரும் உணர்ந்தனர். மக்கள் விழிப்புடன் செயலாற்றும் சூழ்நிலையில்தான் எந்த தேசத்தின் சர்க்காரும் தான்தோன்றித்தனமாக நடந்துகொள்ளாமலிருப்பர் என்பது தெளிவாயிற்று. தவிர மனிதப் பிறவி இயற்கையான சிறப்புக்கள் கொண்டது; ஒவ்வொரு தனிமனிதனும் வாழ்வில் முழுமை காண உரிமையுள்ளவன், இது நாகரிக வாழ்வின் அடிப்படை என்பது தொன்மையான கோட்பாடு. தனி மனிதனது வாழ்வு

# அணிந்துரை

பகுத்தறிவு பெற்றதினுல் மனிதன் விலங்குகளில் தலைசிறந்து நிற்கின்ருன். பகுத்தறிவினுல் மனிதன் மானிட இனத்தின் வாழ்க்கையை நிகரற்ற சுயேச்சை, ஒற்றுமை, அன்பு, முரண்பாடு தீர்ந்த உரிமை, கடமைகளின் பொருத்தம், ஒளிவீசும் தனிமனிதப்பண்பு இவை கூடிய செல்வத்திரளாக ஆக்க முடியும். இதுவரை வரலாற்றில் காண இயலாத விஞ்ஞான சக்திகள் மனிதன் அடி தாழ்ந்து, அவன் கட்டளையைக் காத்து நிற்கின்றன. இவை பயன்படுதலால் ஊண், தங்குமிடம், உடை, நோயற்றவாழ்வு, மக்கட் கல்வி, பயண ஆற்றல் இவைகளில் மனிதன் எளியர்க்கும் வழங்கக்கூடிய வளமான சுதந்திரங்களை இன்று கண்கூடாகப் பெற்று அநுபவிக்க முடியும். போர் என்பது பகுத்தறிவின் பாழ்மையை விளக்கும் விபரீத விளைவு எனலாம். போர் ஒழிந்து, அதன் அச்சமும் தீர்ந்து, விஞ்ஞான சக்திகள் நற்பயன் வாயிலாகவே இயங்குவது மனிதன் கருத்திற்கும் பகுத்தறிவுக்கும் எட்டாக் கனியல்ல. அப்படியிருந்தும், விஞ்ஞான சக்திகளால் ஊழித்தீயை யொத்துப் பேய்க் கோலம் கொண்ட போர் அச்சம் இன்னும் உலக மக்களுள் தீர்ந்தபாடில்லை. உரிமைகள் இன்னும் வழங்கு நிலையையும் வளத்தையும் பெறவில்லை. ஒரு நாட்டினருள் என்ன உயர் உரிமைகள் சாஸன வடிவம் பெற்றிருந்தாலும், நீதிமன்றங்கள் அவைகளை எத்துணை ஊக்கமாக நிறை வேற்றினுலும், ஊண், உடை, தங்குமிடம் போன்ற நீக்க இயலாத அடிப்படைத் தேவைகளில் பெரும்பாலோர் குறைபட்டிருப்பின், மக்கள் அரசியல் தன்மை அங்கு நன்று ஊன்றப்படவில்லை என்றே கருத வேண்டும். ஏனெனில் ஊணிலும் உடையிலும் குறை மிகுந்தோர் மற்று எந்த உரிமைகளையும் விற்றேனும் அவை அடைந்து வாழத் தயங்கார்.

எந்தப் பகுத்தறிவு மனிதன் வாழ்வை உய்விக்கும் சக்தியாகுமோ, அதுவே மனித இனத்தை அடிமை நிலையிலும்

போர் இருளிலும் வீழ்த்தி நாசமாக்கக்கூடியது. தன்னை ஆக்கவும் அழிக்கவும மனிதன் சுயேச்சாதிகாரம் பெற்றிருக்கிருன். இது கடவுளின் சிருஷ்டி இயல்பாகும். இன்று விளங்கும் விஞ்ஞான சக்திகளின் கொடும் விளைவாக மனிதன் தன் இனத்தையே மாய்த்துக் கொள்ளக்கூடும். உரிமைகளை மொழியாக்குவது மனத்தெளிவிஞல்தான். அவைகளை நிறைவேற்றுவது பகுத்தறிவின் திடம், மனஉறுதியாம். அவைகளைக் கடமைகளுடன் முரண்இன்றிப் பொருத்தி மக்கள் இனிய வாழ்வு பெறுவது மன ஆற்றல். ஆனுல் அவைகளைச் சொல் அளவில் நிறுத்தி, சுயநல இருளில் மூழ்கிய அதே மனம், அடிமைச் சமூகத்தைப் படைத்தல் கூடும். கீழ்விலங்குகளுள் அடிமையாக்கி விற்றல் என்ற கொடு வழக்கைக் காண்பது அரிது. மனித வரலாற்றில்தான் மக்களை மக்கள்விற்று அடிமைகொண்டு தீங்கு இழைத்து வந்திருக்கிருர்கள. இந்த நூலில் பின்வரும் "மனித உரிமைப் பிரகடனம்" வாசகத்தில் நான்காம் 'ஷரா' வாக—"அடிமை நிலையில் அல்லது அடிமையை ஒத்த நிலயில் எவரையும் வைத்திருக்கலாகாது" எனக் கண்டிருப்பதும், அடிமை வியாபாரத்தை எவ்வகையேனும் தவிர்த்தல் வேண்டும் என்ற குறிப்பும், இன்றும் சில நாடுகளில் உருவழியாத இந்தச் சரித்திரக் கோளாற்றை விளக்குவனவாம்.

ரூஸ்ஸோ என்ற பிரான்ஸ் நாட்டின் பிரபல அரசியல் தத்துவ நிபுணர் தாம் இயற்றிய "சமூக உடன்படிக்கை" (The Social Contract) என்ற நூலை இப்புகழ்பெற்ற வாக்கியத்துடன் தொடங்கினுர்—"மனிதன் சுயேச்சையில் பிறக்கிருன்; ஆனுல் எங்கும் அவன் வாழ்வது தளைகளைப் பூண்டே". இது வரலாற்றின் உண்மை அல்ல. சுயேச்சை அல்லது சுதந்திரம் என்பது தனிமனிதனின் உடல் கூற்றைப் போன்ற பிறவித்தோற்றம் அல்ல. எவ்வளவோ பாடுபட்டுத்தான் சமூக வாழ்வில் மனிதன் சுயேச்சையை உருவாக்குதல் வேண்டும். நாம் முன்பு வற்புறுத்திய வண்ணம், ஊண், உடை, தங்குமிடம், நோய் நீக்கும் பரிகாரங்கள், கல்விபெற வசதி, இவைகளில் தனிமனிதன் ஓரளவு போதிய உரிமை

வளம் பெருவிடின், மற்றும் கருத்துரிமை, பேச்சுரிமை, எழுத் துரிமை போன்ற மனோநிலையைச் சார்ந்த சுதந்திரங்களை அவன் அடைந்தும் வீணே. இது நீங்க, உரிமைகளை மொழி அளவில் நிறுத்தி, நிறைவேற்றும் ஆற்றலை அழித்துவிட்டா லும், அச்சமூகத்தின் அடிமைநிலை, அதாவது தனிமனிதன் பூரணவாழ்வு பெருதநிலை, மாருது. திரு ஏ. ஜி. வேங்கடாச் சாரி திறமையுடனும் தெளிவாகவும் சில மூலங்களை ஆய்ந்து திரட்டித் தமிழில் இயற்றியுள்ள இந்த நூலில், "உரிமை களின் அமுல்" என்ற அத்தியாயம் மிகவும் முக்கியமானது. ஐ. நா. வின் 'மானிட உரிமைப் பிரகடனம்' சட்ட அதிகாரம் பெற்றதா, அல்லது இலட்சியங்களை வெளியிடும் வெற்றுரை தானு என்பது நுட்பமான, சாரமான கேள்வி. அதற்கு எளிதில் விடைபகரமுடியாதிருப்பதே, மானிட இனத்துக்கு நன்மை பயக்கும் செய்தியாம். வழக்கில் வாதாடக்கூடிய (justiciable) உரிமைகள் அல்லாவிடின், அவை சட்ட அதி காரம் பெற்றவை அல்ல என்று நிர்ணயித்துவிடக்கூடாது. எது சட்டமாகும் என்பது பற்றி சட்ட நிபுணரும் தத்துவ ஞானியரும் கூட ஒருமனதான கொள்கையைப்பற்ற முடிய வில்லை. இதுபோன்றே, பலதேச சட்டம் (International Law) என்ற சட்டத்தொகுதி, சட்ட அதிகாரம் பெறுவதா அல்லவா என்பது பற்றி சட்ட நிபுணர் வாதித்து வருகின்றனர். ஒன்று 'தெளிவு, இவ்வுரிமைப் பிரகடனத்தைச் சட்டமூல மாக நிறைவேற்ற, நாகரிகப் பண்பு வாய்ந்த ஒவ்வொரு நாடும் கடமைப்பட்டுள்ளது. இதைச் சட்டபூர்வ அதிகாரம் கொண்ட தாக நாம் பாவிக்கும அந்த அளவிற்கு, நாம் பூரண வாழ்வின் லட்சியத்தை அணுகுவோம் என்பதில் ஐயமில்லை.

மற்றும், உரிமைகள் பிறந்த இடத்தே, கடமைகள் பிறப்பது இயற்கை விதி. கடமைகளுக்கும் உரிமைகளுக்கும் முரண் ஏற்படுவதும் இயல்பாகும். இவைகளின் பொருத்தம், மிக நுட்பமான புத்திக்கும் கடினம் ஏற்றும் செயல். இது குறித்தே காந்தியடிகள் போன்ற பெரியார் சிலர், உரிமைகளை வற்புறுத்துவதே குருட்டுப் போக்கு வழி, அதனுல் சமூக அமைதி நிலவுதல் அரிதாம், தம்தம் கடமைகளை வழுவின்றி

(Welfare State) இன்றியமையாததே. வறுமை, பிணி, படிப்பின்மை போன்ற அல்லல் சக்திகள் நாட்டில் உள்ளவரை, யாவரும் நிறைவேற்றிஞல் மனிதன் பிழைப்பான் என்றனர். ஐ. நா.வின் கல்வி-விஞ்ஞானப்-பண்பு கழகத்தின் [UNESCO] தலைவராயிருந்த ஹக்ஸ்லி என்பவர்க்கு காந்தியடிகள் இறுத்த விடையில்—" உலக மகன் என்ற வகையில் தான் ஆற்ற வேண்டிய கடமையை ஒருவன் புரிவதால்தான் வாழ்விற்கு உரிமையே உருப்பெறுகின்றது" என்று கூறியது காண்க [நூலில் 'முன்னுரை' அத்தியாயம் காணவும்]. இது புரட்சிகரமான கொள்கையான போதிலும், இதில் அநுபவ வெற்றி பெறுவது எளிதில் இயலாதபடியால், உரிமைகளேயேனும் முதலில் வகுத்துக் கூறி வழங்கி நிறைவேற்ற முயன்ருல், ஓரளவு மக்கள் அரசியல் தன்மை நிலைபெற்றுத் தனி மனிதனின் பூரண வாழ்வு எய்தக் கூடும் என்று நம்பியே மானிட உரிமைப் பிரகடனம் இயற்றினர். உண்மையில் காந்தியடிகள் கூறியவண்ணம், கடமை-உரிமைகளின் நெருங்கிய உறவாலும், யாவரும் கடமைகளைச் செவ்வனே புரிவதாலும் உரிமைகள் தாமாகவே ஒளிபெற்று இயங்கும் என்பது, சுயநலப் பாராட்டு சிறிதும் அற்ற உலகில்தான் சாத்தியம்—சட்ட தண்டனைகளுக்கு பயந்து சிலரேனும் குற்றங்கள் புரியாமல் இருக்கும் வரை, சமூகத்திற்குச் சட்டம் அவசியமாகிறது. அறநெறிகளின் சிந்தனையால் எவரும் தீங்கிழைக்காமல் இருக்கும் மக்கள் கூட்டத்தில், சட்டம் அவசியமல்ல. உரிமைகளைப் புறக்கணிக்கும் சுயநலத்தின் பொருட்டே, உரிமைகளை வகுத்துக் கூறி, உருவாக்கி எளியர் பங்கிலும் நிறைவேற்ற முயல்கின்ருேம்.

என்று சமூகம் ஏற்பட்டதோ, அன்று அரசாங்கமும் இன்றியமையாத கருவியாகத் தோன்றி வளர்ந்தது. தற்காலத்தில், அரசாங்க வளர்ச்சியிஞல் தனிமனிதனின் உரிமைகள் பாதிக்கப்படும் அளவில் அபாயம் ஏற்பட்டுவிட்டது. இது ஓரளவு 'தர்ம சங்கடம்' (dilemma) என்று குறிப்பிடக்கூடிய இருதலைக்கொள்ளி எறும்பு நிலையை ஒத்ததெனலாம். குடிமக்கள் நல்வாழ்வு எய்தப் பாடுபடும் அரசாங்கம்

வடிவிலேயே அமைவதற்கும் பெரிய வித்தியாசம் தோன்று வது கண்கூடு. விளக்கமாக, இந்த நாட்டில் கல்வி வசதி, இவைகளை நீக்க அரசாங்கம் பலதுறைப் பெருமுயற்சிகள் எடுப்பது தவிர்க்க முடியாதது. ஆனால் இதன் விளைவாகத் தனி மனிதனின் சுயேச்சாதிகாரம் வன்மையில் குறைவதும் நீக்கற்கரிய விளைவாகும். இதன் நீண்ட பயனாக தனி மனிதனின் மொழி உரிமை, எழுத்துரிமை, சங்கம் கூட்டுரிமை போன்றவை அழிந்தால், அரசாங்கத் தொழில்கள் எவ்வளவு மும்முரமாக நடைபெற்றபோதிலும், அவ்வரசாங்கம் மக்கள் அரசியல் தன்மை அழிந்து, எல்லையற்ற வன்மை செலுத்தும் கொடுங்கோல் அரசாங்கமாக (Totalitarian State) மாறி விடுகிறது. மக்கள் நல லட்சிய அரசியலில் (Welfare State) தனி மனிதனின் உரிமைகளையும் காத்து, அரசியல் திறத்தையும் காப்பது எளிதே அல்ல. இச்சிக்கல்களை மானிட உரிமைப் பிரகடன வரலாற்றால் ஓரளவு விளக்கும் இந்நூல் இதுபற்றியும் மிகவும் மதிப்பிற்குரியதாம்.

இங்கு, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் சட்ட வடிவிலேயே இடம் பெறும் சாதி, நிற பேதங்களைக்குறித்து ஓரளவேனும் வற்புறுத்தி எழுதாமல் இருப்பது தகுதியல்ல. இவ்வகை பேதங்கள்தாம் மனிதனின் அடிப்படை உரிமைகளையும், மனிதப்பண்பையுமே சீர் குலைக்கின்றன. உரிமைப் பிரகடன வசனத்தின் இரண்டாம் 'ஷரா'வில் இனம், நிறம், பால் முதலியவைகளால் உரிமைகள் வேறுபடச் சிறிதும் நியாயமில்லை என்ற ஒளிவீசும் பேருண்மை பொறித்திருப்பது காண்க. உலக அநுபவத்தினால் விரக்தி அடைந்த சிலர், உரிமைகள் மொழியளவில்தான் பல நாடுகளில் வழங்கப்படுகின்றன வென்றும், அதனால் உரிமை சாஸனங்களே பயனற்றன என்றும், எளியர், தனவந்தர் போன்ற பேதங்களெல்லாம் புரட்சியினால் உடைபெற்றுப் பொது உடைமை நிலவியபின்தான் உரிமைப் பேச்சே எழ வேண்டும் என்றும் வாதிக்கின்றனர். இந்த வாதம் சரியல்ல என்றே கருதுகிறேன். உரிமைகளை நிறைவேற்றத் தடைகள் இருப்பதற்கும் அடிப்படை உரிமைகளுக்கு முரணான பேதங்கள் சட்ட

பொதுநிலையங்கள், பயண முறைகள் இவைகளில் சாதி, நிறம், பால்பற்றிய வேறுபாடுகள் சட்டமூலமாகப் புறக்கணிக்கப்படுகின்றன. அவை சட்ட விரோதமென்பதில் எள்ளளவும் ஐயமில்லை. சமூகக் கட்டுப்பாடுகளினாலும், சமூகக் கொடுமைகளினாலும், சிலசில இடங்களில் இன்றும் சில வருணத்தவர்க்கு அவ்வுரிமைகள் கையில் கிட்டாமல் போகலாம். ஆனால், அதற்கும், தென் ஆப்பிரிக்காவில் வெள்ளை நிறத்தவர் அல்லாதவரைச் சட்டக் கருவிகள் மூலமாகவே மாற்றாந் தாயிடம் பிள்ளைபடுவது போல் கொடிய பேத வகையில் விலக்குவதற்கும், மலைக்கும் மடுவுக்கும் போன்ற வித்தியாசம் உண்டு. இப்பேருண்மையை அடிப்படையாகக் கொண்டது தான் மானிட உரிமைகளின் பிரகடனம். சட்ட அளவிலாவது உரிமைகள் நாட்டப்பெற்றால், ஒரு காலம் அவை நிறைவேற்றப்படலாம். அவைகட்கு முரணான பேதங்களைச் சட்டமே நாணமின்றி உருவாக்குமிடத்து, அந்நம்பிக்கைகூட அழிவதல்லவா?

நமது நாட்டைக் குறித்து இங்கு சில செய்திகள் கூற விரும்புகிறேன். நமது நாட்டின் அமைப்பு சாஸனத்தில் [Constitution-அரசியல் சட்டம்] அடிப்படை உரிமைகள் [Fundamental Rights] இடம் பெற்று விட்டன. இவை நீதிமன்றங்களில் குடிகள் வழக்காடிப் பெறக்கூடியன [justiciable]. உண்மையில், நமது நாட்டின் சாஸனம் உருவான பின், அகில இந்திய பெருநீதி மன்றத்தில் [Supreme Court of India] இவ்வடிப்படை உரிமைகளின் வன்மை எல்லைகள், இவை பல தீர்ப்புக்களின் மூலமாக உறுதியாகவும், தெளிவாகவும் கூறப்பட்டிருக்கின்றன. இத்தீர்ப்புக்கள் சட்டத்தொகுதியைச் சார்ந்தனவாம். தவிரவும், அமைப்பு சாஸனத்தின் விதிகளில் ஒவ்வொரு பிரதேச உயர்நீதி மன்றத்திற்கும் [High Court], இவ்வடிப்படை உரிமைகளையும் இயற்கை நீதிமுறையையும் அமுலாக்கும் சில அதிகாரங்கள் —முக்கியமாக விடுஆணை அதிகார எல்லையுள் [writ jurisdiction] அடங்கியவை - தரப்பட்டிருக்கின்றன. இன்றும் இவை செலுத்தப்பெற்று, தனிமனிதனின் உரிமைகட்கு இயன்ற

வரை பூரணம் அளித்து, அவன் குறைகளை நீக்குகின்றன. ஆனால், நாம் முன்பு வற்புறுத்திய வண்ணம் நமது லட்சியங்களை எல்லாம் இன்னும் அடைந்தபாடில்லை. வறுமை, பிணி, அறிவின்மை இவ்வகை அல்லல் சக்திகள் தாண்டவமாடும் அளவில், சொல் உரிமை, எழுத்து உரிமை, கூட்டு உரிமை, அரசியல் கொள்கைப் பிரசார உரிமை போன்ற மனோவடிவமான உரிமைகளெல்லாம், ஊண், உடை, இடவசதிகளில் குறைவுற்றவர்க்கு வியர்த்தமாகின்றன. இன்று நமது சாஸனத்தில் லட்சியக் கொள்கைகள் (Directive Principles) ஆக மாத்திரம் இடம் பெற்ற வறுமை நீக்கம், படிப்பின்மை நீக்கம், பொருளில் பெரும் பேதங்கள் அழிதல் இவையெல்லாம் கண்கூடான உண்மைகளாக விளங்கினாலன்றி, நம் நாட்டில் உரிமைகள் பூரணமடைந்ததாகக் கூற முடியாது.

தென் இந்திய மொழிநூல் நிலையத்தவர் (The Southern Languages Book Trust), நமது நாட்டில் அறியாமையை நீக்கப் பல அரிய நூல்களைத் தமிழ், தெலுங்கு, மலையாளம் போன்ற தென் இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து உதவிப் பெருந்தொண்டு ஆற்றி வருகின்றனர். இவர் ஊக்க முயற்சிகளால் நூறு நூல்கள் ஏற்கெனவே பிரசுரமாகித் தமிழ் நாட்டில் உலவி வருகின்றன. இவைகளுள் அரசியல் கொள்கைகளை விளக்கும் இதுபோன்ற நூல்கள் மக்கள் எழுச்சிக்கே பயன்படுவன. ஆகையால், அவை பெரும் பணிக் கருவிகள் எனவே கருதுகிறேன். அரிஸ்டாடில் என்ற கிரேக்க தத்துவ ஞானி– "எவ்வாறு சமூக வாழ்வு என்பது நிலை பெற அரசாங்கம் பிறந்ததோ, அவ்வாறே தனிமனிதனின் வாழ்வை வளமாக்குதல் அதன் கடனாகும்" என்றார். அந்த பூரண வாழ்விற்கு உரிமைகள் அவசியம். அடிப்படை உரிமைகள் எவை, ஐ. நா. பிரகடனத்தில் அவை எவ்வாறு உருவாக்கப் பெற்றன, இதன் எதிர்காலம் யாது என்ற அரிய செய்திகளை ஆராயும் இந்நூல் யாவர்க்கும் பெரும் பயன் அளிப்பதாக.

மா. அனந்தநாராயணன்.

முழு மலர்ச்சி காண வேண்டுமாயின், சர்க்காருக்கும் மக்களுக்கும் இடையே இருக்கவேண்டிய உறவுநிலை திட்டவட்டமாக உருப்பெறுவது அவசியம் என்பதும் பழைய கோட்பாடே. சர்க்கார் எவற்றில் குறுக்கிடலாம்? எந்த அளவு குறுக்கிடலாம்? உறுதி செய்ய வேண்டிய உரிமைகள் யாவை? ஒவ்வொருவருக்கும் அளித்தாக வேண்டிய வாழ்க்கை வசதிகள் யாவை? இவையெல்லாம் கவனிக்கப்பெற்றன. தேசத்துக்குத் தேசம் பலவகைகளில் வேறுபட்டிருந்தாலும், ஒவ்வொன்றிலும் தனி மனிதனுக்கு இருந்தாக வேண்டிய உரிமைகளைப் பொதுப்படையாக முடிவு கட்டி அவற்றிற்கு ஐ.நா.விலுள்ள மெம்பர் நாடுகளின் இசைவைப் பெறுவது அவசியம் என்று கருதப்பட்டது.

மிகப் பழைய, ஆனால் என்றும் புதிதாகவே இருந்து வரும் மற்றொரு பிரச்னையும் மேலுக்கு வந்தது. ஒவ்வொரு நாட்டிலும் மனிதவுரிமைகள் எப்படியிருக்கவேண்டும் என்று வரையறுத்தால் மட்டும் போதாது; எல்லா தேசங்களுமே அவற்றை ஏற்றுக் கொண்டு நடத்திவைக்கும் சூழ்நிலையில் தான் மனிதன் முழுமைகாண இயலும் என்பது புலனாயிற்று. ஆதிபத்திய அதிகாரமுள்ள பல்வேறு தேசிய சர்க்கார்களின் கீழ் மக்கள் வாழ்ந்தபோதிலும் உலகமே ஒரு குடும்பம் என்ற கருத்தில் ஸர்வதேசிய உறவுமுறைகள் அமைந்து செயல்படுமாறு உழைப்பதுதான் பண்புடைமை என்று கருதப்பட்டது. எனவே வேற்றுமைகளிடையே ஒற்றுமைகாணும் அவசியத்தை ஒப்புக் கொண்டு, தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ விடுவதுதான் தருமம் என்பதை அறிவுறுத்தி மனிதவுரிமைகளை வரையறுக்க முற்பட்டார்கள்.

ஐ. நா. அசெம்பிளி தோற்றுவித்த 'உனஸ்கோ' (ஐ. நா. விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனம்) உரிமைகளைத் தொகுக்கும் பொறுப்பை மேற்கொண்டது. அதன் டைரெக்டராக இருந்த பேரறிஞர் ஜூலியன் ஹக்ஸ்லி உலகப்புகழ் படைத்த பல தத்துவ ஞானிகளுக்கும் தலைவர்களுக்கும் ஒரு வினாத்தாளை அனுப்பி, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டறிந்தார். மகாத்மா காந்தி, இ.எச். கார், ஹேரால்ட் லஸ்கி, மடாரியாகா

குரோஸி, சுங்-ஷு லோ, ஹுமாயூன் கபீர் உள்பட பலர் தத்தம் ஆழ்ந்த கருத்துக்களைத் தொகுத்து அனுப்பிவைத்த னர். அவற்றை ஆராய்ந்த கமிட்டியொன்று நகல்-பிரகடன மொன்றைத் தயாரித்தது.

பழைய சம்பிரதாய உரிமைகளும் புதிய பொருளாதார, சமூகவுரிமைகளும் சேர்ந்து உரிமைப்பட்டியலில் ஏறின. இதன் விளைவாக ஜீவாதாரவுரிமைகள் எனப்படும் ஜாபிதாவை உனெஸ்கோ தயாரித்து, எல்லா நாடுகளுக்கும் அனுப்பியது. வாழ உரிமை, நோயில்லா வாழ்வுக்கும் நோய் வந்தபோது பாதுகாப்புக் தம் உரிமை, வேலை செய்ய உரிமை, வேலையில் லாக் கஷ்ட நிவாரணம், சொத்து சம்பாதித்து அனுபவிப் பதற்கு உள்ள உரிமை, கல்வி உரிமை, தகவல்களைப் பெறு வதற்குள்ள உரிமை, சிந்தனை சுதந்திர உரிமை, தன் கருத்தை பிரகாசப்படுத்த உரிமை, நியாயம் பெற உரிமை, ராஜீய நட வடிக்கை எடுக்க உரிமை, பேச்சுரிமை, கூட்டம் கூட உரிமை, சங்கம் அமைக்க உரிமை, வழிபாட்டு உரிமை, பத்திரிகைச் சுதந்திரம், பிரஜாவுரிமை, கொடுமைக்கு எதிராகக் கலகம் செய்ய அல்லது புரட்சி செய்ய உரிமை, விஞ்ஞான வளர்ச்சி யும் மற்ற அபிவிருத்திகளும் தரும் அனுகூலங்களால் பய னடையும் உரிமை ஆகியவை அந்த நகல்-திட்டத்தில் விளக் கப் பெற்றன. அதுதான், விவாதத்துக்குப் பிறகு, மனிதவுரி மைப் பிரகடனமாக 1948 அக்டோபர் 10-ந்தேதி ஐ.நா. அசெம் பிளியில் நிறைவேறியது.

மனிதவுரிமைகள் என்பவை நமது தேசத்துக்குப் புதி யவை அல்ல. அறநெறி என்றும் தருமம் என்றும் சமூ கம் தோன்றிய காலம் முதல் இவை அவ்வப்பொழுது உரு வாகி வளர்ந்து வந்துள்ளன. மனிதனுக்கும் மனிதனுக்கு மிடையே இருக்கவேண்டிய உறவு முறை, கோஷ்டிகளாகச் செயல்படுவோர் பின்பற்ற வேண்டிய நியதிகள், அரசுபால் மக்களுக்குள்ள கடமை, மக்கள்பால் அரசுக்குள்ள பொறுப்பு ஆகியவை நமது பழைய நூல்கள் பலவற்றில் விவரிக்கப் பெற்றுள்ளன. உரிமைகள் என்று தனியாக இந்நாட்டில் பழங்காலத்தில் பிரித்துப் பேசப்பட்டதில்லை. உரிமைகளை

யும் கடமைகளையும் இணைத்தே தரும சாஸ்திரங்கள் (அற நூல்கள்) வழிவகுத்துக் கூறியுள்ளன. "தகப்பன் வீட்டில் மகன்போல தம் நாட்டில் மக்கள் வாழக்கூடிய அரசமைப்புத் தான் சீருடைத்து" என்று, தரும புத்திரருக்கு பீஷ்மர் உப தேசித்ததாக மகாபாரதம் கூறுகிறது. இந்த ஒரு வாக்கியத் தில் பொதிந்துள்ள சாசுவதமான உண்மைகள் சிந்தனைக் குரியவை. தகப்பன் வீட்டில் மகனுக்கு முழு சுதந்திரம் உண்டு. உரிமையுடன் கூட சோறு, துணி, தங்குமிடம், நோயுற்ற காலத்தில் பராமரிப்பு, பாதுகாப்பு, பிறருடன் கூட சம வசதிகள் உரிமைகள் அவனுக்கு உண்டு. இதே மாதிரி பரஸ்பர உணர்ச்சியுடன் மக்கள் சமுதாயம் பூராவுமே ஒரு குடும்பமாக வாழ வைக்கவேண்டும் என்பது இன்றைய சமு தாயச் சீரமைப்பின் குறிக்கோள். தனி நபருக்கு இருக்க வேண்டிய உரிமைகள், கிடைத்தாக வேண்டிய வாழ்க்கை வசதிகள் ஆகியவற்றிற்கு இந்த பீஷ்ம நியதி முற்றிலும் பொருத்தமானதாக இருக்கிறது. மனிதவுரிமைப் பிரகடனத் தில் செப்பியிருப்பவையெல்லாம் இந்த பீஷ்ம சூத்திரத்தின் விரிவான விளக்கமே என்பதைச் சிந்தனையாளர் எளிதில் புரிந்துகொள்வர். ராமராஜ்யத்துக்குத் தரப்பட்டுள்ள இலக் கணத்தில் இக்காலத்து க்ஷேமநல அரசாங்க இலக்குகளை யெல்லாம் காணலாம்.

அறவழிப்பற்றிய குறள்களில் தெய்வப் புலவர் திருவள்ளு வர், உரிமைகளையும் கடமைகளையும் இந்நாட்டுப் பண்பிற் கேற்ப சேர்த்தே கூறியுள்ளார். பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை, சமவுரிமைக்குத் தகுதியுள்ளவர்கள் எல்லா வகையின ரும் என்ற கருத்து அமைந்த குறள் பொருள் படைத்தது.

> "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்."

மனிதவுரிமைகளைப்பற்றிய ஹாம்ஸ்லியின் கடிதத்துக்கு காந்திஜி அனுப்பிய பதிலிலும் இதே தன்மை மேலோங்கி நிற் பதைக் காணலாம்.

"கடமையைச் செம்மையாகச் செய்வது என்பதிலிருந்துதான் அடைந்து காப்பாற்றத் தகுதியுள்ள உரிமைகள் பிறந்தன என்று எழுத்தறிவில்லாத ஆனால் அறிவு மிகுந்த, என் தாய் சொல்லக் கேட்டிருக்கிறேன். உலகப் பிரஜை என்ற வகையில் ஆற்ற வேண்டிய கடமையைச் செய்யும்போதுதான் வாழ்வதற்கான உரிமையே உருப்பெறுகின்றது. இந்த அடிப்படையிலிருந்து ஆண், பெண் கடமைகளை விளக்கி, ஒவ்வொரு உரிமையைப் பெறுவதற்கும் முன்னதாக ஒரு கடமையைச் செய்தாக வேண்டும் என்று விதித்து, இரண்டையும் இணைப்பது சுலபமாக இருக்கவேண்டும் பிறவுரிமைகளெல்லாம் அக்கிரமமாகப் பறித்துக் கொள்ளப்பட்டவையாகத்தான் இருக்க முடியும்; அவற்றிற்காகப் போராடுவதில் பயனில்லை."

காந்திஜியின் இந்தக் கருத்துக்கள் தெளிவானவை. கடமைகளையும் உரிமைகளையும் சரிவரப் பிணைக்காததால்தான் ஒவ்வொரு தேசத்தின் உள்நாட்டுப் பிரச்னைகளும் சர்வ தேச உறவு முறைகளும் சரிவர உருப்பெற முடியாதிருப்பதைக் காண்கிறோம். காந்திஜி வற்புறுத்தியுள்ள இந்த இணைப்புத் தத்துவம் உண்மையில் புரட்சிகரமானது. இன்று இல்லாவிட்டாலும் என்றாவது இதை மனித சமூகம் ஏற்றுக்கொண்டு நடத்தி வைக்கத்தான் வேண்டியிருக்கும். ஆனால் சர்வ தேச அடிப்படையில் இதற்கு வழி செய்வது இன்றைய நிலையில் சாத்தியமே அல்ல. ஆகையால்தான் முதற்படியாக உரிமைகளை வரையறுத்துப் பிரகடனம் செய்தால் போதுமெனக் கருதினார்களெனக் கொள்ளலாம். தவிர தனி நபரின் உரிமைகளைப் போல கடமைகள் மேலைநாடுகளின் வரலாற்றில் கருத்துச் செறிவு பெற்றதில்லை. அதன் காரணமாகவும் இந்த இணைப்பு வழி ஐ. நா.வில் அம்பலமேறவில்லை என்று கருதலாம். தனி நபரின் உரிமைகள், அவன்பால் சர்க்காருக்கு உள்ள கடமைகள் ஆகிய இரண்டையும் பிணைத்து விவரித்துள்ளது மனிதவுரிமைப் பிரகடனம்.

ஒவ்வொரு மனிதனும் தனித்தனி இயல்பு (பாவம்) உடையவன். 'எவ்வளவு மனிதர்கள் இருக்கிறார்களோ அவ்வளவு பாவபேதங்கள் உண்டு' என்று சொல்லுகின்றன நமது பழைய மருத்துவ நூல்கள். குணங்களாலும் தருமங்களாலும் வேறுபாடுடையவன் மனிதன் என்பது அறவாக்கு. இவ்வளவிருந்தும், வேற்றுமைகளுக்கிடையே உள்ள ஒற்றுமைகளை உணர்ந்து, நல்ல வழியில், வசதியுடன், ஒவ்வொருவனும் முழுமை காணத் துணைபுரியும் கடமை எப்பொழுதுமே இங்கு வற்புறுத்தப்பட்டு வந்துள்ளது. இயந்திரப் புரட்சிக் காலம் வரை தனிமனிதனின் உரிமை கடமைகள் தரும சாஸ்திர வரம்புகளுக்கு மட்டுமே உட்பட்டவையாக இருந்தன. அந்த சமுதாய அமைப்புக்கு அது போதுமானதாக இருந்தது. ஆகையால்தான் இந்நாட்டில் எத்தனையோ தனியரசுகள் இருந்தபோதிலும், ஒரே அறவாட்சி தேசமெங்கும் பரந்து அமுலாவது மாறாத வழக்கமாக இருந்து வந்தது. உரிமை கடமைகள் அவற்றில் எல்லாம் ஏறக்குறைய ஒரே சீராக இருந்தன. ராஜா யாராக இருந்தாலும் கடவுள்தான் ஆள்கின்றார் என்று மக்கள் நம்பினர்.

மேலை நாடுகளின் ஆதிக்கமும் மேலைக் கருத்துக்களின் செல்வாக்கும் பிறநாடுகளில் பரவி, அடிமை வாழ்வானது தோற்றுவித்த புது நிலைகளின் காரணமாக, உரிமை கடமைகள் சென்ற நூற்றாண்டில் தாறுமாறாகிவிட்டன. ஏகாதிபத்தியங்கள் தோன்றின. பிற மக்களை ஜயித்து ஆண்டு அவர்களை முன்னுக்குக் கொண்டுவரும் பொறுப்பும் உரிமையும் தங்களுக்கு இருப்பதாக ஐரோப்பிய நாடுகள் கருதி, ஏகாதிபத்தியங்களைத் தோற்றுவித்தன. வர்த்தகத்துக்காகவும் ராஜ்ய ஆதிக்கத்துக்காகவும் பொருளீட்டுதலுக்காகவும் அவை தம்மிடையே போட்டியிட்டு, உலகமெங்கும் சண்டை போட்டு, ஆசியாவில் பெரும் பகுதியையும் ஆப்பிரிக்கா பூராவையும் மத்திய தென் அமெரிக்க நாடுகளையும் தம் வசப்படுத்திக் கொண்டன. ஜப்பான், ஸயாம் ஆகிய இரண்டுந்தான் அடிமையாகாமல் தப்பியவை. சீனா பெயரளவில்தான் சுதந்திர நாடாக இருந்தது. இந்தியா அடிமையானது, பிற

ஆசிய தேசங்களையும் ஆப்பிரிக்க நாடுகளையும் ஐரோப்பியர் அடிமைப்படுத்துவதற்கு வழியைத் திறந்து விட்டது. அதே நியாயப்படி இந்தியாவின் விடுதலையானது, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலைக்கும் சுதந்திர மறுமலர்ச்சிக்கும், மனித உரிமைகளின் வளர்ச்சிக்கும் வழியைத் திறந்து விட்டது.

தனது பிறப்புரிமை என்பதற்காக மட்டுமின்றி, ஆசிய, ஆப்பிரிக்க மக்களின் விடுதலைக்காகவும், கொடுமையானது உலகில் எங்குமே இல்லாதபடி செய்வதற்கும் உழைக்கவே இந்தியா சுதந்திரத்தை நாடுகிறது என்று, 1942-ம் ஆண்டில் உலகப் பிரசித்தமான "குவிட் இந்தியா" தீர்மானத்தின் மீது பேசுகையில், காந்திஜி விளக்கமாக எடுத்துரைத்தார். அவர் கண்ட கனவு இன்று நனவாகி வருவதைக் காண்கிறோம். ஆசியாவில் இன்று அடிமை நாடு என்பது இல்லை. ஆப்பிரிக்காவில் சுதந்திரம் வேகமாகப்பரவி வருகிறது. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளெல்லாம், ஐ.நா.வில் அனுதாபமுள்ள பிற நாடுகளின் உதவியைக் கொண்டு, சுதந்திரமும் மனிதவுரிமைகளும் உலகெங்கும் அமுலாகச் செய்வதற்காக உழைத்து வருகின்றன. மனிதவுரிமைகளைப் பற்றிய நவீனக் கருத்துக்களை இந்த தேசங்கள் உற்சாகத்துடன் ஆதரித்து வருவது எதிர்காலத்தைப் பற்றி விசேஷ நம்பிக்கையைத் தருவதாக இருக்கிறது.

மனிதவுரிமைகளின் பிரகடனத்தில் காணப்படும் கருத்துக்களில் பழைய அடிப்படைகளின் வலிவையும், புதிய சித்தாந்தங்களின் பொலிவையும் ஒருசேரக் காணலாம். ஆனால் இந்தக் கருத்துக்கள் திடீரெனத் தோன்றி மனிதவர்க்கத்தை ஒரே மூச்சில் இன்று ஆட்கொண்டுவிடவில்லை. படிப்படியாக கால, தேச, வர்த்தமானங்கள் அவற்றை உருவாக்கின. வரலாற்றில் எவ்வளவோ நிகழ்ச்சிகள் பழையன கழிந்து புதியன புகுதலுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன. ஒரு இடத்தில் உதிக்கும் வலிமையுள்ள கருத்து எங்கும் பரவி, விரைவிலோ சற்று தாமதித்தோ, மனித சமூகம் பூராவையுமே

ஆட்கொண்டு வந்துள்ளது. மேலைநாடுகளில் மனிதவுரிமை களைப்பற்றிய கருத்துக்களின் அலைமோதலையும் வளர்ச்சியை யும்பற்றிய வரலாறு மிக ருசிகரமானது. அதை இங்கு சுருக்க மாகப் பார்க்கலாம்.

மனிதவுரிமைகள் என்ற கருத்து சம்பிரதாயத் தோற்றத் தில் ஐரோப்பாவில் உருப்பெற்றது பதினெட்டாவது நூற் றுண்டில். மாற்றக்கூடாதவை, சுயமாகவே உள்ளவை என்ற அடிப்படையில் அவை தயாரிக்கப்பட்டன. மன்னர் கள் தெய்வாம்சங்கள். அவர்களுடைய உரிமை கடவுளிட மிருந்து வந்தது என்பது தொன்மையான தத்துவம். அதே மாதிரி சமய விஷயங்களில் மத பீடத்துக்கு தெய்வீக உரிமை கள் கொண்டாடப் பெற்றன. இவ்விரண்டு தத்துவங்களையும் ஆட்சேபித்து, தனி மனிதர்களின் உரிமைகளுக்கு முக்கியத் துவம் கொடுத்து, அவை விரிவடையச் செய்தவை இரண்டு இயக்கங்கள். ஒன்று 'ரெபர்மேஷன்' (Reformation) என்ற சீர்திருத்த இயக்கம்; மற்றொன்று தொழில் துறைப் புரட்சி தோற்றுவித்த முதலாளித்துவம். தனி மனிதனது மனச் சாட்சிதான் பிரதானம் என்று சொல்லி, அவனது உரிமை களுக்கு ஏற்றம் கொடுத்தது சீர்திருத்த இயக்கம். மதபீடம், ஆட்சி பீடம் ஆகிய இரண்டின் பந்தங்களில்லாமல் தொழில் செய்து, தனிப்பட்டவர்கள் பிழைக்க வழி செய்து கொடுத்து, உரிமைகள் வளருவதற்காக சூழ்நிலையை தன் ஆரம்பதசை யில் தோற்றுவித்தது முதலாளித்துவம். ஆனுல் இவை பிறகு பல புது விலங்குகளையும் சிருஷ்டித்தன.

பதினெட்டாவது நூற்றுண்டில் உருவான மனிதவுரிமை கள் சரித்திரப் புகழ்வாய்ந்தவை. அமெரிக்காவின் விடுதலை யும் பிரெஞ்சுப் புரட்சியும் அவற்றின் நேரடியான விளைவுகள் இவையிரண்டும் பத்தொன்பதாம் நூற்றுண்டில் உலக மெங்கும் மனிதவுரிமை மறுமலர்ச்சி காணத் துணைபுரிந்தன. ஆனுல் இந்த இரண்டு புரட்சிகளையும் தொடர்ந்து பிறப்பட்ட சகதுகளின் ஆதிக்கமே மேலோங்கியதால், இந்த உரிமைகள், முதலில் பலர் எதிர்பார்த்தது போல வேகமாகப் பரவவில்லை.

புரட்சி நீடிக்கவில்லை. அதற்கப்புறம் முதலாளித்துவம் வலு வடைந்து தன் வளர்ச்சிக்கு அரசாங்க அதிகாரத்தையும் ஏகாதிபத்திய அமைப்பையும் துணை சேர்த்துக்கொண்டது. இதன் விளைவாக பதினெட்டாம் நூற்றுண்டில் அரும்பிய உரிமைகள் மலராது கருகிவிட்டன. பல்வேறு போராட்டங் களின் மூலம் சிறிது சிறிதாகத்தான், அடுத்த நூற்று ஐம்பது ஆண்டுகளில், அவற்றை ஆங்காங்கு மக்கள் அடைய முடிந்தது. ஒவ்வொரு நாட்டிலும் வளர்ச்சி ஒவ்வொரு மாதிரி. தனி நபரின் மத சுதந்திரத்தை பத்தொன்பதாம் நூற்றுண் டின் பிற்பகுதியில் ஆட்சேபிப்பாரே இல்லை. தனி நபரின் வோட்டுரிமைக்கும் பொதுப்படையான அங்கீகாரம் கிடைத் தது. தேசிய இனங்கள் சுய நிர்ணயவுரிமையுள்ளவை என்பது வரவர அதிகமாக ஏற்கப்படலாயிற்று. ஆனுல் முதலாளித் துவ அமைப்பின் கீழ் பொருளாதார சுதந்திரத்தையும் சமூக சுதந்திரத்தையும், ராஜீய சுதந்திரமானது உறுதி செய்யச் சக்தியற்றதாகி விட்டது. தொழிலாளரின் வாழ்க்கை, வேலை நிலைமைகள் முன்போலவே மோசமாக இருந்தன. சுரண்டல் கள் நீடித்தன. வேலையில்லாத் திண்டாட்டம் பரவலாக இருந் தது. பெரிய பெரிய தொழில் துறை அமைப்புக்களும், இணைப்புகளும் ஏற்பட்டு, ஒரு சிலரின் சக்தியும் செல்வாககும் அதிகாரமும் பெருகுவதற்குத் தான் தொழில் முறைச் சுதந் திரம் பயன்பட்டது. அவற்றின் விளைவாக தனி நபரின் சுதந்திரங்கள் மேலும் சுருங்கலாயின. பத்திரிகைகளின் சுதந்திரம் பாதிக்கப்பெற்றது. சிந்தனைச் சுதந்திரம் வேக மாகப் பின்னடைந்து பிரசாரப் போர் மேலோங்கி போட்டியை பலப்படுத்தி யுத்தங்களைத் தோற்றுவித்தன.

மக்களின் சிந்தனையைக் கிளறி, மனிதவுரிமைகளைப் பற்றிய கருத்துக்கள் புரட்சிகரமாக மாறுவதற்கு அடிகோலிய இரண்டு நிகழ்ச்சிகள் பத்தொன்பதாம் நூற்றுண்டின் மத்தி யில் நடந்தேறின. மனித வர்க்க வளர்ச்சியைப்பற்றி டார் வின் பிரகாசப்படுத்திய தத்துவம் முதலாவது. மற்றொன்று கார்ல் மார்க்ஸின் புலப்படுத்திய சித்தாந்தம். சாமான்ய மக் கள் புதிய சமுதாய அமைப்பைத் தோற்றுவித்து ராஜீய

பொருளாதார நல்வாழ்வை எல்லோரும் அனுபவிப்பதற்கான வழி தாம் புலப்படுத்தும் கம்யூனிஸ்ட் தரிசனந்தான் என்று கூறினர் அவர். இவ்விரண்டும் புது நோக்கில் அமைந்தன. தனி நபரின் வாழ்க்கை வளர்ச்சியடைந்து மாறிக்கொண்டே போவது போல, மனித சமூகங்களும் மாறுகின்றன. தனி நபர்களும் பல்வேறு கோஷ்டிகளும் இந்த மாறுதல்களால் பாதிக்கப் பெறுகின்றனர். எனவே இடம், பொருள் ஏவலைக் கொண்டுதான் ஆங்காங்குள்ள மனித உரிமைகளை மதிப்பிட இயலும் என்று அவை புலப்படுத்தின. மேலும் வாழ்க்கைச் சௌகரியங்களும், பொருளாதார நிலைமைகளும் மேம்பாடு அடையச் செய்வதை மார்க்ஸீய தத்துவம் விசேஷமாக வற்புறுத்தியது. தொழில்துறை வளர்ச்சிகளும், சமூக-பொருளாதார அமைப்பில் ஏற்பட்டுவரும் பிற மாறுதல்களும் மனித உரிமைகளை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை தொடர்ச்சியாக ஆராய்ந்து, புது வழி முறைகளை உருப்படுத்துவதன் அவசியத்தை அது அறிவுறுத்தியது. தொழில்துறைவளர்ச்சியின் ஒரு முக்கியமான விளைவு போர்ச் சாதனங்களின் சக்தி பிரமாதமாக வளர்ந்திருப்பதுதான். ஆட்சியாளருக்கு எதிராகக் கலகம் செய்வதை முன்னைவிட அதிக சிரமமுள்ளதாகவும் அபாயமானதாகவும் இந்த ஆயுதபல வளர்ச்சி செய்து விட்டது. எனவே மனித உரிமைகளை அடைந்து அநுபவிக்க உலகெங்குமுள்ள சாமான்ய மக்கள் ஒன்றுபட்டு புது முறைகளை வகுத்து நடத்திவைக்க வேண்டுமென மார்க்ஸ் வற்புறுத்தினர். பாட்டாளி மக்கள் புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றி, தமது சர்வாதிகாரத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் புதுமுறையில் மனிதவுரிமைகளை உறுதி செய்யவேண்டும் என்பது மார்க்ஸின் மார்க்கம். ஆனால் 1917 வரை அதற்கு விசேஷ மவுசு ஏற்படவில்லை.

ஜனநாயகத்தை போஷித்து சமாதானத்தை உறுதி செய்வதற்காக மனித உரிமைகளைப் பூவலாக்க வேண்டும் என்ற எண்ணம் முதல் உலக யுத்த இறுதியில் முதல் தடவையாக உருவாகியது. சர்வதேச சங்கம் (League of Nations) இதற்காகத் தோற்றுவிக்கப்பட்டது. பாட்டாளிகளின் வாழ்க்கை,

2

வேலை நிலைமைகள் ஏற்றம் காணச் செய்வதற்கு ஐ எல். ஓ. சர்வதேசத் தொழிலாளர் விவகார முக்கூட்டு ஸ்தாபனம் ஏற்பாடாயிற்று. மனித உரிமைகளை தொகுத்து விரிவாக்க வேண்டுமென்ற ஆவல் ஓரளவு பரவலாக இருந்தது. ஆனால் வேறு சில நிகழ்ச்சிகள் இப்போக்கின் வளர்ச்சியை ஒரு புறம் ஊக்குவித்தன. மற்றொருபுறம் தாமதப்படுத்தின. 1917-ல் ரஷியாவில் கம்யூனிஸ்டுகள் தோற்றுவித்த புரட்சி இவ்வாறு இருவகையான விளைவுகளுக்கும் காரணமாயிருந்தது. இது உலக சரித்திரத்திலேயே மிகப் பெரிய திருப்பங்களில் ஒன்று. உலகில் முதல் தடவையாக பாட்டாளிகள் போரில் அமைந்த இந்த சர்க்காரை முளையிலேயே கிள்ளிவிட மேலை நாடுகள் எவ்வளவோ சாகஸம் செய்து பார்த்தன. ஒரு யுத்தத்தையே நடத்திப் பார்த்தன. அது பலிக்கவில்லை. அந்த சர்க்கார் நிலைத்து விட்டது ஆனால் அதன் உதாரணம் தமது தேசங்களிலுள்ள பாட்டாளி மக்களைக் கவர்ச்சித்து விடலாகாது என்ற கவலையில், சில மேலைநாடுகளிலுள்ள ஆட்சியாளர் மனித உரிமைகளின் விஸ்தரிப்பில் அக்கறைக்குறைவு உள்ளவர்களாக மாறி விட்டனர். அமெரிக்காவானது சர்வதேச ஸ்தாபனத்தில் சேர மறுத்து, உலக விவகாரங்களிலிருந்து 1933-ம் ஆண்டு வரை அடியோடு ஒதுங்கியிருந்தது. இச்சூழ்நிலையில் பிற்போக்குத் தன்மை பல தேசங்களில் வேரூன்றி, மனித உரிமைகளின் வளர்ச்சி பின்னுக்குப் போயிற்று. வெளியுலகின் மொத்தமான பகைமையைத் தாங்க வேண்டி நேரிட்ட ரஷ்யாவிலும் மனித உரிமைகள் விரிவடையவில்லை. பிற நாடுகளுடன் தொடர்பு இல்லாததால் தமது நோக்கம் நிறைவேறச் செய்வதற்கு எந்தக் கொடுமையையும் பயமின்றிப் புரியலாம் என்று அந்நாட்டின் புது ஆட்சியாளர் நினைத்து மக்களின் உரிமைகளை மதியாத சர்வாதிகாரிகளாக நடந்து கொண்டனர். சோவியத் வளர்ச்சி கண்டு எழுந்த முதலாளித்துவ பீதியின் எதிரொலியாக முஸோலினி, ஹிட்லர் ஆகியோரின் சர்வாதிகாரர்களும் ஜப்பானிய ராணுவ ஆதிக்க ஆசையும் பிறந்தன சம்பிரதாயமாகச் சுதந்திர வளர்ச்சியில் அக்கறையுள்ள பிரிட்டன், பிரான்ஸ்

போன்ற நாடுகளில் பாசிஸத்துடன் உடன்பாடு காணும் போக்கு வலுத்தது இதன் விளைவாக, சீனு-ஜப்பான், அபிசீனியா-இத்தாலி யுத்தங்களும், ஸ்பெயினில் உள் நாட்டு யுத்தமும் விளைந்தன மனித உரிமைகள் இந்தச் சூழ்நிலையில் பலவாறுக எங்கும் சுருங்கி விட்டன.

இரண்டு உலக யுத்தங்களுக்குமிடையே ஏற்பட்ட வர்த்தக மந்தத்திஞல் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது ஆனுல் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில், இதனுல் ஏற்பட்ட நிலைமையைச் சமாளிக்க விசேஷ "சமூகப் பாதுகாப்பு" (குறைந்த பட்ச வாழ்க்கை வசதிகளை உத்தரவாதமாக எல்லோருக்கும் அளிப்பது) ஏற்பாடுகள் உருப்பெற்றன. ரஷியாவில் சர்தாரண ராஜீய உரிமைகள் மலரவில்லையாயினும் சக்திக்கேற்ப எல்லோருக்கும் வாழ்க்கை வசதிகளை வரவர அதிகமாக அளித்து வந்தனர் இது மேலைநாடுகளில் ஓரளவு எதிரொலித்தது. தவிர துயரைத் துடைக்கும் பணி எப்பொழுதுமே ஐரோப்பிய நாடுகளில், முக்கியமாக பிரிட்டனிலும் பிரான்சிலும், ஓரளவு ஜெர்மனியிலும், வட ஐரோப்பிய நாடுகளிலும் பெரிதாகவே மதிக்கப்பட்டு வந்துள்ளது. எனவே அங்கெல்லாம் வேலையில்லாதாருக்கு ரொக்க உதவி, வயோதிகருக்கு உபகாரச் சம்பளம், இலவச வைத்திய வசதி, கட்டாயக் கல்வி முறை, ஜாகை வசதியளிப்பது ஆகியவை ஆட்சியாளர் உறுதி செய்யவேண்டிய குறைந்த பட்சப் பொறுப்புக்களாகக் கருதப்பட்டன. ஏதோ கருணையிஞல் அளிக்கும் உதவியாக இராமல், மனித உரிமையாக அவை கிடைக்க வேண்டியவை என்ற எண்ணம் தொழிலாளரிடையே மட்டுமின்றி கன்ஸர்வேட்டிவ் கட்சிகளிடையேயும் பரவிக் காணப்பட்டது.

அமெரிக்காவில் 1933-ல் பிராங்கிளின் ரூஸ்வெல்ட் ஜனுதிபதியானவுடன் மனித உரிமைகளுக்கு முதலிடம் தரும் தாராள நோக்குள்ள புதுச் சட்ட திட்டங்கள் உருவெடுத்து வேகமாக அமுலாயின. இன்றைய அமெரிக்க தொழில் துறை வாழ்க்கையின் உயர்நிலைகளுக்கு அவர்தான் பெரும்

பாலும் காரணம். ரஷியாவின் சாதனைகள் அமெரிக்காவில் இந்தக் கடமையுணர்ச்சியை ஓரளவு ஊக்குவித்திருப்பது உண்மையே. ஆனால் காரணம் ஏதுவாக இருந்தாலும், மனிதன் வாழ உரிமையுள்ளவன், சந்தோஷமாகவும் சுகமாகவும், வசதியுடனும் வாழ உரிமையுள்ளவன் என்பதைக் கொள்கையில் ஒப்புக்கொண்டு, மனித உரிமைகளில் பொருளாதார நல உரிமைகளையும் ரூஸ்வெல்ட் சேர்த்தது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகி விட்டது.

சோவியத் நடைமுறை எவ்வாறு இருந்தபோதிலும், இந்நாட்டு அரசியல் சட்டத்தில் ஒரு புதிய தத்துவத்தையும் நடைமுறையையும் சேர்த்தார்கள். தனிப்பட்டவர்களின் லாபத்துக்காக மக்கள் சுரண்டப்படலாகாது என்பதே அந்த நியதி. அது பிறகு பல தேசங்களில் வெவ்வேறு அளவிலும் வகைகளிலும் வழக்கத்துக்கு வந்துவிட்டது. மேலும் ஒன்றின்பின் ஒன்றாக பல ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கி நடத்தி வைத்ததன் மூலம், முன்கூட்டியே திட்டமிட்டு சுபிட்சத்தையும் உரிமைகளையும் வளர்க்கமுடியும் என்ற உண்மையையும் சோவியத் யூனியன் உலகிற்குப் புலப்படுத்தியது.

சோவியத் ஆட்சியின் வேறு இரண்டு மனப்பான்மைகள் மனித உரிமை வளர்ச்சிக்குத் துணைபுரிந்தன. இனம், மதம், பிறப்பிடம், மொழி போன்ற காரணங்களால் மக்களிடையே பாகுபாடு செய்யலாகாது என்று அங்குதான் முதன்முதலாக விதி செய்தார்கள். அதே சமயத்தில் பல்வேறு இன மொழி, மதப் பிரிவினர் எல்லா வகைகளிலும் வளர்ச்சி காண்பதற்கு உரிமையுள்ளவர்கள் என்பதையும் அங்கீகரித்து இயன்ற வசதிகளை அங்கு செய்து கொடுத்தனர். தேசிய இனங்களுக்குச் சுயநிர்ணய உரிமை என்பது இவ்வகையில் வழங்கப் பெற்றது என்று கூறலாம். சாதாரண ஜனநாயக வாழ்க்கையில் மலராத சில உரிமைகள் இவ்வாறு சோவியத்தில் உருப்பெற்றன.

எந்த தேசமக்களும் அடிமையாக இருக்கலாகாது, எல்லோருமே சுதந்திரத்துக்கு உரிமையுள்ளவர்கள் என்பதை ஒப்புக்

கொண்டு, சோவியத் ஆட்சியாளர் ஆரம்பத்திலிருந்தே செயல் பட்டு வந்திருக்கின்றனர். அது பிற மக்களை அடிமை நிலை யில் வைத்து ஆண்டு வந்த மேலை நாடுகளுக்கு உபத்திரவ மாக இருந்து வந்தது. ஆனாலும் ஒரு புறம் ரஷியாவும் மற்றொரு புறம் அமெரிக்காவும் அடிமை நாடுகளின் விடு தலைக்கு அளித்து வந்த ஆதரவானது நாளடைவில் நற்பயனை விளைவித்தது இரண்டாவது உலக யுத்தம் தோற்றுவித்த ராஜீய, ராணுவ, பொருளாதார மாறுதல்களும், பல்வேறு தேசிய விடுதலை இயக்கங்களின் பணியுமாகச் சேர்ந்து, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலையைச் சாத்திய மாக்கின.

இரண்டாவது யுத்தகாலத்தில் அநேகமாக எல்லா தேசங் களிலும் மனித சுதந்திரங்களும் உரிமைகளும் பல்வேறு வகைகளில் விலங்கப்பட்டன என்பது உண்மையே. புரட்சிக் காலங்களிலும் கலகங்கள் நிகழும்போதும் இவை பெரிதும் பாதிக்கப் படுகின்றன. ஆனாலும் இரண்டாவது உலக யுத்தகாலத்தில் உழைப்பாளருக்கு வாழ்க்கை, வேலை நிலைமைகள் விஷயமாக பல புதிய உரிமைகள் கிடைத்தன. பழைய உரிமைகள் விரிவாயின. தொழிலதிபர்கள் தமது இஷ்டப்படி நிர்வாகத்தை நடத்தலாகாது; அதை ஒழுங்கு செய்யும் அதிகாரம் ஆட்சியாளருக்கு உண்டு என்ற கொள்கை எல்லா தேசங்களிலும் உறுதிப் பெற்றது. அத்துடன் கூட, ரஷியாவைத் தொடர்ந்து பல்வேறு தேசங்களில் அபிவிருத் தித் திட்டங்களைத் தயாரித்து சுபிட்சத்துக்கு உழைக்க முற்பட்டனர். பல் வேறு வகைகளில் தொழில் துறையினர், தொழிலாளர், வர்த்தகர், விவசாயிகள் போன்றோருக்கு இருந்து வந்த வரம்பற்ற உரிமைகள் பல்வேறு ஒழுங்கு முறைகளின் கீழ் வந்தன. இம்மாதிரி ஒழுங்கு செய்வது அவசியம், சகஜம் என்ற கருத்து பரவலாயிற்று.

அடிப்படையான உரிமைகளைப் பறிக்காமல், தனி மனி தனது கண்ணியத்துக்குக் குறைவு இல்லாமல், தரும நியா யம் தவருதபடி நல்வாழ்வை எல்லோருக்கும் அளிக்கக்கூடிய

புது சமுதாய அமைப்பைத் தோற்றுவிப்பதுதான் இன்றைய உலகின் மகத்தான பிரச்னை. கம்யூனிசம், சோஷலிஸம், முதலாளித்துவம் ஆகிய மூன்று வகை சித்தாந்தங்கள் இன்றைய உலகில் மக்களை ஈர்க்கின்றன. இவையெல்லாமே பொருளாதார வாழ்க்கையை ஒழுங்குமுறை செய்வதன் அவசியத்தை ஒப்புக்கொள்கின்றன. ஆனல் எந்த அளவுக்கு தனிப்பட்டவர்களின் உரிமைகளை இந்த நோக்கத்துக்காகக் கட்டுப்படுத்தலாம் என்பதைப்பற்றித்தான் கருத்து வேறுபாடுகள். எல்லாமே க்ஷேமநல அரசாங்க அமைப்பையே நோக்கமாகக் கொண்டிருப்பவையாகையால் மூன்று வகைகளின் நடைமுறைகளில் ஒற்றுமை யம்சங்கள் பலவற்றைக் காணலாம். தவிர இந்த தத்துவார்த்த வேறுபாடுகள் உண்மையில் இன்றைய உலகில் பொருள் படைத்தவை தாமா என்று சந்தேகிப்போர் நிறைய இருக்கிருர்கள். சிறந்த மனிதாபிமானத்துடன் கூடச் செயலாற்றும் பண்பு பெரும்பாலோரிடம் இன்று பரந்து காணப்படுகிறது. எனவே மக்களில் பெரும்பாலோரின் சம்மதத்தைப் பெற்று, தனி நபரின் உரிமைகளுக்கு மதிப்புத் தரும் பொருளாதாரப் புரட்சியை தோற்றுவிக்க முடியும் என்ற நம்பிக்கை உலகில் வலுத்து வருகிறது. ஆனல் ஒரு சில ஆண்டுகளில், அதுவும் தமது ஆயுட்காலத்திலேயே இந்த நோக்கம் நிறைவேற வேண்டும் என்ற ஆசையில், வேகமான தேசிய அபிவிருத்தியின் பெயரால் தனி மனித உரிமைகளை இரண்டாம் பட்சமாக மதிக்கும் தலைவர்களுக்கு இன்றைய உலகில் பஞ்சமில்லை. நம் தேசத்திலும் இந்தப் போக்கு வலுத்து வருவதைக் காண்கிறோம். ரஷ்யாவில் கெடுபிடி சிறிது குறைந்து வருகிறது; ஆனல் சீனவில் வலுத்து வருகிறது. இஸ்லாமிய உலகெங்கும் சர்வாதிகாரம் சென்ற சில ஆண்டுகளில் பரவி வந்துள்ள விதம் மனித உரிமைகளை மதிப்போருக்கு விசேஷ கவலையைத் தருகின்றன. ஆப்பிரிக்காவில் வியாபித்து வரும் விடுதலை இயக்கம் நல்லபடியாக உருப்பெற்று சாமான்ய மக்களின் உயர்வுக்குத் துணைபுரிய வேண்டுமாயின் அதிக அனுபவமுள்ள ஆசிய நாடுகள், குறிப்பாக இந்

தியா எப்படிச் செயலாற்றுகின்றன என்பது விசேஷ முக்கியத்துவம் அடைகிறது. நமது அரசியல் கட்சிகளும் ஆட்சியாளரும் செயல்பட்டுவரும் விதம் கவனிக்கத் தக்கது. மனித உரிமைப் பிரகடனம் என்ற உரைகல்லின்தான் அவற்றின் சொல்லையும் செயலையும் மதிப்பிட்டுப் பார்க்கவேண்டும். தெரிந்தோ, தெரியாமலோ இந்தியாவானது இப்போதைய தலைமையின் கீழ் கம்யூனிஸத்தை நோக்கி விரைகின்றது என்று நினைப்போர் பலர் இருக்கிறார்கள். நாம் பின்பற்றும் வழி பிற ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளை முக்கியமாகப் பாதிக்கக் கூடியது. எனவே இங்கு பிரத்தியட்ச உணர்வுடன், மனித உரிமைகளை மதித்து பொருளாதார நல்வாழ்வுக்காக எல்லோரும் செயல்பட வேண்டியது முதன்மையாகிறது. சமுதாய வளர்ச்சியின் பகுதியாக தனிமனிதனது வாழ்க்கையை வளமுள்ளதாகச் செய்வதற்கு அரசாங்கத்துக்குள்ள தலையாய பொறுப்பை இந்தியா போன்ற கீழ்த்திசை நாடுகள் ஒப்புக்கொள்கின்றன. அதே சமயத்தில் தெய்வ பக்தியும் அருளும் இருந்தால்தான் தரும நியாய உணர்ச்சி ஓங்கும்; தனி நபர்கள் அறவழி நின்று பணியாற்றினால்தான் சமுதாயம் ஏற்றம் காண முடியும்; எனவே மனித உரிமைகள் இந்த அடிப்படைகளை அங்கீகரிப்பவையாக இருக்க வேண்டும் என்று காந்திஜியும் இந்தியத் தத்துவதாரிகள் பலரும் கருதுகின்றனர். இதுவும் மனித உரிமை பற்றிய கருத்துக்களை உருவாக்குவதில் ஓரளவு செல்வாக்குப் பெற்றுள்ளது என்று கூறலாம்.

தவிர மனிதன் சிருஷ்டித்துள்ள 'ஹைடிரஜன் குண்டு என்ற சர்வநாச ஆயுதம் புதிய பிரச்னைகளைத் தோற்றுவித்துள்ளது. உலக நாடுகளிடையே நல்லெண்ணமும் ஒத்துழைப்புணர்ச்சியும் வளர்ந்து, நல்லிணக்கம் வலுத்து, தகராறுகள் சுமுகமாகத் தீர வழி கண்டாலன்றி, மூன்றாவது உலக யுத்தம் வந்து மனித வர்க்கம் பூராவையுமே அழித்துவிடக்கூடிய அபாயம் உண்மையானது. எனவே அவை ஒன்று சேருவதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிப்பது

பிரதான பிரச்னையாகிவிட்டது. மனித உரிமைகளைத் தெளிவாக்கி, உலக வியாபகமாக்குவது இதற்கு உதவுபடியான முயற்சி என்று கொள்ளலாம்.

பிரகடனத்தின் தோற்றுவாய், அதிலுள்ள ஷரத்துக்களின் விமரிசனம், அதில் செப்பியுள்ள உரிமைகளை அமுலாக்க ஐ.நா.வும் அதன் துணை அமைப்புக்களும் செய்துள்ள, செய்து வருகின்ற பணிகள், பல்வேறு தேசங்களில் இந்த உரிமைகளுக்குத் தரப்பட்டுள்ள மதிப்பு, பிரகடனத்துக்கு ஏற்பட்டுள்ள நேரடியான, மறைமுகமான செல்வாக்குகள், இந்த உரிமைகள் புறக்கணிக்கப்படும் இடங்களும் வகைகளும், இந்தப் பிரகடனம் உலகின் எதிர்காலப் பிரச்னைகளைத் தீர்க்க உதவுபடியாக இருக்குமா என்ற ஆராய்ச்சி, பிரகடனத்தின் வாசகம் ஆகியவை இந்தச் சிறு நூலில் இடம் பெற்றுள்ளன.

சிக்கலான இந்த வரலாற்றை இங்கு சுருக்கமாக விமரிசனம் செய்ய என்னைப் பணித்ததற்காக தென்னிந்திய மொழி நூல்களின் டிரஸ்டுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். இதற்கு கருத்துச் செறிவுள்ள அணிந்துரையை வழங்கி சிறந்த யோசனைகளையும் கூறிய ஸ்ரீ எம். அனந்தநாராயணனுக்கு நான் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்.

சென்னை
20-6-1959

ஏ. ஜி. வேங்கடாச்சாரி

# 1. உரிமைகள் ஏன்?

கடவுளின் படைப்புக்களில் மனிதனே மிகச் சிறந்தவன். மனிதனுகப் பிறந்தவன் நன்ருக வாழ வேண்டியவன் வாழ்வு செம்மையாக அமைவதற்குச் சில உரிமைகளும் சுதந்திரங்களும் இன்றியமையாதவை. இவற்றுடன் அவனுக்குச் சில கடமைகளும் உண்டு. ஒவ்வொரு தேசத்திலும் சட்டத்தின் மூலம் இவற்றை வரையறுத்திருக்கிருர்கள். ஆனுல் எல்லாவற்றிலும் இவை ஒரே மாதிரியாக அமையவில்லே. வேறுபாடுகளுக்குக் காரணம் அந்தந்த நாட்டின் வரலாற்றுப் போக்குகள்தாம். ஆயினும் மனிதன் விலங்கு போல இல்லாமல் மனிதனுகவே வாழ உரிமையுள்ளவன் என்பதை நீதிமான்கள் உலகெங்கும் எல்லா நாடுகளிலும் ஒப்புக்கொண்டுள்ளனர். இதுதான் மனித உரிமை எனப்படுவது. இதில் எவையெல்லாம் அடங்கியுள்ளன என்பதை உலக சரித்திரத்திலேயே முதல் தடவையாக நிர்ணயித்து, கோர்வையாக இணைத்து ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை மனித உரிமைப் பிரகடனமாக உருவாக்கியுள்ளது. ஐ.நா. வில் அங்கம் வகிக்கும் நாடுகளெல்லாம் இதை ஒருமனதாக ஏற்றுக்கொண்டுள்ளன. இதற்கு இசைவாக நடந்து கொள்வதை நோக்கமாகக் கொண்டுச் செயலாற்றுவதாக அவை வாக்களித்துள்ளன. இன்றைய நடைமுறைகள் சில, பல வகைகளில் மாறுபட்டிருந்தாலும் இந்தப் பிரகடனத்தில் செப்பியுள்ள மனித உரிமைகளே அமுலாக்குவதாக அவை ஏற்றுக்கொண்டிருப்பதே பொருள் படைத்தது.

ஐ.நா. பிரகடனம் செய்துள்ள மனித உரிமைகள் யாவை என்பதை ஒவ்வொரு நாட்டிலும் எல்லோரும் தெரிந்தறிவது அவசியம். அவைதாம் ஜனநாயகத்துக்கு உரைகல்லாக இருப்பவை. சர்க்காரின் ஒவ்வொரு செயலேயும் அதன் அடிப்படையில்தான் மக்கள் மதிப்பிடுவர். அந்த நிலேயில்தான் அவற்றிற்கு இசைவாக இடைவிடாது தாம் நடந்து கொள்ள

வேண்டிய பொறுபபு இருப்பதை ஆட்சியாளரும் போதிய வாறு உணருவர். ஆகையால்தான் இந்தப் பிரகடனத்தில் கூறியுள்ள மனித உரிமைகள் யாவை என்ற தகவலைப் பிரகாசப்படுத்தவும், கல்வித் திட்டத்திலேயே சேர்த்துப் போதிக்க வேண்டும் என்றும் எல்லா தேசங்களையும் ஐ. நா. அசெம்பிளி பணித்திருக்கிறது.

உரிமை என்ற சொல்லுக்கு பாத்தியதை என்று பொருள். பாத்தியதை என்பது கேட்காமலேயே எவருடைய தயவையும் பொறுத்திராமல் தானாகவே கிடைக்கவேண்டியது எனப் பொருள்படும். எனவே மனித உரிமைகள் எனப்படுபவை ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் எங்கிருந்தாலும் கிடைத்தாக வேண்டியவை. இடம், காலம், நிறம், சூழ்நிலை பிறப்பு போன்ற எந்தக் காரணத்தாலும் இந்த உரிமைகளில் எதையும் எவருக்கும் மறுக்கலாகாது. மனிதன் கண்ணியத்துடன் வாழ்க்கையை நடத்தி, தனக்குள்ள இயல்புகள் எல்லாம் முழு வளர்ச்சி காண்பதற்கு இந்த உரிமைகள் மிக மிக அவசியம் என்று கருதப்படுகிறது. இது ஒவ்வொருவருக்குமுள்ள மனிதப் பிறப்புரிமை. எனவே இதற்கு இலக்கணம் கூறியிருக்கிறது ஐ. நா. ஸ்தாபனம்.

மனித உரிமைகள் எனப்படுபவை உண்மையில் உலகிற்குப் புதியவையல்ல. உலகம் தோன்றிய நாள் முதல், ஒவ்வொரு சமுதாயத்திலும் இத்தகைய உரிமைகளையும் கடமைகளையும் சேர்த்து காலநிலைக்கேற்ப வரையறுத்து அமுல் நடத்தி வந்திருக்கிறார்கள். தனி நபரின் உரிமை கடமைகள், அரசாங்கத்தின் உரிமைகளும் பொறுப்புக்களும், பல்வேறு பிரிவினரிடையே இருந்து வர வேண்டிய உறவு முறைகள் என்றெல்லாம் விளக்கமாக நிர்ணயமாகி அமுலாகி வந்திருப்பதை வரலாறு கூறும். நமது தேசத்தில் 'தருமம்' என்ற பொதுத்தலைப்பின் கீழ், இவற்றைப் பல அறிஞர்களும் நிபுணர்களும், தமது கால நிலைக்கும் எதிர்கால நல்வாழ்வின் தேவைக்கு மேற்ப, அவ்வப்பொழுது தொகுத்து பிரகாசப் படுத்தி விளக்கம் கூறி வந்துள்ளனர். சீனு, கிரீஸ், ரோம்

முதலியவற்றிலும், பிறகு பல்வேறு சமுதாயங்களிலும் உரிமைகளின் வரையறைப்பணி தொடர்ச்சியாக நடந்து வந்திருக்கிறது.

மனித உரிமைகள் எனப்படுபவை சாசுவதமானவையா? அல்லது மாறும் தன்மையுடையனவா? பழைய உரிமைகள் மாறி புதிய உரிமைகள் உருப்பெறுகின்றனவா? இது ருசிகரமான கேள்வி. விரிவான அடிப்படைகள் சம்பந்தப் பட்டவரை மாறுதல் இல்லையென்று கூறலாம். ஆனல் அவ்வப்பொழுதுள்ள சூழ்நிலைக் கேற்ப அவற்றிற்கு விளக்கம் தரவேண்டிய அவசியம் இருந்துவந்திருக்கிறது. அரசாங் கத்துக்கும் தனி நபருக்குமுள்ள உறவுமுறையைப் பற்றிய வெவ்வேறு கருத்துக்கள் இந்த நூற்ருண்டில் பலவாருகக் கிளைத்துள்ளன. "அரசாங்கமே பிரதானம்; அதன் கட்டளை களை நிறைவேற்றி வைக்கும் உறுப்பாகத் தான் மனிதன் செயல்பட வேண்டும் அவனது உரிமை, கடமைகள் இதற்கு இசைவாகத்தானிருக்க முடியும்" என்ற பேச்சு அடிக்கடி காதில் விழுகிறது. பெரும்பாலான மக்களுக்கு நல்வாழ்வை உறுதி செய்வதற்காக சமுதாய அமைப்பையே மாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் பாடுபடுகிறவர்கள், இந்தக் கருத்தை வெகுவாகக் கொண்டுள்ளனர். எல்லோருக்கும் நல் வாழ்வை உறுதிசெய்ய வேண்டியதன் அவசியத்தை இன்று உலகில் மறுப்பார் இல்லை ஆனல் தனி நபரின் கண்ணியத் துக்கும் உரிமைகளுக்கும் முழு வளர்ச்சிக்கும் பூரா மதிப்புக் கொடுத்து இந்தப் பணியை நிறைவேற்றி வைக்க முடியும். அப்படி செய்து வைப்பதுதான் நிலையான நற்பயனைத் தரும் என்பது மற்ருெரு சாராரின் வாதம். இந்த இரண்டு விதக் கருத்தினரின் ஆதிக்கத்திலுள்ள தேசங்கள் ஐ.நா.வில் இடம் பெற்றுள்ளன. இவையெல்லாமாகச் சேர்ந்துதான், மனித உரிமைப் பிரகடனத்துக்கு இசைவு கூறியுள்ளன. எனவே தமது சமுதாய அமைப்பின் தனித் தன்மைகள் மனித உரிமை களுக்கு முரணானவையல்ல என்று இரு சாராரும் பொதுப்படை யாகக் கருதுவதாகத்தான் இதிலிருந்து ஏற்படுகிறது. இந்தப்

பிரகடனத்தை தமது மக்களுக்கு விளக்கமாய் எடுத்துரைப்ப தாக எல்லா தேசங்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இது சரிவர நடக்குமாயின், அந்தந்த நாட்டின் நடைமுறைக்கும், பிரகடனத்தில் குறிபபிட்டுள்ள லட்சிய நிலைக்குமிடையே உள்ள இடைவெளியை மக்கள் நன்கு அறிந்து கொண்டு, அதைச் சுருக்கி, உரிமைகள் வேகமாக மலரச் செய்வதில் அக்கறை காட்டத் துணிவர் என்று எதிர்பார்க்கலாம். லட்சிய நிலை என்னவென்று இலக்கணம் கூறும் பணி எப்பொழுதும் முந்திக் கொள்ளத்தான் செய்யும்; நடைமுறையானது அதற்கு இசைவாக உருப்பெறுவது எப்பொழுதும் சற்று பின்தங்கித் தான் இருக்கும். இது உலகப் போக்கு. நடைமுறையின் மந்த கதிலட்சியத்தின் சிறப்பைக் குறைத்துவிடாது. எனவே மனி தன் உயர்பிறவி; வாழ உரிமையுள்ளவன். கண்ணியமாக நடத்தப்பட வேண்டியவன்; சுதந்திரமாகச் செயலாற்றவேண் டியவன், பிறரது நலன்களையும் உரிமைகளையும் மதித்துப் பணிபுரிய வேண்டியவன். இவற்றிற்கு வரம்புகள் உண்டு என் பதை அங்கீகரித்து, அந்த அடிப்படையில் எல்லா நடவடிக்கை களும் எல்லா தேசங்களிலும் உருப்பெறுவதன் அவசியத்தைப் புலப்படுத்துகிறது ஐ. நா. பிரகடனம்.

# 2. வரலாறு

மனித உரிமைப் பிரகடனம் உருவான வரலாறு மிக ருசிகரமானது. சாமான்ய மக்கள் ஒவ்வொரு நாட்டிலும் இன்பத்துடன் கூடிய நல்வாழ்க்கை நடத்தக் கூடியபடி அரசாங்கம் உழைக்க வேண்டும்; அதற்கு வழி செய்தால் தான் வாழ்க்கையில் நிம்மதி இருக்கும், அந்த நிலையில்தான் போரில் அவர்களை எவராலும் கண்மூடித்தனமாக ஈடுபடுத்த முடியாது. எனவே எல்லா மக்களின் க்ஷேம நலனை உறுதி செய்வது அரசாங்கப் பணிகளில் முதன்மையாக இருக்க வேண்டும் என்ற கருத்து, முதல் உலக மகா யுத்தத்துக்குப் பிறகு கையெழுத்தான வெர்ஸை உடன்படிக்கையில் பொதுப் படையாகக் கூறப்பட்டது. இந்தக் கருத்து செயலாக உருப் பெறுவதற்காகத்தான் ஐ. எல். ஓ. என்று சர்வ தேச தொழி லாளர் விவகார அமைப்பு ஏற்பாடாயிற்று. சர்க்கார், முத லாளிகள், தொழிலாளர் ஆகிய மூன்று தரப்பினரும் தத்தம் தேசத்துக்குள் சேர்ந்து ஒத்துழைத்து இந்த நற்பணியை நடத்தி வைக்க வேண்டும் என்பது அதன் பிரதான நோக்கங் களில் ஒன்று. அதே மாதிரி ஒவ்வொரு நாட்டிலிருந்தும் முத் தரப்பினரின் பிரதிநிதிகள் ஒவ்வொரு ஆண்டும் ஜினிவாவில் கூடி தொழிலாளர்-நல உடன்பாடுகளை உருவாக்கி, அவற்றை எல்லா தேசங்களும் ஏற்று நடத்தி வைக்கும்படி கோரினர். இந்த முறை வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு அளவில் பயனளித்தது. ஆனால் பலர் எதிர்பார்த்தபடி இதன் மூலம் சாமான்ய மக்கள் எல்லோரின் க்ஷேம நலனையும் உறுதி செய்ய இயலாது போயிற்று. முக்கிய காரணங்கள் ஐந்து. (1) ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகள் விலகிச் சென்று விட்டதால் ஐ. எல். ஓ.வின் செல்வாக்குக் குறைந்தது. (2) அடிமை நிலையில் பல தேசங்கள் இருந்து வந்தன. அவற் றில் இந்த வசதிகளைச் செய்துகொடுப்பதில் ஆதிக்க நாட்டி னர் போதிய அக்கறை காட்டவில்லை. (3) தொழில் துறை யில் வளர்ச்சி இல்லாத தேசங்களில் ஆலைத் தொழிலாளர் ஜன

சமூகத்தில் மிகக் குறைவான விதாசாரத்தினர்தாம். எனவே அவர்கள் விஷயத்தில் செய்த நலன் சமூகத்தின் பிற பகுதிகளை எட்டாமல், கடலில் கரைத்த பெருங்காயமாயிற்று. (4) தொழில்கள் நிறைய இருந்தும் போதிய செல்வ வசதியோ, ராஜீய செல்வாக்கோ இல்லாத காரணத்தால் அனுகூலங்கள் துரிதமாகக் கிட்டவில்லை. (5) 1929 முதல் சில வருஷங்கள் நீடித்த வர்த்தக மந்தம் ஐ. எல். ஓ. சிபாரிசுகளின் அமுலை அசாத்தியமாக்கியது. பிறகு ஹிட்லரின் அறைகூவலும் யுத்த நெருக்கடியும் பிறகு யுத்தமும் வந்து இத்திசையில் அபிவிருத்தியை அரிதாக்கி விட்டன.

யுத்தத்தின் போதும் அதற்குப் பிறகுந்தான் சாமான்ய மக்களின் வாழ்க்கையை வளமுள்ளதாக்கினாலன்றி சமாதானம் உறுதிப்படாது என்பதை உலக ராஜதந்திரிகள் புரிந்து கொண்டனர். ரஷியாவின் புது சமுதாய அமைப்பும் இந்தக் கருத்துக்கு வேகத்தைக் கொடுத்தது. முதல் உலக யுத்தத்தின் விளைவாக சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் நாடாயிற்று. இரண்டாவது உலக யுத்தத்தைத் தொடர்ந்து மேலும் பத்து தேசங்கள் அந்த சமூக அமைப்பை ஏற்றுக் கொண்டுவிட்டன. அந்தப் போக்கு நீடிக்காமல் தடுத்து நிறுத்த வேண்டுமாயின் வளமான வாழ்க்கை வெறும் ஏட்டுடன் நில்லாமல் பரவலாக நடைமுறைக்கு வரவேண்டும் என்று பரவலாக பிறநாடுகளில் உணரலாயினர். கம்யூனிஸ்ட் நாடுகள் முக்கியமாக வாக்களித்தது துரிதமான பொருளாதார மேம்பாடு. அது அவசியமே. ஆனால் ஜனநாயக வாழ்வு முழு மலர்ச்சி காணவேண்டுமாயின் ராஜீய, பொருளாதார, தார்மிக, ஆத்மீக உரிமைகளெல்லாம் ஒருங்கே இணைக்கமாகச் சேர்க்கப்பட்ட உரிமைச் சாஸனம் தேவை என்பதைப் பலர் உணர்ந்தனர்.

**1945-ம்** ஆண்டில் ஐ. நா. சாஸனம் **(U. N. Charter)** கையெழுத்தாயிற்று. யுத்தம் வராமல் தவிர்த்து, சமாதானத்தை உறுதி செய்வதுதான் அதன் பிரதான நோக்கம். மனித உரிமைகளை நிர்ணயித்து, அவற்றிற்குப் பாதுகாப்புத்தந்து, வளமுள்ள நல்வாழ்க்கைக்கு வழிகாண்பதுதான் உண்மையில்

முக்கியமான சமாதான சேவை என்று பலர் கருதினர். இதற்காக மனித உரிமைக் கமிஷனை நியமிக்குமாறு பொருளாதார சமூக கவுன்சிலை ஐ நா. அசெம்பிளி கேட்டுக்கொண்டது. யுத்தகாலத்தில் யு. எஸ். ஜனாதிபதியாக இருந்து தமது சீரிய மனிதாபிமானத்தால் உலக மக்களைப் பெரிதும் கவர்ந்த ரூஸ்வெல்டின் மனைவியாராகிய ஸ்ரீமதி எலினர் ரூஸ்வெல்டின் தலைமையில் பதினெட்டு பேர்கொண்ட கமிஷன் அமைக்கப் பெற்றது.

மனித உரிமைப் பிரச்னை மூன்று அம்சங்கள் கொண்டதாக இருக்கவேண்டும் என்று அக்கமிஷன் முடிவு செய்தது. (1) மனித உரிமைப் பிரகடனம். (2) மனித உரிமைகள் பற்றிய உடன்பாடு. (3) அவற்றை அமுல் செய்வதற்கான நடவடிக்கைகள். மனித உரிமைகளைப் பற்றிய பொதுக் கொள்கைகளையும் அவற்றின் தன்மையையும் பிரகடனம் தெளிவாக்க வேண்டும்; திட்டவட்டமாக உரிமைகளைச் செப்பி செயல் படுவதுபற்றிய வரம்புகளை உடன்பாடு விளக்க வேண்டும்; மனித உரிமைகள் சரிவர அமுலாவதற்கான நடவடிக்கைகளில் அதற்கான சர்வதேச ஸ்தாபன அமைப்பையும் சேர்த்து வழி செய்ய வேண்டும் என்று முடிவாயிற்று.

பிறகு ஐ. நா. பொதுச் சபை கூடி ஒரு உடன்பாட்டிற்குப் பதிலாக இரண்டு தனித்தனி உடன்பாடுகள் தேவை என்று முடிவு செய்தது. பிரஜா (சிவில்) உரிமைகளையும் ராஜீய உரிமைகளையும் பற்றி ஒன்று, பொருளாதார, சமூக, கலாச் சார உரிமைகளைப்பற்றிய உடன்பாடு ஒன்று தனித்தனியாக ஏற்படுவதுடன், அமுல் செய்வதற்கான நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் தனித்தனியாக இடம் பெற வேண்டும் என்று முடிவாயிற்று.

கமிஷன் 1947, 1948 ஆண்டுகளில் கூடி பிரகடனத்தைத் தயாரித்தது. அதை இறுதியாக 1948 டிசம்பர்மீ 10வ ஐ. நா. பொதுச்சபை ஒப்புக்கொண்டது. (பிரகடனத்தின் வாசகம் தனிக் குறிப்பாகக் கடைசியில் சேர்க்கப்பட்டுள்ளது).

# 3. பிரகடனம்

## ஒரு விமரிசனம்

மனித உரிமைப் பிரகடனத்தில் முப்பது ஷரத்துக்கள் உண்டு. முதல் இரண்டிலும் கடைசி மூன்றிலும் பொதுக் கொள்கைகளைக் காணலாம். 3 முதல் 21-வரையுள்ள ஷரத்துக்களில் ஒவ்வொரு நபரின் தனியுரிமை, பிரஜா உரிமை, ராஜீய உரிமைகள் விளக்கப்பட்டுள்ளன. 22 முதல் 27 வரையுள்ள ஆறு ஷரத்துக்களில் பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் விளக்கப்பட்டுள்ளன.

சில அடிப்படை கொள்கைகளை முதல் ஷரத்தில் காணலாம். எல்லா மனிதர்களும் சுதந்திரர்கள். ஒரே மாதிரி கண்ணியமும் உரிமைகளும் உள்ளவர்கள் என்று அது கூறுகிறது. பகுத்தறிவும் மனச் சாட்சியும் உள்ளவர்களாகையால் மனிதர்கள் ஒருவர்பால் ஒருவர் சோதரப் பான்மையில் நடந்துகொள்ள வேண்டியவர்கள் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. இந்த ஷரத்தில் இரண்டு முக்கியமான கோட்பாடுகளை காணலாம். (1) சுதந்திரமும் சமத்துவமும் மனிதனது பிறப்புரிமை. அவை பராதீனம் செய்யக் கூடாதவை. (2) மற்ற சிருஷ்டிகளைப்போல் மனிதன் இல்லாமல், பகுத்தறிவும் அறவுணர்ச்சியும் படைத்தவன். சம அடிப்படையில், எவ்விதப் பாகுபாடுமின்றி எல்லோருக்கும் மனித உரிமைகள் கிடைக்கச் செய்வதை ஐ.நா.விலுள்ள மெம்பர் நாடுகளின் கடமையாக்குகிறது இரண்டாவது ஷரத்து. சுதந்திர நாட்டுமக்களுக்கு மட்டுமில்லாமல் அந்நிய ஆதிக்கத்தில் இருக்கும் தேச மக்களுக்கும் தருமகர்த்தப் பொறுப்பில் இருந்துவரும் மக்களுக்கும் இந்த உரிமைகள் உரித்தானவை என்பதை இந்த ஷரத்துத் தெளிவுப்படுத்துகிறது.

### சொந்த, பிரஜா, ராஜிய உரிமைகள்

சொந்த, பிரஜா, ராஜீய உரிமைகள் 3 முதல் 21வரையுள்ள ஷரத்துக்களில் விவரிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான தேசங்

களது அரசியல் சட்டங்களில் ஏற்கனவே இவை' இடம் பெற்றுள்ளன.

சுதந்திரமாக, நிம்மதியாக வாழ ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு என்று மூன்றாவது ஷரத்துக் கூறுகிறது. இதுதான் "சொந்த" உரிமைகளில் முதன்மையானது. யாரையும் அடிமையாக அல்லது அடிமை நிலையில் வைத்திருக்கலாகாது என்று அடுத்த ஷரத்துச் சொல்லுகிறது. எவரையும் சித்திர இம்சை செய்யலாகாது, கொடுமைப்படுத்தக்கூடாது, மனிதத் தன்மைக்கு மாறுபட்ட வகையில் இழிவு படுத்தலாகாது என்று அடுத்த ஷரத்து பணிக்கின்றது. பிறந்து உடலை மட்டுமின்றி உள்ளத்தையும் மதித்துச் செயலாற்றுவதுதான் மனிதப் பண்பு என்பதை இந்த மூன்று ஷரத்துக்களும் அறிவுறுத்துகின்றன.

சட்டப்படியான ஆட்சி நடைபெறச் செய்வதன்மூலம் தற்கால. உலகில் மனித உரிமைகளுக்கு அரசாங்கங்கள் பாதுகாப்புத் தருகின்றன. ஒவ்வொருவனும் ஒரு தனித் தன்மையுள்ள புருஷன் என்று சட்டம் அங்கீகரிக்கவேண்டும் என்கிறது ஐ.நா. பிரகடனத்தின் 6-வது ஷரத்து. ஆனுல் அதே சமயத்தில், சட்டத்தின்முன் எல்லோரும் சமம், எல்லோரும் சம பாதுகாப்புக்கு உரியவர்கள் என்பதையும் அது பறை சாற்றுகின்றது ஏழாவது ஷரத்து. தன் ஜீவாதார உரிமைகள் பாதிக்கப்பட்டால் பயனுள்ள பரிகாரம் கோரும் உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு என்கிறது எட்டாவது ஷரத்து.

மனித உரிமைப் பிரகடனம் உலகமெங்கும் அமுலாக வேண்டிய உரிமைச் சாஸனம். சில சமயங்களில் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளவும் இது பயன்படலாம், நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்கும் பொசிவதுபோலே.

எவரையும் யதேச்சையாகக் கைது செய்யவோ, காவலில் வைக்கவோ, நாடு கடத்தவோ கூடாது. (ஷரத்து 9).

நியாயமான, பகிரங்கமான விசாரணைக்கு உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. (ஷரத்து 10).

குற்றவாளி என்று ருசுவாகும் வரை நிரபராதி என்று ஒவ்வொருவரும் கருதப்படவேண்டும். நிகழ்ச்சி நடந்தபோது சட்டப்படி குற்றமாகாத ஒன்றிற்காக பிறகு தண்டிக்கக் கூடாது. (ஷரத்து 11).

இவை எல்லா தேசங்களிலும் கிரிமினல் சட்ட, நடை முறைகளில் சகஜமாக இருக்கவேண்டியவை. குற்றமிழைத் தவர்களுக்குங்கூட சட்டம் தரும் இந்த பாதுகாப்புகள் தேவையே. அவர்களுடைய உரிமைகளுக்கு மதிப்புக் கொடுக் கப்பட்டால்தான் குற்றமற்றவர்களுடைய பாதுகாப்பும் உறுதிப்படும். ஒவ்வொரு மனிதனும் சமூகத்தில் ஒன்றிநிற் பவன்; எனினும் தனிப் பண்பு உடையவன். அவனவனுக்கு என்று சில உரிமைகள், உடைமைகள் உண்டு. ஒருவன் தன் வீட்டில் அச்சமின்றி வாழ முழு உரிமையுடையவனாக இருத் தல் அவசியம். தனிப்பட்ட முறையில் ஒருவன் இன்னொருவ னுக்கு எழுதுவது இரகசியமாகத்தான் இருக்கவேண்டும். இவ் விரண்டும் புனிதமானவை என்று கூறுகிறது 12-வது ஷரத்து. தனி நபரின் கௌரவமும் கண்ணியமும் அதே தன்மை உள்ளவை தான். தேச எல்லைக்குள் இஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் செல்லவும், வசிக்கவும் ஒவ்வொருவ னுக்கும் சுதந்திரம் உண்டு என்று கூறும் 13-வது ஷரத்து, "நடமாட்டச் சுதந்திரம்", என்பதற்கு விரிவான புதுப் பொருளையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறது. தன் தேசத்தி லிருந்து வெளியே செல்லவும் அதற்குத் திரும்பிவருவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு என்று அது திட்டவட்ட மாகக் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது. இவ்வகையில் நாட்டுக்கு நாடு நடைமுறை வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் இதுதான் இருக்கவேண்டிய சிறப்புநிலை என்பதைத் தெளிவு படுத்துகிறது இந்த ஷரத்து.

கொடுங்கோலர்களும் சர்வாதிகாரிகளும் மக்களை இம்சித் ததை வரலாறு நெடுகக் காணலாம். அவர்களிடமிருந்து தப்பி வேறு நாட்டில் அடைக்கலம் புகுந்து, அங்கு நிம்மதி யாக வாழ்க்கையை எண்ணற்றோர் நடத்தியிருக்கிறார்கள்.

அண்டினோருக்கு அபயமளிப்பது கடமை என்று எப்பொழு துமே எல்லா நாகரிக நாடுகளிலும் கருதப்பட்டு வந்துள்ளது. அரசாங்கத்தின் அதிகாரச் சிறப்புக்களில் இது ஒன்று.

தான் வாழும் தேசத்துப் பிரஜை என்ற சட்டபூர்வமான உரிமையில்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை சமீபகாலத்தில் அதிகரித்துள்ளது. அப்பேர்பட்டவர்களுக்கு எந்த அரசாங்கத்தின் பாதுகாப்பும் இல்லாமற் போகிறது. தாம் வாழும் நாட்டில் பிறர்க்குள்ள உரிமைகளும் பாத்தியதைகளும் இல்லாமல் அவர்கள் காலந்தள்ள வேண்டியிருக்கிறது. இலங்கையில் இந்திய வமிசாவழியினர் லக்ஷக்கணக்கில் இன்று இந்த நிலையில்தான் இருந்து வருகின்றனர். இது போன்ற நிலைமை நீடிக்கக்கூடாது. தேசிய பிரஜா உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு என்று கூறுகிறது மனித உரிமைப் பிரகடனத்தின் 15-வது ஷரத்து. இந்த உரிமையை யதேச்சையாகப் பறிமுதல் செய்யக்கூடாது; தனது இஷ்டப்படி தேசியப் பிரஜா உரிமையை மாற்றிக்கொள்ள உரிமையை எவருக்கும் மறுக்கலாகாது என்று இதே ஷரத்து கூறுகின்றது. பதினாறுவது ஷரத்து குடும்பத்தைப்பற்றியது. குடும்பந்தான் தனி நபருக்கும் சமுதாயக் கட்டுக்கோப்புக்கும் இடையேயுள்ள இயற்கையான அமைப்பு. எனவே குடும்பம் அடிப்படையான உறுப்பு என்பதை அங்கீகரித்து, சமூகமும் அரசாங்கமும் அதற்குப் பாதுகாப்பை அளிக்கவேண்டும் என்று இந்த ஷரத்துக் கூறுகிறது. இனம், தேசம், மதம் என்ற பாகுபாடுகளின்றி ஆணும் பெண்ணும் தமக்குப் பிடித்தமானவர்களை மணந்து குடும்ப வாழ்க்கை நடத்த உரிமையுள்ளவர்கள் என்பது குடும்ப உரிமை விளக்கத்தில் தெளிவாக்கப்படுகிறது. திருமணம், மணவாழ்க்கை, மணமுறிவு ஆகிய மூன்றிலும் கணவனுக்கும் மனைவிக்குமிடையே முழு சமநிலை இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆணும் பெண்ணும் நிர்ப்பந்தமின்றி முழு சம்மதத்துடன்தான் கணவன், மனைவியாகலாம் என்றும் அது கூறுகிறது. சட்டமும் சம்பிரதாயமும் ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு சமூகத்திலும் வெவ்

வேறு விதமாக இருந்துவருவது உண்மையே. ஆனால் எவ்வித மான நிர்ப்பந்தமுமில்லாத உரிமையில் எப்படியிருக்கும் என் பதைப் பற்றிய பொதுப்படையான உலகக் கருத்தை இந்த ஷரத்து புலப்படுத்துகிறது.

சொத்தை சம்பாதித்து வைத்து ஆள்வதற்குள்ள உரிமை யைப்பற்றி இன்றைய உலகில் தீவிரமான கருத்து வேறுபாடு கள் இருந்து வருகின்றன. எனவே இந்த உரிமைக்கு பொதுப்படையாகத்தான் மனித உரிமைப் பிரகடனம் இலக் கணம் கூறியிருக்கிறது. இந்த உரிமை உண்டு என்று அது ஒப்புக்கொள்கிறது. ஆனால் அதற்கு சில ஷராக்களையும் சேர்த் திருக்கிறது. "தானே சொந்தமாகவும், பிறருடன் சேர்ந்தும் சொத்துக்கு உடையவனாக இருக்கும் உரிமை ஒவ்வொருவ னுக்கும் உண்டு. யாரிடமிருந்தும் அவனுடைய சொத்தை யதேச்சையாகப் பறித்துவிடலாகாது" என்று இந்த ஷரத்து கூறுகிறது.

ஒவ்வொருவரும் சுதந்திரமாகச் சிந்திக்கவும் மனச் சாட்சிப்படி நடந்து கொள்ளவும், தன் மதத்தைக் கொண்டா டவும் உரிமையுள்ளவன் என்கிறது 18-வது ஷரத்து. இது புனிதமான பறிமுதல் செய்யக் கூடாத, பரார்தீனம் செய்யத் தகாத உரிமை என்று உலகெங்கும் கருதப்படுகிறது. எந்தக் கொடுங்கோலனும், தனி மனிதனின் ஆத்மிகச் சுதந்திரத்தில் கைவைக்க முடியாது. தன் சின்னஞ்சிறு மகன் பிரகலாத னின் மனதை அடக்க சர்வ வல்லமை படைத்திருந்த ஹிரண்ய கசிபுவினால் இயலவில்லை.

மத உரிமை என்பதில் மதத்தை மாற்றிக் கொள்ளும் உரிமையும் அடங்கும். மேலும் மதபோதனை, வழிபாடு, நடைமுறை ஆகியவற்றின் மூலம் தன் மதத்தை வெளிப் படையாகக் காண்பித்துக் கொள்வதற்கு உரிமை ஒவ்வொரு வருக்கும் உண்டு என்பதையும் இந்த ஷரத்து அங்கீகரிக் கின்றது.

பிடித்தமான கருத்துக்களைக் கொள்வதற்கும், அவற்றை எடுத்துரைப்பதற்கும் ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் உண்டு

என்று 19-வது ஷரத்துக் கூறுகிறது. இந்த உரிமையின் பொருள் என்ன வென்பதற்கு விளக்கமும் இதில் தரப்பட்டுள் ளது. கருத்துச் சுதந்திரம் என்ருல் குறுக்கீடு இல்லாமல் அதில் நம்பிக்கை கொள்வதற்குள்ள சுதந்திரம் என்று தான் இதற்குப் பொருள். வரம்பெதுவுமில்லாமல் தகவல்களேயும் கருத்துக்களேயும் நாடிப் பெறவும், பிறருக்குத் தெரிவிக்கவும் உள்ள உரிமைதான் இங்கு இவ்வாறு அங்கீகாரம் பெறு கிறது. எந்த சுதந்திரங்களே உலகிற்கு உறுதி செய்வதற்கு உழைப்பதாக ஐ.நா. தன்னேப் பணித்துக் கொண்டிருக் கிறதோ அவற்றிற்கெல்லாம் உரைக்கல்லாக அமைந்துள் ளது "தகவல் சுதந்திரம்" என்ற உரிமை. இது ஐ. நா. பொதுச் சபை நிறைவேற்றியுள்ள ஒரு தீர்மானத்திலேயே பிரத்தியோகமாகத் தெளிவாக்கப்பட்டுள்ளது.

அமைதியாகக் கூட்டம் கூடவும், சங்கம் சேரவும் உள்ள சுதந்திரம் அடிப்படையானது. மனிதன் பிறருடன் சேர்ந்து வாழும் தன்மை படைத்தவன். ஆகையால் தான் சமூகம் என்பதே தோன்றியது. ஆனுல் யாரையும் தன் விருப்பத் துக்கு மாருக எந்த சங்கத்திலும் இருக்கவேண்டுமென்று எவரும் கட்டாயப்படுத்தலாகாது. எதில் சேருவது, சேராம லிருப்பது என்பது அவனவனது இஷ்டம். யாரையும் நிர்ப் பந்தப்படுத்தலாகாது என்பதைத்தான் 20-வது ஷரத்து தெளிவுபடுத்துகிறது. மதம், ராஜீயக் கட்சி, தொழில்முறை சங்கம் ஆகிய எல்லாமே "சங்கம்" என்பதன் இலக்கண வரம்புக்குள் வரும்.

சர்க்காரின் அதிகாரம் மக்களது விருப்பத்தையே அடிப் படையாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்று 21-வது ஷரத்து கூறுகிறது. சர்க்காரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களுக்குத் தான் உண்டு என்பது இதன் பொருள். எல்லோ ருக்கும் சம அடிப்படையில் வாக்குரிமையளித்து, குறித்த காலத்தில் இரகசியமாக வோட்டு எடுக்கச் செய்து, அதன் மூலம் சர்க்கார் அமைக்கப்பெறுதல் வேண்டும் என்று இந்த ஷரத்து கூறுகிறது. மேலும் தன் நாட்டின் ஆட்சியில் பங்கு

பெறும் உரிமை எல்லோருக்கும் உண்டு ; சர்க்கார் பணிகளில் சேர்ந்துழைக்க சம உரிமை எல்லோருக்கும் உண்டு என்பதை யும் இந்த ஷரத்து தெளிவாக்குகிறது.

## பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள்

பிரஜா உரிமையும் ராஜீய உரிமைகளும் தனித்து இயங் கக்கூடியவை அல்ல. பொருளாதார, சமூக, கலாச்சார உரிமை களுடன் அவை இணைபிரிய இயலாதபடி பிணைக்கப்பட்டுள் ளன. ஒன்றின் அனுபோகம் மற்றொன்றைப் பொறுத்ததாக இருக்கிறது. பொருளாதார, சமூக அல்லது கலாச்சார உரிமை கள் இல்லையென்றால் சுதந்திரமாக மனிதன் வாழவில்லை என்றுதான் பொருள். இதை ஐ.நா. பொதுச்சபை தெளிவாக ஒரு தீர்மானத்தில் கூறியுள்ளது. பொருள் வசதியும், வாழ்க் கைக்குரிய நலன்களும் குறைந்த பட்சக் கல்வியும், கலைப்பண் பும் ஓரளவு இல்லாமல் கண்ணியத்துடன், சுதந்திரமாக வாழ இயலாது. ஆகையால் தான் மனித உரிமைப் பிரகடனத்தில் 22 முதல் 27 வரையுள்ள ஷரத்துக்களில் பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் மனித சமூகம் பூராவுக்குமே உண்டு என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

22-வது ஷரத்து பொதுப்படையானது. சமூகத்திலுள்ள எல்லோருமே வாழ்க்கை வசதிகள் அனைத்தையும் பெறுவ தற்கு உரிமையுள்ளவர்கள் என்று அது கூறுகிறது. ஒவ் வொருவனது தனி விசேஷங்கள் முழுமலர்ச்சி காண பொரு ளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் இன்றியமையாதவை என்றும் அது கூறுகிறது. இவற்றை எல்லோருக்கும் உறுதி செய்வதற்காக தேசிய அடிப்படையில் மட்டுமின்றி, சர்வ தேசிய அடிப்படையிலும் முயற்சி நடக்கவேண்டும் என்று அது தெளிவுபடுத்துகிறது.

பொருளாதார, சமூக நல உரிமைகளைப் பற்றியவை அடுத்த மூன்று ஷரத்துக்கள். வேலை செய்யும் உரிமை எல்லோருக்கும் உண்டு. (ஷரத்து 23). இது மிக முற்போக் கான கருத்து என்று கருதப்படுகிறது. ஒவ்வொருவருக்கும்

வேலையை உத்தரவாதமாக அளிக்க முடியாவிட்டாலும், வேலை வாய்ப்பை அதிகப்படுத்திக் கொண்டே செல்லுவது அரசாங்கக் கடமை என்பது இன்றைய உலகில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அடியோடு வேலையில்லாதவர்களும் முழுநேர வேலையில்லாதவர்களும் வாழ்க்கை வசதிகளின்றி தவிக்கும்படி விடலாகாது என்ற கருத்தும் இதில் அடங்கும். ஆகையால்தான் வேலையில்லாதாருக்கும் மூப்பு எய்தியவர்களுக்கும் பண உதவி அளித்து, அவர்களுடைய துயரை ஓரளவு துடைத்து வருகின்றனர் பல சமுதாயங்களில். இது எல்லா தேசங்களிலும் அடிப்படைப் பொறுப்பாக வேண்டும். இந்த உதவியைப் பெறும் உரிமை வேலையில்லாதாருக்கு உண்டு என்பதுதான் இந்த ஷரத்து புலப்படுத்தும் நீதி.

வேலை செய்ய உரிமை உண்டு என்ருலும், நிர்ப்பந்தப் படுத்தி வேலை வாங்க எவருக்கும் உரிமையில்லை. தனக்குப் பிரியமான வேலையைநாடி அதில் அமரவும், வேலை நிலைமையானது நியாயமாகவும் உழைப்பவனுக்குச் சாதகமாகவும் இருக்கவேண்டும் என்பதையும் இந்த ஷரத்து தெளிவாக்குகிறது. அடிமைபோல அல்லது அடிமை நிலையில் எங்கு வேண்டுமானலும் எப்படி வேண்டுமானலும் நிர்ப்பந்தம் செய்து உழைப்பாளியிடமிருந்து வேலை வாங்க எவருக்கும் உரிமையில்லை. "சம வேலைக்கு சம கூலி" என்ற ஏற்பாடு அவசியமென்றும் இதில் தெளிவாக்கப்பட்டுள்ளது. ஒரே வேலையை ஆண்செய்தால் ஒரு கூலி, பெண் செய்தால் ஒரு கூலி என்ற ஏற்பாடு நியாயமானது அல்ல. உழைப்பவனின் நிறம், மதம், இனம் போன்ற அடிப்படையில் வேலை, ஊதிய விஷயங்களில் எவ்விதமான பாகுபாடும் செய்யலாகாது. இத்தகைய பாகுபாடு எதுவுமின்றி வேலைப்பார்க்க உள்ள உரிமைதான் மனிதனுடைய கண்ணியத்துக்கு ஏற்றது என்பதை இந்த ஷரத்து புலப்படுத்துகிறது.

தனது நலன்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தொழிற் சங்கங்களை அமைத்துக் கொள்ளவும், அவற்றில்

சேரவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு என்பதை இந்த 23-வது ஷரத்து இறுதியாகத் தெளிவுப்படுத்துகிறது.

உழைப்பவன் இளைப்பாற வேண்டும்; அவனுக்கு ஓய்வும் தேவை. இவையிரண்டும் பிறருடைய தயை அல்லது தாட்சண்யத்தைப் பொறுத்திராமல், உரிமைகளாகக் கிடைக்க வேண்டியவை என்று கூறுகிறது (24-வது ஷரத்து). வேலை நேரத்துக்கு வரம்பு கட்டுவது, இடைவெளி நிர்ணயம், சம்பளத்துடன் ஒழுங்காக ஓய்வு கிடைப்பது ஆகியவை சட்ட பூர்வமாக உறுதி செய்யப்பட்டு வரும் உரிமைகள் என்பதை இந்த ஷரத்து தெளிவுபடுத்துகிறது.

சமூக நல பந்தோபஸ்து, சமூக உதவி என்பவற்றில் எவ்வளவோ வாழ்க்கை வசதிகள் சேர்ந்துள்ளன. உழைப்பாளியும் அவனது குடும்பத்தினரும் நோயற்ற நல்வாழ்வை நடத்துவதற்கு வேண்டிய வாழ்க்கை நிலையை உறுதியாகப் பெற உரிமையுண்டு (ஷரத்து 25). வேலையில்லாமை, சுகவீனம், வேலை செய்ய இயலாத நிலை, கைம்மை, மூப்பு ஆகிய காலங்களில் அரசாங்கத்திடமிருந்து உதவி பெற உரிமையுண்டு என்பதும் இதில் அடங்கும். தாய் சேய் நலன்கள் எல்லா நாடுகளிலும் விசேஷமாக உறுதி செய்யப்பட வேண்டியவை என்றும் இது கூறுகிறது.

26, 27-வது ஷரத்துக்களில் கல்வி, கலாச்சார உரிமைகள் விளக்கப்பட்டுள்ளன. கல்வி பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு என்கிறது 26-வது ஷரத்து. அநேகமாக எல்லா தேசங்களும் இப்பொழுது இதை ஏற்றுக்கொண்டுள்ளன. எல்லாப் பிரஜைகளுக்கும் கல்வியளிப்பது அரசாங்கத்தின் கடமை. ஆனால் எவ்வகைக் கல்வி தம் குழந்தைக்கு நல்லது என்று பொறுக்கியெடுக்க பெற்றோருக்கு உரிமையிருக்கவேண்டும்; அரசாங்கம் அதற்கு மதிப்புத் தரவேண்டும் என்று இந்த ஷரத்தில் கூறப்பட்டுள்ளது.

படிப்பிலே பல்வேறு நிலைகளும் வகைகளும் உண்டு. அவையெல்லாம் இங்கு ஆராயப் பெற்றுள்ளன. ஆரம்பக்

கல்வியை கட்டாயமாகவும் இலவசமாகவும் போதிக்க வேண்டும். தொழில்நுட்பக் கல்வியும், வைத்தியம், சட்டம் போன்ற தொழில்வகைக் கல்வியும் பொதுப்படையாக அளிக்கப்பட வேண்டும். தகுதியின் அடிப்படையில் எல்லோருக்கும் உயர் தரக் கல்வி பாகுபாடின்றிக் கிடைக்க வேண்டும் இவையெல்லாம் தெளிவாக்கப்பட்டுள்ளன. கல்வியின் நோக்கம் என்ன -வென்பது ஐயத்துக்கு இடமின்றி விளக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரின் மானிடத் தனி நிலையும் முழுவளர்ச்சி பெறக் கூடியவாறும், மனித உரிமைகள் அடிப்படையான சுதந்தி ரங்கள் ஆகியவற்றிடம் மதிப்பு ஏற்பட்டு வலுவடையும்படி யாகவும் கல்வியானது அமுலாக்கப்பட வேண்டும். எல்லா தேசங்கள், இன, மத பிரிவினைகள் ஆகியவற்றிடையே நல் லிணக்கம், சகிப்புத்தன்மை, நட்பு ஆகியவற்றை கல்வி ஊக்குவிக்க வேண்டும். சமாதானத்தை நிலைநிறுத்த ஐ. நா. மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அது உதவுபடியாக இருக்கவேண்டும். இவையெல்லாம் தெளிவாக்கப்பட்டுள்ளன.

சமுதாயத்தின் கலாச்சார வாழ்வில் சுயேட்சையாகப் பங்கு பற்றும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு (ஷரத்து 27). கலைகளை அனுபவிக்கவும், விஞ்ஞான வளர்ச்சியிலும் அது அளிக்கும் வசதிகளிலும் பங்கு பெறவும் உரிமை ஒவ்வொரு வருக்கும் உண்டு என்று இங்கு விளக்கமாகக் கூறப்பட்டுள் ளது. அதாவது ஒவ்வொரு மனிதனும் பண்பாடுடன் வாழ உரிமையுள்ளவன். கலைகளும் விஞ்ஞானமும் முன்போல ஒரு சிலருக்குமட்டுமின்றி எல்லோருக்குமே நன்மை பயப் பனவாக இருக்கவேண்டும்; இது மனித உரிமை என்பது உறுதிப்படுகிறது. நூலாசிரியர்கள், கலைஞர்கள், புதியன வற்றைக் கண்டு பிடிப்போர் போன்றோரின் இயற்கையான, வெளிப்படையாகத் தெரியாத உரிமைகளும் பொருளாதார நலன்களும் பாதுகாக்கப் பெறுதல் வேண்டும். இது அவர் களுக்குள்ள உரிமை என்று கூறுகிறது இந்த ஷரத்து.

மனிதவுரிமைப் பிரகடனம் பிரகாசப்படுத்தியுள்ள உரிமை களையும் சுதந்திரங்களையும் சுவைப்பதற்கு அமைதி நிறைந்த

சூழ்நிலை தேவை. பயங்கர ஆட்சி நிலவும் நாட்டில் இவற்றைக் காணமுடியாது. யுத்தமோ கொந்தளிப்போ இருந்துவரும் உலகிலும் இவற்றை அனுபவிப்பது அரிது. இத்தகைய நிலைமைகளின்கீழ் மனித உரிமைகள் மதிப்பற்றுப்போவதுண்டு; அவற்றின் அமுலை ஆட்சியாளரே நிறுத்திவைப்பதுமுண்டு. இச்சூழ்நிலையில் வாழ்க்கையே பொருளற்றதாகத் தென்படுகிறது. எனவே வாழ்வு பலிதமாக வேண்டுமாயின் சர்வதேச உறவுநிலையில் ஒரு ஒழுங்குமுறை இருக்கவேண்டும். சமுதாய அமைப்பில் அமைதி இருக்கவேண்டும். ஆட்சியானது சட்ட வரம்புக்கு உட்பட்டதாக இருத்தல்வேண்டும்; ஒருவரது உரிமைகளைப் பிறர் மதித்து மரியாதைகொடுத்து நடந்துகொள்ளும் பண்பு வளரவேண்டும். இவையெல்லாம் அமைந்திருந்தால்தான் மனித உரிமைகள் முழு மலர்ச்சி காண இயலும். அத்தகைய சமூக அமைப்பு தன் தேச எல்லைக்குள்ளேயும் வெளியிலும் இருந்து வரவேண்டுமெனக் கோரும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதுதான் இந்த ஷரத்துக்கள் புலப்படுத்தும் உண்மை.

## உரிமையும் கடமையும்

ஒவ்வொரு உரிமைக்கும் ஒரு கடமையுண்டு. மனித உரிமைப் பிரகடனத்தில் செப்பியிருப்பவை உரிமைகளும்சுதந்திரங்களுந்தான். ஆயினும் ஒவ்வொரு மனிதனுக்கும் கடமைகள் உண்டு என்பதை 29-வது ஷரத்து நினைவூட்டுகிறது. சமூகத்தின்பால் ஒவ்வொருவருக்கும் கடமைகள் உண்டு. அவற்றில் பலமாக வேரூன்றி நின்று பணியாற்றினால்தான் ஒவ்வொருவரும் வாழ்வில் முழு வளர்ச்சியை சுதந்திரமாகக் காண இயலும் என்பது கூடவே அறுதியிட்டுக் கூறப்பட்டுள்ளது.

உரிமைகள் உண்டு, சுதந்திரங்கள் உண்டு என்பது உண்மையே. ஆனால் அவற்றை அனுபவிப்பதற்கு வரம்புகள் உண்டு. அவற்றைச் சட்டம் வரையறுக்கிறது. ஒருவன் அனுபவிக்கும் சுதந்திரமும் உரிமைகளும் பிறரது சுதந்திரங்களுக்கும் உரிமைகளுக்கும் கேடு விளைவிப்பனவாக இருத்த

லாகாது. ஜனநாயக அமைப்பின்கீழ் ஒழுக்கம், பொது அமைதி, சமூகத்தின் பொது க்ஷேமநலம் ஆகியவை உறுதி செய்யப்பட வேண்டியவை. இந்த இரண்டின் தேவைகளை முன்னிட்டுத்தான் தனிப்பட்டவர்களின் உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்கும் சட்டம் வரம்பு கட்டுகிறது. ஐ. நா. வின் நோக்கங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் விரோதமாக எவரும் தமது உரிமைகளையும் சுதந்திரங்களையும் வற்புறுத்த இடமில்லை என்பது கூடவே தெளிவாக்கப்பட்டுள்ளது.

உரிமைகள், சுதந்திரங்கள் உண்டு என்று விவரித்ததுடன் நில்லாமல், அவற்றை அழிக்கும் நோக்கமுள்ள எந்தச் செயலிலும் ஈடுபட எந்த அரசாங்கத்துக்கோ, கோஷ்டிக்கோ, தனி நபருக்கோ, கட்சிக்கோ உரிமை இல்லை என்பதை இறுதியாக முப்பதாவது ஷரத்து தெளிவுபடுத்துகிறது.

# 4. உரிமைகளின் அமுல்

மனித உரிமைப் பிரகடனம் ஒரு சர்வதேச சுதந்திர சாஸனம் என்று போற்றப்பட்டுள்ளது. மனிதன் ஆரம்ப நிலையிலிருந்து படிப்படியாக முன்னேறி சுதந்திர வாழ்வை எங்கும் அடையக்கூடிய வாய்ப்பு உள்ளவனாக மானிட வர்க்கத்தின் இந்த வரலாற்றில் இந்தப் பிரகடனம் ஒரு மிக முக்கியமான கட்டமாக மதிக்கப்பெறும் என்பதில் ஐயமில்லை. இதற்கு முன், அவ்வப்பொழுது சில பல சமுதாயங்களில் மனித உரிமைகளை வரையறுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் முந்திய சாஸனம் எதுவும் இதைப் போன்ற விரிவான அடிப்படை கொண்டதாக இருக்கவில்லை. உலக வரலாற்றிலேயே முதல் தடவையாக எல்லா தேசங்களிலும் சமுதாயங்களிலும் எப்பொழுதும் இருந்தாக வேண்டிய உரிமைகள், சுதந்திரங்கள் இவற்றிலுள்ளவை என்று இப்பொழுதுதான் முதல் தடவையாகக் கூறப்பட்டுள்ளது.

ஐ. நா. அசெம்பிளியின் பாரிஸ் கூட்டந்தான் பிரகடனத்தை அங்கீகரித்து வெளியிட்டது. ஐ. நா. வானது மொத்தமாக இதை ஏற்றுக் கொண்டு வெளியாக்கி யிருப்பது உலகத்திலோர் புதுமை என்பதை அதன் தலைவர் டாக்டர் இவாட் எடுத்துக் காட்டினார். உலகமெங்கும் இதைத்தான் வழிகாட்டியாக, மேற்கோளாக, ஊக்கம்தரும் சஞ்சீவியாக மக்கள் போற்றுவர் என்று அவர் கூறியது முக்காலும் உண்மை.

மனித உரிமைப் பிரகடனம் சட்டத்தின் தன்மையுள்ளதுதானா? அல்லது அறநெறி விளக்கம் என்ற அந்தஸ்து மட்டுந்தான் அதற்கு உண்டா என்ற கேள்வி எழுந்துள்ளது. இதற்குத் திட்டவட்டமான பதிலைக்கூற இயலாது.

பொதுக் கோட்பாடுகளைக் கொண்ட பிரகடனந்தான் இது. எனினும் இதற்கு விசேஷ தார்மிக மதிப்பு உண்டு.

ஐ. நா. அசெம்பிளியில் எதிர்ப்பின்றி ஒரு தீர்மானமாக இது நிறைவேற்றப்பட்டது. ஆனால் இது ஒரு சர்வதேச உடன்படிக்கையாக உருவாக்கப்படவில்லை. எனவே, தனியாக எந்த நாடும் கையெழுத்திடும் அவசியமே ஏற்படவில்லை. ஐ. நா.விலுள்ள எல்லா நாடுகளையும் கட்டுப்படுத்தும் தன்மையுள்ள ஒரு சர்வதேசச் சட்டம் என்று இப் பிரகடனத்தை வருணிப்பது பொருந்தாது. இது உறுதி செய்யும் உரிமைகளுக்காக எந்த உலகக் கோர்ட்டிலும் எவரும் வழக்காட இயலாது. ஆனால் ஒவ்வொரு தேசத்திலும் மனித உரிமைகள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதை அறிவதற்கு இதுவே சாசுவதமான உரைகல்லாக இருந்து வருவது திண்ணம். ஆட்சியாளர் என்ன நினைத்தாலும் எல்லா தேசங்களிலும் இப்படித்தான் மக்கள் அதை மதிப்பர். இந்த உணர்வு எங்கும் பரவிக் காணப்பட்டால் சாதாரண உடன்படிக்கை அல்லது சட்டத்துக்கு உள்ளதைவிட அதிகமாக சக்தியும் செல்வாக்கும் மதிப்பும் இதற்கு ஏற்பட்டுவிடும். பல தேசங்களின் அரசியல் சட்டங்களில் மனித உரிமைப் பிரகடன அம்சங்கள் கோர்ட்டில் செல்லாகக் கூடிய ஜீவாதார உரிமைகளாக ஏற்கப்பட்டுள்ளன.

நீதிமன்றங்களில் வழக்காடக்கூடிய உரிமைகளையே மனித உரிமைப் பிரகடனம் தொகுத்துள்ளது என்று கூறுவோர் உண்டு. மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் எல்லோருக்கும் இனம், பால், மொழி மதம் என்ற பாகுபாடுகளின்றி அமுல் செய்யவும், அவற்றிற்கு மதிப்புத் தேடித் தரவும் உறுதி கூறுவதாக ஐ. நா. மெம்பர் நாடுகள் அணைத்தும், ஐ. நா. சாஸனத்தின் 55, 56வது ஷரத்துக்களை ஏற்றுக் கொண்டு வாக்களித்துள்ளன. ஆனால் அந்த ஐ. நா. சாஸனத்தில் மனித உரிமைகள் யாவை என்பதற்கு விளக்கம் கூறப்படவில்லை. அதிகார பூர்வமாக வியாக்கியானம் செய்திருப்பது மனித உரிமைப் பிரகடனந்தான். ஐ. நா. அசெம்பிளி அதை ஏகமனதாக ஒப்புக்கொண்டிருப்பதால் ஐ. நா. சாஸன ஷரத்தில் இவற்றை செப்பியிருப்ப

தாகவே கருதி, இதை கோர்ட்டின்மூலம் பரிகாரம் தேடக் கூடிய உடன்படிக்கையாக மதிக்கலாம் என்று கருதும் நீதி நிபுணர்கள் உண்டு. ஆனால் இத்தகைய யுக்தி வாதங்களை விட, இதற்குள்ள தார்மிகச் செல்வாக்கைச் சுட்டிக்காட்டி, நியாயம் பேசுவதே அதிகப் பயனுள்ளதாக இருக்கும்.

மனித உரிமைப் பிரகடனத்தில் விவரிக்கப்பட்டுள்ள உரிமைகளும் சுதந்திரங்களும் வெவ்வேறு தேசங்களின் அரசியலமைப்புச் சட்டங்களில் இடம் பெற்றுள்ளவைகளின் இணக்கமான தொகுப்புத்தான் என்று கருதுவோர் உண்டு. சர்வதேச நீதிமன்றம் இந்தக் கருத்தை தன் முன் வந்த ஒரு விவகார விஷயத்தில், வெளிப்படையாகத் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் பரவலாக அமுலாகும்படி செய்வதற்கு சில வேலைத் திட்டங்களை ஐ. நா. வகுத்து நடத்திவருகிறது. பிரகடனத்தின் வாசகத்தை அப்படியே வைத்துக் கொண்டு தான் மனித உரிமைகளைப் பற்றிய நகல்-உடன்பாடு தயாரிக்கப்பட்டுள்ளது. பொருளாதார, சமுதாய, கலாச்சார உரிமைகளைப் பற்றிய நகல்-உடன்பாட்டிலும் இதே முறையைப் பின் பற்றியிருக்கிறார்கள்.

மனித உரிமைகளின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் தத்தம் நாட்டில் என்ன செய்யப்பட்டுள்ளது, என்ன நடந்து வருகிறது, என்ன உத்தேசிக்கப் படுகிறது என்பதைப் பற்றிய தகவல்களை ஐ. நா. வில் அங்கம் வகிக்கும் நாடுகள் தம்மிடையே பரிமாறிக் கொள்வதற்கு ஒரு அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது. இந்த அமைப்பின் பல வேலைகளில் ஒன்று, ஒவ்வொரு தேசத்தையும் கேட்டு, தகவல்களைக்கோரிப் பெற்று பதில்களைச் சரி பார்த்து, ஒழுங்கு செய்து, உலக மக்கள் எல்லோருக்கும் கிடைக்கச் செய்வதுதான்.

மனித உரிமைகளின் நிலவரம் தத்தம் நாட்டில் எப்படி இருந்து வருகிறது என்பதைப்பற்றிய தகவல்களை ஒவ்வொரு நாடும் குறித்த காலக்கிரமப்படி அனுப்பி வைக்கவேண்டும் என்று சொல்லி, அதற்காக 1956-ம் ஆண்டில் ஐ. நா.வின்

பொருளாதார, சமூக கவுன்சில் ஒரு வழி முறையை உருவாக்கியது. மூன்று வருஷங்களுக்கு ஒரு யாதாஸ்து கிடைக்க வேண்டும் என்பது கோரிக்கை. முந்திய மூன்று ஆண்டுகளில் கண்ட அபிவிருத்தியையும் மனித சுதந்திரத்தைப் பாதுகாக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளையும் பற்றிய தகவல்கள் அதில் இருக்கவேண்டும். பிற நாடுகளை அல்லது மக்களை ஆளும் ''தாய் நாடு''கள் தனது சொந்த நாட்டு நிலவரத்தை மட்டுமின்றி, தான் ஆதிக்கம் செலுத்தும் தேசங்களில் உள்ள உரிமை, சுதந்திர நிலைகளையும்பற்றித் தகவல்களைத் தர வேண்டும் என்பது தெளிவாக்கப்பட்டது. ஒவ்வொரு தேசிய இனத்தவருக்கும் சுய நிர்ணய உரிமையுண்டு என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள விஷயமாகையால், இதைப்பற்றிய தகவல்களையும் ஆதிக்க நாடுகள் தெரிவிக்கும் கடமையுள்ளவை.

மெம்பர்-நாடுகளிடமிருந்து மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் அறிக்கைகளை ஐ. நா.வின் மனித உரிமைக் கமிஷன் ஆராய்ந்து , தன் கருத்துரைகள், தான் கண்ட முடிவுகள் ஆகியவற்றுடன் யாதாஸ்தை பொருளாதார, சமூக கவுன்சிலுக்கு அனுப்பிவைக்கும். இந்தக் கருத்துரைகளும் முடிவுகளும் பொதுப்படையான வாசகத்தில்தான் உருப் பெற இயலும்.

1956-ம் ஆண்டில் பொருளாதார, சமூக கவுன்சில், மனித உரிமைக் கமிஷனுக்கு வேறு சில பணிகளையும் இட்டது. திட்டவட்டமான சில உரிமைகளைச் செப்பி, அவற்றைக் குறித்து தொடர்ச்சியாக கமிஷன் தகவல்களைச் சேகரித்து ஆராய்ச்சிகளை நடத்தி வர வேண்டும் என்று அது கோரியது. ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். எதேச்சையாக எவரையும் கைது செய்யவோ, காவலில் வைக்கவோ, நாடு கடத்தவோ கூடாது என்று மனித உரிமைப் பிரகடனத்தின் ஒன்பதாவது ஷரத்து கூறுகிறது. இந்த உரிமை பல்வேறு நாடுகளில் என்ன நிலையில் இருந்து வருகிறது என்பதைப்பற்றித் தான் முதல் விசாரணை 1956-ல் உத்தரவாயிற்று. கல்வி,

வேலை தரும் விஷயம், தொழில் நடத்தும் விஷயம் ஆகியவற்றிலுள்ள பாகுபாடுகளையும், மத உரிமைகள், நடைமுறைகள், ராஜீய உரிமைகள் பற்றியும் விசாரணை நடத்தி ஆராய்ச்சி செய்வதற்கான திட்டம் 1953,1954-ம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்டது. முதல் ஆராய்ச்சியை நடத்தியது மைனாரிட்டிகளின் பாதுகாப்புப் பொறுப்புள்ள துணைக் கமிஷன். வேலை விஷய ஆராய்ச்சியை மேற்கொண்டது சர்வதேசத் தொழிலாளர் விவகார ஸ்தாபனம் (ஐ.எல்.ஓ.)

மனித உரிமைகளைப் பற்றிய யோசனைகளைச் சர்க்கார்களுக்குக் கூறுவதற்காக ஆலோசனைப் பணியாளரைக் கொண்ட ஒரு உத்தியோகப் பிரிவு 1955-ல் ஏற்பாடாயிற்று. மனித உரிமைகளைப்பற்றிய ஆய்வுரை, அரங்கங்கள் ஆங்காங்கு நடத்தப்படுகின்றன. பிரஜைகளின் பொறுப்புக்களைப் பற்றியும் பொது வாழ்வில் மாதர் அதிகமாகப் பங்கு பற்றுவதைக் குறித்தும் விவாதக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. கிரிமினல் சட்டம், நடைமுறை சம்பந்தமாக இரண்டு பிராந்திய அரங்குகளை நடத்தியிருக்கிறார்கள்.

மனித உரிமைகளில் பல அமுலாகும்படி பார்த்துக் கொள்ளும் பணியில் பல்வேறு ஐ. நா. அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளன. இவற்றில் முக்கியமானது ஐ. எல். ஓ. என்ற சர்வதேசத் தொழிலாளர் விவகார அமைப்பு.

"உழைத்து பிழைப்புக்கு வழி தேடுவதில், நியாயமான அனுகூலமான வேலை நிலைமை இருக்கச் செய்வதில், க்ஷேம நல பாதுகாப்புகளுக்கான உரிமைகள் அமைவதில், போதிய வாழ்க்கை நிலை கிடைக்கச் செய்வதில், தாய் சேய் விசேஷ பாதுகாப்புக்கான நடவடிக்கைகளில் தொழிற் சங்கங்களை அமைக்கவும் அவற்றில் சேரவும் உள்ள உரிமையை அனுபவிப்பதில் அடிப்படையான அக்கறை ஐ. எல். ஓ.-வுக்கு உண்டு," என்று அதன் டைரெக்டர்-ஜெனரல் தெளிவாக்கியுள்ளார். இவை எல்லாம் மனித உரிமைப் பிரகடனத்தில் இருப்பவைதாம். சர்வதேச உடன்படிக்கைகள் மூலமாகவும், சிபாரிசுகளாகவும் இவற்றை வலியுறுத்தி வருகிறது ஐ.எல்.ஓ.

பல நாடுகளில இந்த முயற்சிகளின் விளைவாக் இவை உறுதி செய்யப்பட்டுள்ளன

கல்வி, விஞ்ஞான, கலாச்சார விஷயங்களைக் கவனிப்ப தற்கு என்று ஐ. நா. வின் துணையமைப்புக்களில் ஒன்று உழைத்து வருகிறது. பிரகடனத்தில் 27-வது ஷரத்து உறுதி செய்துள்ளவை எவ்வாறெல்லாம் மெம்பர்-நாடுகளில் அமுலா கின்றன என்பதைக் கவனித்து, நல் வளர்ச்சிக்குத் துணை புரிவதுதான் இவற்றின் பிரதானத் திருப்பணி. 2-வது ஷரத்தில் செப்பியுள்ள எவ்விதமான பாகுபாடுமில்லாமல் நியாயம் காண்பிக்கிறார்களா என்பதையும் இந்த ஸ்தாபனம் கவனித்துக் கொள்கிறது.

தானும் தன் குடும்பமும் தேக திடத்துடன் நல்வாழ்வு நடத்துவதற்குப் போதுமான வாழ்க்கை நிலையை அனுபவிக் கும் உரிமை ஒவ்வொருவருக்கும் (25-வது ஷரத்துப்படி) உண்டு. உணவு, உடுப்பு, ஜாகை, வைத்திய வசதி, அவசிய மான க்ஷேமநலப் பணிகள் இவற்றில் அடங்கும் இந்த வசதி கள் சரிவரக் கிடைத்து வருகின்றனவா என்பதைக் கண் காணித்து ஆவன செய்வதற்காக உலக ஆரோக்கிய ஸ்தா பனமும் (W.H.O.), உணவு-விவசாய அமைப்பு (F.A.O.) ஆகியவை பாடுபட்டு வருகின்றன. ஆரோக்கியமாக வாழ் வதற்குள்ள உரிமை செலாவணியாவதற்கு ஆக்கம் தருவது உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணி மக்களுக்குக் கிடைக் கும் போஷாக்கையும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை யும் உயர்த்த உழைக்கின்றது மற்ற அமைப்பு.

ஒருவருக்கொருவர் எழுதும் கடிதங்கள், மற்ற போக்கு வரத்துக்கள் விஷயத்தில் சர்க்கார்கள் யதேச்சையாகக் குறுக் கிடலாகாது என்ற கோட்பாட்டை உரிமைப் பிரகடனத்தின் 12 வது ஷரத்தில் காணலாம். இதை நடத்திவைக்கும் பொறுப்பில் உலக தபால்யூனியனும் சர்வ தேச டெலிவிச யூனியனும் ஈடுபட்டுள்ளன. தபால் வசதி நிர்ப்பந்தமின்றி இருக்கச் செய்வது முதல் ஸ்தாபனத்தின் வேலை. சர்வ

தேச செய்திப் போக்குவரத்தில் இரகசியத்துக்கு பங்க மின்றிக் காப்பது மற்றதன் பொறுப்பு.

## மனித உரிமை தினம்

மனித உரிமைகளைப் பற்றிய பிரசாரம் ஒரே நாளன்று உலகமெங்கும் கல்வி நிலையங்களில் நடைபெறச் செய்தால், வளரும் தலைமுறைகளின் மனதில் இந்த நல்ல கருத்துக்கள் ஆழமாகப் பதிவதற்கு அது உறுதுணையாக இருக்கும் என்று உனெஸ்கோ கருதியது. டிசம்பர் 10-ந் தேதியை இதற்கெனக் குறிப்பிட்டு உலகெங்கும் கொண்டாடி வருகிறார்கள். அன்றுதான் பிரகடனம் 1948-ல் ஒப்புக்கொள்ளப் பட்டது. 1950-ம் ஆண்டில் டிசம்பர் 4-ந்தேதி ஐ.நா. அசெம்பிளி இந்த யோசனைக்கு ஆதரவு கொடுத்தது.' முதல் உலகெங்கும் டிசம்பர் 10-ந்தேதியை மனித உரிமை தினமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

# 5. பிரகடனத்தின் செல்வாக்கு

மனித உரிமைப் பிரகடனம் ஏற்கப்பட்டு பத்து வருஷங்களுக்கு மேலாகிறது சர்க்கார்களின் செய்கைகளும் மக்களின் சிந்தனையும் ஆசைகளும் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் இதற்கு நல்ல செல்வாக்கு ஏற்பட்டிருப்பதாகத்தான் கூறவேண்டும்.

ஐ.நா. ஸ்தாபனமும் வெவ்வேறு தேசங்களின் சர்க்கார்களும் எவ்வாறு தமது அதிகார பூர்வமான நடவடிக்கைகளில் இதற்கு மதிப்புக் கொடுத்துள்ளன என்ற வரலாறு ருசிகரமானது. அவற்றில் சிலவற்றை இங்கு சுருக்கித் தருவது பொருத்தமாக இருக்கும். சர்க்காருக்குப் புறம்பாகவுள்ள பல்வேறு ஸ்தாபனங்களையும் தனி நபர்களையும் பிரகடனம் எவ்வாறு ஆட்கொண்டுள்ளது என்பதைத் திட்டவட்டமாக அறிய இயலாது. ஆயினும் உலக மக்களின் சிந்தனைப் போக்கு நிச்சயமாக இதனால் ஆக்கம் பெற்றுள்ளது என்பது விசதமாகும்.

### சமாதானம்

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் கண்ணியமுள்ளவன், சம உரிமையுள்ளவன், அவனது இந்த உரிமைகளைப் பாரதீனம் செய்யலாகாது என்பதை அங்கீகரித்துச் செயலாற்றுவது அவசியம்; அப்பொழுதுதான் சுதந்திரம், நீதி, சமாதானம் ஆகியவை உலகில் நிலவ முடியும் என்று பொருள்பட பிரகடனத்தின் பீடிகை கூறுகிறது. சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கு இன்றியமையாதவை யாவை என்ற பரிசீலனை 1949-ம் ஆண்டில் நடந்தபோது, இந்தப் பீடிகையிலுள்ள கருத்துக்களின் அடிப்படையில், ஒரு முக்கியமான தீர்மானத்தை நிறைவேற்றியது. மனித உரிமைப் பிரகடனத்தில் செப்பியுள்ள எல்லா அடிப்படை உரிமைகளையும் பூராவாக கௌரவித்து மனித கண்ணி

யத்தைமதித்து, ராஜீய எதிர்ப்பு அமைதியாக வெளிப்படவும், மதச் சுதந்திரம் சரிவர அனுபவிக்கப்பெற முழுவாய்ப்புத் தர வேண்டும் என்று அந்தத் தீர்மானம் கூறுகிறது. மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் உலகெங்கும் மதிப்புப் பெற்ருலொழிய உண்மையான, நீடித்திருக்கக் கூடிய வகையில் சமாதானம் உருப்பெருது என்பது தீர்மானத்தில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

சுதந்திரம் உள்ள தேசங்கள், அடிமை நிலையில் அல்லது தருமகர்த்த ஆதினத்திலுள்ள நாடுகள் என்ற பாகுபாடில்லாமல், எல்லா மக்களுக்குமே இந்த உரிமைகள் உண்டு என்பது முன்னமேயே விளக்கப்பட்டுள்ளது. இவற்றை அளவுகோலாகக் கொண்டுதான், 1948-க்குப் பிறகு சுயாட்சியில்லாத பகுதிகளின் வளர்ச்சியை அளவிட்டு வந்திருக்கிருர்கள்.

சுயாட்சியில்லாத பகுதிகள்மீது ஆதிக்கப் பொறுப்புள்ள சர்க்கார்கள் அவற்றில் உள்ள பொருளாதார, சமூக, கல்வி நிலைமையைப்பற்றிய யாதாஸ்தை ஐ.நா. பொதுக் காரியதரிசிக்கு அனுப்பியாகவேண்டும் (சாஸன ஷரத்து 73-இ). மனித உரிமைப் பிரகடனம் இப்பகுதிகளில் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப்பற்றிய தகவல்களையும் அவை அனுப்பி வைக்கவேண்டும் என்ற தீர்மானம் 1950-ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச் சபையில் நிறைவேறியது. அடுத்த ஆண்டில் இந்தக் கோரிக்கை மேலும் விரிவாக்கப்பட்டது. மனித உரிமைகளுக்கு சட்டத்தின்மூலம் பாதுகாப்பு எவ்வாறெல்லாம் அளிக்கப்பட்டுள்ளது என்ற தகவலைத் தருமாறு அவை மேலும் கோரப்பட்டன. சட்டம் மட்டுமின்றி நடைமுறையும் பிரகடனத்துக்கு இசைவாக இருக்கின்றதா, பாகுபாடுகள் இல்லாமல் இருக்கின்றனவா என்பதைப்பற்றி விசேஷத் தகவல்களை அனுப்பவேண்டும் என்று அத்தீர்மானம் கேட்டுக் கொண்டது.

வருஷா வருஷம் ஒரு வினுத்தாளில் உள்ள கேள்விகளுக்கெல்லாம் பதில் எழுதி, நிலவரம் என்ன என்பதைத் தெளி

வாகக் கூறும் யாதாஸ்தை மேலாதிக்க நாடுகள் ஐ.நா. அசெம்பிளிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று சாஸனத்தின் 88-வது ஷரத்து கோருகிறது. வினுத்தாளின் வாசகத்தை இறுதியாக்கி 1952-ல் தருமகர்த்தக் கவுன்சில் அங்கீகரித்தது. மனித உரிமைப் பிரகடனத்தில் செப்பியுள்ளவற்றில் எந்த உரிமைகள், எந்த அளவுக்கு, எம்மாதிரி அமுலாகின்றன என்ற தகவல்கள் விவரமாகக் கோரப்படுகின்றன. அவற்றைப் பூராவாக அமுல் செய்ய முடியாமலிருந்தால் அதற்கான காரணங்களையும் அவை தெரிவித்தாக வேண்டும். மனித உரிமைகள் பற்றி முக்கியமான நிர்வாக அல்லது நீதிமன்ற முடிவுகள் செய்யப்பட்டிருந்தால் அவைபற்றிய தகவல்களையும் தர வேண்டும் என்பது விதி.

கிழக்கு ஆப்பிரிக்காவில் முன்னர் காலனியாக இருந்து வந்த சோமாலிலாந்தை தருமகர்த்தப் பிரதேசமாக இத்தாலியிடம் 1950-ல் ஐ.நா. அசெம்பிளி ஒபபடைத்தது. எப்படி நிர்வாகம் நடக்க வேண்டும் என்பதைப்பற்றிய ஒப்பந்தமொன்று கையெழுத்தாயிற்று. ஐ.நா. நிறைவேற்றிய மனித உரிமைப் பிரகடனத்தில் உள்ள உரிமைகளையும் சுதந்திரங்களையும் அமுலுக்குக் கொண்டு வருவதாக அந்த ஒப்பந்தத்தின் மூலம் இத்தாலி ஏற்றுக்கொண்டது.

மத, இன காரணங்களுக்காக இம்சிப்பதும் பாகுபாடு செய்வதும் உடனடியாக நின்றுக வேண்டும் என்று தனது மேல் பொறுப்பில் நேரடியாகவுள்ள தருமகர்த்தப் பிரதேசங்கள் விஷயமாக அதிகாரப் பொறுப்பேற்றுக் கொண்ட நாடுகளுக்கு ஐ. நா. கவுன்சில் கட்டளை பிறப்பித்தது. கல்வித் துறையிலும் எந்தப் பாகுபாடும் இருக்கலாகாது என்பது தெளிவாக்கப்பட்டது. இவைகளைப்பற்றி ஐ.நா. அசெம்பிளி பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

இந்திய, பாகிஸ்தானி வமிசா வழியினர், ஆப்பிரிக்க சுதேசிகள் ஆகியோர் விஷயமாக தென் ஆப்பிரிக்க யூனியன் சர்க்கார் வகுத்துக் கொண்டுள்ள கொள்கைகளும் பின்பற்றி

வரும் நடைமுறைகளும், மனித உரிமைப் பிரகடனத்தின் ஒவ்வொரு கருத்துக்கும் முற்றிலும் எதிரிடையானவை. இவற்றைத் தனித்தனியாக அவ்வப்பொழுது பல தீர்மானங்களின் மூலம் ஐ. நா. அசெம்பிளி கண்டித்துள்ளது. ஒவ்வொரு இனத்துக்கும் தனி மண்டல வாசத்திற்கு வழி செய்யும் சட்டத்தின் அமுலை நிறுத்தி வைத்து, இனப் பிரிவினைக் கொள்கைகளை குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கோரிக்கையை ஒரு தீர்மானமாகச் செய்து அனுப்பியது ஐ.நா. அசெம்பிளி. ஆனால் தென் ஆப்பிரிக்கா உலக அபிப்பிராயத்தை மதித்துச் செயலாற்றும் மனப்பான்மையில் இன்று இருக்கவில்லை.

## மாதர் உரிமை

நிர்ப்பந்தமற்ற சுயேச்சையான திருமண உரிமைக்குப் பிரகடனம் அங்கீகாரம் அளித்திருக்கிறது. குடும்ப அமைப்புக்குப் பாதுகாப்பு இருக்கவேண்டும் என்றும் அது கோரியுள்ளது. பொருளாதார, சமூக கவுன்சில் மாதர் உரிமைகளைக் குறித்து பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. உரிமைகள், கடமைகள் விஷயத்தில் மனைவிக்கும் கணவனுக்குமிடையே குடும்ப விஷயங்களில் சம நிலையைச் சட்டபூர்வமாக உறுதி செய்யவேண்டும் என்ற கோரிக்கையை பல்வேறு சர்க்கார்களுக்கு கவுன்சில் அனுப்பி யுள்ளது. பெண்ணாட்சி நடக்குமிடங்களில் அது தொடர்ந்து இருக்கச் செய்வதன் அவசியம் வற்புறுத்தப்பட்டுள்ளது. திருமணமான பெண்களுக்கு வேலை பார்க்கும் உரிமையுண்டு என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைப் பிரகடனம் நீதிமன்றங்களில் செல்லுபடியாகக் கூடிய சர்வதேச தஸ்தாவேஜி அல்ல; ஆனாலும் ஐ.நா., ஐ.எல்.ஓ. ஆதரவில் ஏற்கப்பட்ட உடன்படிக்கைகள் பலவற்றில் இதை செப்பியிருப்பது குறிப்பிடத்தக்கது அந்த உடன்பாடுகள் சம்பந்தப்பட்ட நாடுகளைக் கட்டுப்படுத்துபவை இம்மாதிரி மறைமுகமான செல்வாக்கு அதற்கு அளிக்கப்பட்டுள்ளது.

## அகதிகள்

இரண்டாவது உலக யுத்தத்தின்போதும் அதற்கு முன்னரும் பிறகும் பலபேர் பல்வேறு காரணங்களுக்காக தமது சொந்த நாடுகளை விட்டு வெளியேறி பிற தேசங்களில் தஞ்சமடைய வேண்டியதாயிற்று. தமது மூதாதையர் எத்தனையோ தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த தேசங்களில் தமது உடமைகளையும், சில சந்தர்ப்பங்களில் நெருங்கிய உறவினரையுங் கூட விட்டு விட்டு "அகதிகளாக"ப் பிறநாடுகளில் அவர்கள் அடைக்கலம் புகலாயிற்று. அப்பேர்ப்பட்டவர்களுடைய அந்தஸ்தைப்பற்றிக் கவனிப்பதற்காக 1951-ல் ஒரு மகாநாடு நடைபெற்றது. அவர்களுடைய சட்டபூர்வமான அந்தஸ்து, அவர்களுக்குள்ள உரிமைகள், கிடைக்க வேண்டிய அனுகூலங்கள் ஆகியவைபற்றி சில முடிவுகள் ஏற்பட்டன. இவர்களிற் பலரும், வேறு சில வகையினரும் நாடற்றவர்கள் என்று சட்டரீதியாகக் கருதப்பட்டாலும், அவர்களுக்குள்ள எல்லா உரிமைகளும் கிடைக்கச்செய்ய வேண்டும் என்ற கருத்துள்ள அகதிகள்பற்றிய உடன்பாடு 1954-ம் ஆண்டில் ஏற்பட்டது. இந்த இரண்டு உடன்பாடுகளின் பீடிகையிலும் மனித உரிமைப் பிரகடனத்தை எடுத்துக்காட்டி, எவ்விதமான பாகுபாடுமின்றி எல்லா மனிதருக்கும் அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் கிடைத்தாக வேண்டும் என்று வலியுறுத்தி, அகதிகள் நிம்மதியாக வாழ்க்கை நடத்த இந்த இரண்டு உடன்பாடுகளும் வழி செய்து கொடுத்தன. இவ்வாருக அகதிகளின் மறுவாழ்வமைப்புக்கு மனித உரிமைப் பிரகடனம் துணைபுரிந்திருக்கிறது.

## பெண்களும் ராஜீயமும்

1952-ம் ஆண்டில் மாதர்களின் ராஜீய உரிமைகளைப்பற்றிய உடன்பாட்டை ஐ. நா. அசெம்பிளி உருவாக்கியது. வோட்டுரிமை, தேர்தல்களில் அபேட்சகர்களாக நிற்க உரிமை உண்டு; அரசாங்கப் பணிகளிலும் மற்றப் பொது நிறுவனங்களிலும் எவ்விதப் பாகுபாடுமின்றி ஆண்களுடன் "சரி நிகர்

சமானமாக" மாதர் உரிமை உள்ளவர்கள் என்று அது கூறு கிறது. இதற்கு ஆதாரமாக மனித உரிமைப் பிரகடனத் தைத்தான் பீடிகையில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

வெவ்வேறு தேசத்தவர் கணவனும் மனைவியுமானால், மனைவி எந்த தேசத்து உரிமைக்காரி என்ற சர்ச்சை பல சந்தர்ப்பங்களில் எழுந்துள்ளது. மணமான மாதரின் தேசிய உரிமை என்ற விஷயமாக 1957-ல் ஐ.நா. அசெம்பிளி ஒரு உடன்பாட்டை ஏற்றுக்கொண்டது. திருமணத்துக்குப் பின் கணவன் வேறு தேசப் பிரஜையாகி விடலாம். அல்லது மண முறிவு ஏற்படலாம். இம்மாதிரி நிலைமைகளில் மனைவியின் வாரிசு உரிமையைப் பற்றி பல சட்டப் பிரச்னைகள் எழுந் துள்ளன. இவற்றை ஒழுங்கு செய்வதுதான் இந்த உடன் பாட்டின் நோக்கம். கணவனது நாடு அல்லது நிலைமை மாறிவிட்டால் அதைப் பின்பற்றி மனைவியின் நாடு அல்லது உரிமையும் மாறிவிட்டதாக ஆகாது என்று இந்த உடன் பாடு தெளிவாகக் கூறுகிறது. ஒவ்வொரு நபரும் தேசியப் பிரஜா உரிமை பெற உரிமையுள்ளவர் என்று மனித உரிமைப் பிரகடனம் கூறியிருப்பதை ஆதாரமாக எடுத்துக் காட்டி மனைவிக்குத் தனிச் சுதந்திர உரிமை உண்டு என்று கூறுகிறது இந்த உடன்பாட்டின் பீடிகை.

## அடிமை நிலை

அடிமைகளை வைத்திருப்பது, அடிமை வியாபாரம், அடி மைத்தனத்தை ஒத்த நடைமுறைகள் ஆகிய எல்லாமே எடு பட வேண்டியவை என்று கூறும் ஒரு உடன்பாடு, 1956-ல் ஐ.நா.வின் பொருளாதார, சமூக கவுன்சிலில் ஒப்புக்கொள்ளப் பட்டது. சட்டமியற்றி இந்த நோக்கங்களை நிறைவேற்றுவ தாக ஒவ்வொரு மெம்பர்-நாடும் பொறுப்பேற்றுக் கொண் டுள்ளது. எவையெல்லாம் அடிமை நிலைகள் என்பதற்கும் உடன்பாட்டில் விளக்கம் இருக்கிறது. கடனடிமை, உழைப் படிமை, மாதர், இளைஞர், குழந்தைகள் சுவாதீனமின்றி சுரண் டப்படும் பிற நிலைகள் முதலியன கூடாது என்பது தெளி

வாககப்பட்டுள்ளது. இந்த உடன்பாடும், மனித உரிமைப பிரகடனத்தின் நான்காவது ஷரத்தை ஆதாரமாகக் காட்டி யிருப்பது குறிப்பிடத்தக்கது.

## கட்டாய வேலை

எவனையும் கட்டாயப்படுத்தி வேலை வாங்கக்கூடாது என்பது நெடுநாளைய கருத்து. இதை ஆராய ஐ.எல்.ஓ., ஐ.நா. சமூக கவுன்சில் ஆகிய இரண்டும் சேர்ந்து ஒரு கமிட்டியை நியமித்தன. இரண்டு விதமானக் கட்டாய வேலைகள் இருந்து வருவது வெளிப்பட்டது. ஒன்று ராஜீய நடவடிக்கைகள் அல்லது கருத்துகளுக்குத் தண்டனையாக விதிக்கப்பட்ட கட்டாய வேலைமுறை; மற்றொன்று முக்கியமான பொருளாதார காரியங்களுக்காக மேற்கொள்ளப்படுவது. இரண்டுமே ஐ.நா. சாஸனம் உறுதி செய்து மனித உரிமைப் பிரகடனம் உத்தரவாதம் அளித்துள்ள ஜீவாதார உரிமைகளுக்கு முரணானவை என்பது தெளிவு.

கட்டாய வேலை ஒழிப்புபற்றிய உடன்பாடு ஒன்றை 1957-ல் ஐ எல்.ஓ. நிறைவேற்றியது. அதன்படி மெம்பர்-நாடுகள் ஐந்து வகைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டன ஐ.நா. சாஸனத்திலும் மனித உரிமைப் பிரகடனத்திலும் கூறப்பட்டுள்ள மனித உரிமைகளை "கட்டாய உழைப்பு முறை" மீறுவதாக இருப்பதால் அதை தத்தம் நாடுகளில் எடுத்து விடுவதாக ஒவ்வொரு நாடும் இந்த உடன்பாட்டின் மூலம் ஏற்றுக்கொண்டது. ஐந்து வகை அடிமை நிலைகளும் அகற்றப்பட வேண்டும் என்பது உடன்பாட்டின் கட்டளை. (1) ஏற்கெனவே இருந்து வரும் ராஜீய, சமூக, பொருளாதார அமைப்புக்கு எதிரிடையான ராஜீய கருத்துக்களையோ தத்துவங்களையோ கொண்டவர் என்பதற்காக தண்டனை விதிக்கும் வகையில் கட்டாய வேலை வாங்குதல் கூடாது. (2) பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய உழைப்புக் கிடைப்பதற்காகக் கட்டாய முறையைப் பின்பற்றலாகாது. (3) தொழிலாளரிடையே கட்டுப்பாட்டை வளர்க்கவும் இதை பயன்படுத்த

லாகாது. (4) ஸ்டிரைக்குகளில் பங்கு கொண்டதற்குத் தண்டனையாக இதை விதிக்கக்கூடாது. (5) இன, சமூக, தேசிய, மத பாகுபாட்டுச் சாதனமாகவும் இதைப் பயன்படுத்தலாகாது. இவை தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

## வேலை வாய்ப்பில் பாகுபாடு

தொழிலை மேற்கொள்வதில், வேலை வாய்ப்பில் பலவகைப் பாகுபாடுகள் இருந்து வருவது தெளிவு. இவை மனித உரிமைப் பிரகடனத்துக்கு முரணானவை. தொழிலை மேற்கொள்வதிலும், வேலை வாய்ப்பிலும் எவ்விதமான பாகுபாடும் இருக்கலாகாது என்பதை தத்தம் தேசியக் கொள்கையாக்குவதாக 1958-ல் ஒரு ஐ.எல்.ஓ. உடன்பாட்டின் மூலம் உலக நாடுகள் ஏற்றுக்கொண்டன. மனித உரிமைப் பிரகடனத்தை ஒட்டியே இந்த உடன்பாடு உருவாகியுள்ளது என்பதை அதன் பீடிகையில் காணலாம்.

# 6. பல தேச நடவடிக்கை

பல்வேறு தேசங்கள் சேர்ந்த தொகுதிகள் தமக்கிடையே ஒப்பந்தங்களைச் செய்துகொண்டிருக்கின்றன; பல கூட்டறிக்கைகளையும் அவை வெளியிட்டுள்ளன. அவற்றில் மனித உரிமைப் பிரகடனத்தின் பல்வேறு அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

ஐரோப்பிய நாடுகளின் சபையொன்று 1950-ம் ஆண்டில் ரோமாபுரியில் கூடி, மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரங்களையும் அமுலாக்குவதற்கு என்று ஒரு தனி உடன்பாட்டைச் செய்து கொண்டன. மனித உரிமைப் பிரகடனத்தில் காணப்படும் உரிமைகளில் சிலவற்றை அமுலாக்குவது தான் உடன்பாட்டின் நோக்கம் என்று பீடிகை கூறியது. இந்த நாடுகள் தம்மிடையே பொது லட்சியங்களும், சுதந்திரச் சம்பிரதாயங்களும் வாழ்க்கை வழிகளும் இருப்பதை உணர்ந்து, இவற்றை மேலும் பலப்படுத்த மனித உரிமைகளின் அமுல் துணைபுரியும் என்று தெளிந்து, உடன்படிக்கையில் கையெழுத்திடுவதாகக் கூறியது கவனிக்கத் தக்கது.

## அமெரிக்க அறிவிப்பு

அமெரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த தேசங்கள் 1954-ம் ஆண்டில் காரகாஸ் என்ற நகரில் கூடி மனித உரிமைகளும் கடமைகளும் முழுமை காணச் செய்வது எப்படி என்று ஆலோசித்து ஒரு கூட்டறிக்கை வெளியிட்டன. பிரதிநிதித்துவ ஆட்சி முறையுள்ள ஜனநாயக வாழ்வு இதற்கு அவசியம் என்பதை அது ஏற்றுக்கொண்டது. பழைய மனித உரிமை அறிக்கைகளையும், ஐ. நா. ஒப்புக்கொண்ட மனித உரிமைப் பிரகடனத்தையும் எடுத்துக் காட்டி, இந்த நோக்கம் நிறைவேறுவதற்காக வேண்டி, படிப்படியாக ஏற்றம் காணும்

கள் மூலமாகவும் ஆவன செய்வதாக அவை ஏற்றுக் கொண்டுள்ளன.

## ஆசிய ஆப்பிரிக்க நாடுகள்

1955-ம் ஆண்டில் இந்தோனேஷியாவைச் சேர்ந்த பாண்டுங்கில் ஆசிய, ஆப்பிரிக்க சுதந்திர தேசங்கள் மகாநாடு கூடின. ஐ.நா. சாஸனத்திலும், மனித உரிமைப் பிரகடனத்திலும் காணப்பெறும் ஜீவாதார உரிமைகளை எல்லா தேச மக்களும் நடத்திவைக்க வேண்டும் என்ற கூட்டறிக்கையை மகாநாடு ஏற்றுக்கொண்டது.

இரண்டாவது உலக யுத்தத்தில் ஜப்பான் பகை நாடாக இருந்தது. அதனுடன் 1951-ல் மேலை நாடுகள் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டன. மனித உரிமைப் பிரகடனத்தின் நோக்கங்கள் நிறைவேறச் செய்வதாக ஜப்பான் இதன் மூலம் ஏற்றுக் கொண்டது.

இத்தாலிக்கும் யூகோஸ்லாவியாவுக்கு மிடையே தகராறில் இருந்துவந்த ட்ரீயெஸ்ட் என்ற தீபகற்பப் பகுதிக்கு ஒரு தனி அந்தஸ்தை சர்வதேச உடன்படிக்கையொன்று 1954-ம் ஆண்டில் வழங்கியது. இத்தாலி, பிரிட்டன், யு.எஸ்., யுகோ ஆகியவை அதில் கையெழுத்திட்டன. இத்தாலி, யுகோ ஆகிய இரண்டும் இரண்டு பகுதிகளில் ஆட்சிப் பொறுப்பைப் பெற்றன. அங்கே வசிக்கும் மக்கள் எவ்விதமான பாகுபாடுமின்றி, மனித உரிமைப் பிரகடனத்தில் உள்ள சுதந்திரங்களையும் உரிமைகளையும் அனுபவிக்கும் வகையில் இரண்டு சர்க்கார்களும் தம் நிர்வாகங்களை நடத்துவதாக ஏற்றுக் கொண்டன.

வட ஆப்பிரிக்காவிலுள்ள டுனிசியா சமீபத்தில் சுதந்திரமடைந்தது. அதற்குப் பூர்வாங்கமாக பிரான்சும் டுனிசியாவும் 1955-ம் ஆண்டில் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டன. புது அந்தஸ்தை அடையவிருந்த டுனிசியாவில் அரபுகள் மட்டுமின்றி பிரெஞ்சுக்காரர் உட்பட பல்வேறு இனத்தவர் உண்டு. எவ்விதமான பாகுபாடின்றி, டுனிசியாவில் வசிக்கும்

எல்லோருடைய சுதந்திரங்களேயும் உரிமைகளேயும் மனித உரிமைப் பிரகடனத்தில் கூறியுள்ளபடி உத்தரவாதம் செய்வதாக டுனிசியா அறிவித்தது.

## புது சுதந்திர நாடுகள்

மனித உரிமைப் பிரகடனம் வெளியானது 1948-ம் ஆண்டில். அதற்கப்புறம் பல தேசங்கள் சுதந்திர அந்தஸ்தை அடைந்துள்ளன. அவற்றின் அரசியல் சட்டங்களேத் தயாரித்தவர்கள் மனித உரிமைப் பிரகடனத்தை வைத்துக் கொண்டுதான் அடிப்படைச் சுதந்திரங்களேயும் தனி-நபர் உரிமைகளேயும் பற்றிய ஷரத்துக்களே வரைந்திருக்கின்றனர். சமீபத்தில் பல தேசங்களில் இயற்றப்பட்ட சட்டங்களிலும் பிரகடனத்தின் செல்வாக்கைப் பரவலாகக் காணலாம். சில உதாரணங்கள் இங்கு தரப்படுகின்றன.

**ஜெர்மனி:** ஜெர்மன் பெடரல் குடியரசு என்ற மேற்கு ஜெர்மனியின் அரசியல் சட்டம் 1949-ல் வெளியாயிற்று. திருமணமும் குடும்பமும் அரசாங்க பாதுகாப்புக்கு உரியவை என்று அதில் கூறியுள்ளனர். இது மனித உரிமைப் பிரகடனத்தின் ஆருவது ஷரத்தில் உள்ள கருத்து. எவருடைய ஜெர்மன் பிரஜா உரிமையையும் பறிக்கலாகாது என்ற பகுதி மனித உரிமைப் பிரகடனத்தில் 16-வது ஷரத்தைத் தழுவியது.

**ஹைட்டி:** ஹைட்டி என்பது மத்திய அமெரிக்காவிலுள்ள ஒரு சிறிய குடியரசு. மனித உரிமைகளேயும் அடிப்படைச் சுதந்திரங்களேயும் வற்புறுத்தி அந்நாட்டு அரசியல் 1950-ம் ஆண்டில் வரையப் பெற்றது. இந்த பகுதிகளுக்கான மூன்று மூலாதாரங்களில் மனித உரிமைப் பிரகடனம் முக்கியமானது என்று அந்நாட்டு அரசியல் நிர்ணய சபையின் தலைவர் டாண்டெஸ் பெல்லகார்டே கூறியுள்ளார்.

இந்தோனேஷிய அரசியல் உருவானது 1950-ம் ஆண்டில். லிபியாவின் சட்டம் அடுத்த ஆண்டு தயாராயிற்று. எதியோபியாவில் சுயாட்சியுள்ள மாகாணமாக எரிட்ரியா

வுக்கு அரசியல் வகுத்தார்கள் 1952-ம் ஆண்டில். இவை மூன்றிலும் காணப்படும் உரிமைப் பகுதிகள் மனித உரிமைப் பிரகடனத்தில்தான் பெரிதும் வேரூன்றி நிற்கின்றன.

மேற்கு ஆப்பிரிக்காவில் டோகோலாந்து என்ற பகுதி பிரெஞ்சு நிர்வாகத்தின் கீழ் தருமகர்த்தப் பொறுப்பாக இருந்து வந்து 1958 பிப்ரவரி 22-ந்தேதி அது தனிக் குடியரசாயிற்று. அதன் அடிப்படைகள் யாவை என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். சர்வதேச உடன்படிக்கைகளின் படியுள்ள பொறுப்புக்களும் ஐ.நா. மனித உரிமைப் பிரகடனமுந்தான் அவை என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

### சட்டங்களும் உத்தரவுகளும்

விஞ்ஞான, இலக்கிய, கலைப் படைப்புக்களுக்குப் பாதுகாப்பு அளித்து மதியினால் விளைகின்ற உரிமைகளைப்பற்றிய பொது அட்டவணையை தயாரித்து சரிவர வைப்பது என்ற நோக்கமுள்ள சட்டமொன்று 1951-ல் பாரகுவே என்ற தென் அமெரிக்க நாட்டில் நிறைவேறியது. ஐ.நா. மனித உரிமைப் பிரகடனத்தின் 27-வது ஷரத்தை ஒட்டியே இச்சட்டம் செய்யப் படுகிறது என்று மசோதாவின் பீடிகை கூறுகிறது.

பிறரை வைத்து வேலை வாங்குவதைப் பற்றிய விதிமுறைகள் நியாயமாக இருக்கச் செய்வதற்காக 1951-ம் ஆண்டில் கானடாவில் ஒரு மாகாணம் சட்டமியற்றியது. வேலை வாய்ப்புபற்றி மூன்று ஆண்டுகளுக்குப் பின் மற்றொரு சட்டம் வந்தது. இனம், மதம், நிறம், தேசம், பூர்விகம், பாரம்பரியம் ஆகிய எந்தக் காரணத்துக்காகவும் வேலை வாய்ப்பில் பாகுபாடு கூடாது என்பதை உறுதி செய்யவே இவ்விரு சட்டங்களும் வந்தன. ஐ. நா. வின் மனித உரிமைப் பிரகடனத்துக்கு இசைவாகவே இச்சட்டங்கள் இயற்றப்படுவதாக இரண்டின் பீடிகைகளிலும் கூறப்பட்டுள்ளது.

1955-ம் ஆண்டில் ஆர்ஜெண்டின சட்ட மன்றம் ஒரு உத்தரவுக்கு அங்கீகாரமளித்தது. ஆர்ஜெண்டின் பிரஜா உரி

மையை ராஜீய காரணங்களுக்காக மறுப்பது மனித உரிமைப் பிரகடனத்துக்கு உகந்ததல்ல என்று அது கூறுகிறது.

1955-ம் ஆண்டில் தென் அமெரிக்காவிலுள்ள பொலீவியா சர்க்கார் அந்நாட்டுக் கல்வி முறையைப்பற்றி ஒரு உத்தரவு பிறப்பித்தனர். எவ்விதப் பாகுபாடுமின்றி எல்லோருக்கும் கல்வித் துறையில் சம வசதி அளிக்கப்படுவதே அதன் நோக்கம். மனித உரிமைப் பிரகடனம் இதற்கு ஊக்கம் அளிக்கும் என்ற நம்பிக்கை பீடிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1956-ம் ஆண்டில் பாகுபாட்டுத் தடைச் சட்டமொன்றை பனுமா சர்க்கார் நிறைவேற்றினார்கள். நிற, இன காரணங் காட்டி பாகுபாடு செய்வது அந்நாட்டு அரசியல் சட்டத்திற்கு மட்டுமின்றி ஐ.நா. மனித உரிமைப் பிரகடனத்துக்கும் ஒவ்வாதது என்று இச்சட்டத்தின் பீடிகையில் கூறப்பட்டுள்ளது.

### நீதி மன்றங்கள்

மனித உரிமைப் பிரகடனம் பூராவுமே அல்லது அதன் ஷரத்துக்கள் தனித்தனியாகவோ பல நீதிமன்றத் தீர்ப்புக்களில் இடம் பெற்றுள்ளன. இரண்டு தேசங்களிடையே எழும் தகராறுகள் விஷயத்தில் இது சகஜம். சர்வதேச நீதிமன்றத்தின் முன் வந்த ஐந்து வழக்குகளில் இம்மாதிரி பிரஸ்தாபம் காணப்படுகிறது. மேலும் யு. எஸ். கோர்ட்டுகள், முற்றிலும் உள்நாட்டுத் தன்மையுள்ள, பல வழக்குகளில் மனித உரிமைப் பிரகடனத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்றன என்றும் தெரிகிறது

ஒரு தொழிற்சங்கத்தில் ஆண், பெண் பலரிடை பாகுபாடு காண்பிக்கப்பட்டது. இது ஆட்சேபகரமானது என்று நியுயார்க் சுப்ரீம் கோர்ட் 1950-ம் ஆண்டில் தீர்ப்பளித்துள்ளது. அமெரிக்கச் சட்டத்தில் இதை ஆட்சேபகரமாக்கும் பகுதி எதுவுமில்லே. ஆனாலும் தமது முடிவுக்கு ஆதாரமாக ஐ. நா. மனித உரிமைப் பிரகடனத்தைத்தான் கோர்ட்டார் எடுத்துக் காட்டினார்கள். "இந்தப் பிரகடனம்

காலப் போக்கை அனுசரித்தது; எதிர்ப்பின்றி ஐ. நா. வால் ஒப்புக் கொள்ளப்பட்டது. இதை அமெரிக்கா ஏற்றுக் கொண்டுள்ளது; எனவே பால் காரணமாக பாகுபாடு செய்வது அந்தப் பிரகடனத்தின் 2, 23 ஷரத்துக்களுக்கு முரணானது, எனவே ஆட்சேபகரமானது" என்று பொருள்பட கோர்ட்டார் கூறினர்.

பகைவர்களல்லாத அந்நிய நாட்டினரை அவர்கள்மீது கிரிமினல் குற்றமெதுவும் சாட்டாமல், காலவரம்பின்றிக் காவலில் வைக்கலாமா என்ற பிரச்னை பிலிப்பீன்சில் 1951-ல் எழுந்தது. அப்படிச் செய்யக் கூடாது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது. சர்வதேச சட்டத்தின் கோட்பாடுகளை பிலிப்பீன் சர்க்கார் ஏற்றுக் கொள்வதாக அரசியல் சட்டத்தின் இரண்டாவது ஷரத்துக் கூறுகிறது. மேலும் மனித உரிமை பிரகடனத்துக்கு பிலிப்பீன்சும் இசைவு கூறியுள்ளது. சுதந்திரத்துடன் நல்வாழ்வு நடத்த ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமையுண்டு என்பதை இதன்மூலம் பிலிப்பீன்ஸ் ஒப்புக் கொண்டுள்ளது. எங்கிருந்து வந்தாலும், யாராயிருந்தாலும், பாகுபாடின்றி இந்த உரிமைகளைப் பெற உரிமையுடையவர்களே என்று பிரகடனத்தின் 2-வது ஷரத்துக் கூறுகிறது. ஜீவாதார உரிமைகளைப் பறிக்கலாகாது, யதேச்சையாகக் கைது செய்வதோ, காவலில் வைப்பதோ, பிரஷ்டம் செய்வதோ கூடாது என்பது 9 வது ஷரத்தின் கருத்து. இவற்றை எடுத்துக்காட்டி அந்நியர்களை வரம்பின்றிக் காவலில் வைத்திருக்க அதிகாரமில்லை என்று அந்நாட்டு சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக் கூறியது.

1951-ம் ஆண்டில் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பற்றிய ஒரு ருசிகரமான வழக்கு ஹாலந்தின் சுப்ரீம் கோர்ட்டுக்கு வந்தது. பத்திரிகைச் சுதந்திரம் உட்பட அரசியல் சட்டம் உறுதி செய்துள்ள உரிமைகளும் சுதந்திரங்களும் எவ்வித வில்லங்கமுமின்றி சர்வ சுதந்திரமாக அனுபவிக்கக் கூடியவையல்ல என்று சர்க்கார் வக்கீல் வாதாடினர். பொது நலனை முன்

ணிட்டு அவற்றின் அனுபோகத்துக்கு இன்றைய உலகில் வரம்பு கட்டுவது நியாயமே என்பது அவருடைய கட்சி. இதை கோர்ட்டார் ஏற்க வில்லை. பொது நலனைக் காரணமாகச் சொல்லித்தான் எங்கும் உரிமைகளைப் பறிப்பது வழக்க மாகிறது. அரசியல் சட்டம் தரும் உரிமைகளுக்கு வரம்பு கட்ட அதிகாரமில்லை என்பதற்கு ஐ. நா. மனித உரிமைப் பிரகடனம் ஒருமுகமாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருப்பதே சான்று என்று அவர் கூறினர்.

பெல்ஜியத்தில் கோர்ட்ராய் என்ற நகரில் ஒரு புதுவகைத் தகராறு வந்தது. மகளை மனோவைத்திய ஆஸ்பத்திரியில் சேர்க்கவேண்டும் என்றார் தந்தை, கூடாது என்றாள் தாய். அவளை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். நிபுணரை அழைத்து பெண்ணின் மனநிலையைச் சோதிக்கச் செய்தார் நீதிபதி. சோதனை முடிவு வந்தவுடன் அவளை ஆஸ்பத்திரியிலிருந்து விடுவிக்குமாறு உத்தரவாயிற்று. இது நடந்தது 1954-ம் ஆண்டில். தமது உத்தரவுக்கு ஆதரவாக நீதிபதி எடுத்துக் காட்டியது மனித உரிமைப் பிரகடனத்தின் மூன்றாவது ஷரத்து. ஒவ்வொருவரும் சுதந்திரமாக, பந்தோபஸ்துடன், நல்வாழ்வு வாழ உரிமையுள்ளவரே என்பது இதன் கருத்து. இரண்டு ஆண்டுகள் கழித்து இதே மாதிரி பரிசோதனை இன்னும் இருவர் விஷயத்தில் உத்தரவாயிற்று.

ஒருவர் எந்த நிலைமையில் நாடற்றவராவார் என்பது இத்தாலியில் 1954-ல் விவாத விஷயமாயிற்று. எந்த நாட்டவன் என்று கருதுவதை தனி மனிதனின் இஷ்டத்துக்குவிட வேண்டும் என்பதுதான் காலப்போக்கையும் ஐ. நா. மனித உரிமைப் பிரகடனத்தின் பதினைந்தாவது ஷரத்தையும் அனுசரித்த நிலை என்று அபிப்பிராயப்பட்டார் நீதிபதி. நாட்டுரிமை பெற ஒவ்வொருவருக்கும் பாத்தியதை உண்டு. அதை மறுக்கவோ, பறிக்கவோ கூடாது; அதை மாற்றிக்கொள்வதற்குள்ள உரிமையையும் மறுக்கலாகாது என்பதுதான் இந்த ஷரத்தின் கருத்து.

* * *

# 7. மனித உரிமை வளர்ச்சி

## ஐ. நா. வின் முயற்சிகள்

1958 மார்ச், ஏப்ரல் மாதங்களில் ஐ.நா. மனித உரிமைக் கமிஷனின் 14-வது கூட்டம் நடைபெற்றது. மனித உரிமைகளின் விஸ்தரிப்பைப்பற்றி ஆலோசனை கூறும் பணிகளை விரிவாக்க, ஐ.நா.விலுள்ள நாடுகளுக்கு நிதியுதவியை அதிகப் படுத்துவது என்று அது முடிவு செய்தது. பல உபகாரச் சம்பளங்களையும், ஆராய்ச்சிக்கான உதவிகளையும் வழங்குவதெனத் தீர்மானிககப்பட்டது.

கிரிமினல் சட்டம், நடைமுறை எவ்வாறுள்ளன என்பதைப்பற்றிய விவாத அரங்கொன்று 1962-ல் நடைபெற வேண்டும் என்றும் அதில் முடிவாயிற்று.

மனித உரிமைகளைப்பற்றி ஒவ்வொரு வருஷமும் நிலவர நூலொன்றை ஐ.நா. பிரசுரித்து வருகிறது. அதைக் குறைந்த அளவில் தொடர்ந்து வெளியிடுவதெனத் தீர்மானிக்கப் பட்டது.

கல்வி வசதிகளை அளிப்பதில் பாகுபாடு பல தேசங்களில் இருந்துவரும் நிலைமையை அறவே அகற்றும் நோக்கத்துடன், அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று என மதிக்கத் தக்க வகையில், அடுத்த கூட்டத்தில் புது உடன்பாடடைத் தயாரிப்பது என்று முடிவாயிற்று. 1959-ம் ஆண்டுப் பேரவை ஜினீவாவில் நடப்பது என்று முடிவு செய்தார்கள்.

குழந்தைகளின் உரிமைகளைப்பற்றிய அறிக்கை பிறகு ஆலோசனைக்கு வரும்.

ஒரு நாட்டில் பிற நாட்டினர் தஞ்சம் அடைவதற்குள்ள உரிமை மிக முக்கியமானது. இதைப்பற்றி திட்டவட்டமான உடன்பாடு இன்னும் ஏற்படவில்லை. இதுவும் 1959-ம் ஆண்டு மகாநாட்டில் பரிசீலனைக்கு வருகிறது.

* * *

ஒவ்வொரு தேசத்திலும் மனித உரிமைகளின் நிலவரம் எப்படி இருக்கிறது என்பதைப்பற்றிய முதல் யாதாஸ்துக்கள் 1958 மார்ச்-ஏப்ரலில் நடைபெற்ற மனித உரிமைக் கமிஷனில் பரிசீலனைக்கு வந்தன. மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை இந்த யாதாஸ்துக்கள் கிடைக்க வேண்டும் என்று 1956-ல் கமிஷன் கூட்டத்தில் முடிவாயிற்று. மனித உரிமைப் பிரகடனத்தில் காணப்பெறும் உரிமைகளைப் பாதுகாக்கும் விஷயமாகவும், சுய நிர்ணய உரிமை விஷயமாகவும் தாம் செய்தது என்னவென்பதை மெம்பர்நாடுகள் தெரிவிக்க வேண்டும் என்பது விதி. முதல் யாதாஸ்தில் 1954, 1955, 1956-ம் ஆண்டுகளில் இருந்த நிலைமை விவரிக்கப்பட்டிருந்தது.

18 நாடுகளைக் கொண்ட மனித உரிமைக் கமிஷன் மார்ச் 10உ கூடியபோது இந்த யாதாஸ்துக்கள் மட்டுமின்றி வேறு சில முக்கியமான தஸ்தாவேஜிகளும் அதன் பரிசீலனைக்கு வந்திருந்தன. செய்திச் சுதந்திரம் எவ்வாறு செயல் படுகிறது என்பதை ஆராய்வதற்காக 1957-ல் நியமித்த கமிட்டி தன் யாதாஸ்தை அனுப்பியிருந்தது. பாகுபாடுகளைக் குறித்தும், மைனரிடிகளின் பாதுகாப்பைபற்றியும் ஒரு உப-கமிஷனது யாதாஸ்தும் வந்திருந்தது.

மனித உரிமைகளின் விஸ்தரிப்புப்பற்றிய பணிகளை விரிவாக்குவது, பிற்பட்ட நிலையிலுள்ள நாடுகளில் இந்த உரிமைகளைப்பற்றிய தகவல்கள் தெரிவதற்காக பிரசுரங்களை வெளியிடுவது, மனித உரிமைகள் மீறப்படுவதாக வரும் புகார்களைக் கவனிக்க கமிட்டியின் நியமனம் ஆகியவை கமிஷனின் பதினன்காவது கூட்டத்தில் செய்யப்பட்ட முக்கியமான முடிவுகளிற் சில. மனித உரிமைக் கமிஷன் 1946-ல் முதலில் கூடியபோது பதினைந்து நாடுகள் அதில் அங்கம் வகித்தன. அதன் முதல் தலைவர் ஸ்ரீமதி எலினுர் ரூஸ்வெல்ட். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மனித உரிமைப் பிரகடனத்தை எதிர்ப்பின்றி ஐ நா. அசெம்பிளி ஒப்புக்கொண்டது. ஒவ்வொரு மனிதனுக்கும் சில அடிப்படை உரிமைகள் உண்டு.

என்பதற்கு உலக நாடுகள் அனைத்தின் அங்கீகாரமும் கிடைத்தது. அதற்கப்புறம் டிசம்பர் 10-ந்தேதி எங்கும் மனித உரிமைகள் தினமாக கொண்டாட்டம் நடத்தி, உரிமைகளைப்பற்றி எல்லோரும் தெரிந்து கொள்ள வசதி ஏற்பட்டது. ஐம்பது மொழிகளில் மனித உரிமைப் பிரகடனத்தை மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள்.

1958-ம் ஆண்டில் 31 தேசங்களிடமிருந்து மனிதவுரிமை நிலவர யாதாஸ்துக்கள் கிடைத்தன. ஐ. நா. வின் நான்கு துணை மன்றங்களும் யாதாஸ்துக்களை அனுப்பின. முப்பத்தைந்து யாதாஸ்துக்கள் கிடைத்தன. அவற்றை ஆராய்ந்து, குறித்த காலத்தில் வந்த முப்பது யாதாஸ்துக்களைச் சுருக்கி, விஷயங்களை ஒழுங்குபடுத்தி மொத்தமாக ஒரு யாதாஸ்தை ஐ. நா. பொதுக் காரியதரிசி கமிஷனிடம் சமர்ப்பித்தார்.

பதினைன்காவது கமிஷனில் பரிசீலனை ஓரளவு நடைபெற்றது. ஆனால் பல்வேறு நாடுகளிடமிருந்துவந்த யாதாஸ்துக்கள் ஒரு சீராக இருக்கவில்லை. எனவே பொதுப்படையான விவாதத்தை நடத்தி, மேல் பரிசீலனையை 1959-ல் கூடும் கமிஷன் தொடர்ந்து கவனிக்கவேண்டும் என்று முடிவாயிற்று. மனித உரிமை யாதாஸ்துக்களை எப்படித் தயாரிக்க வேண்டும் என்பதைப் பற்றிய நடைமுறைக் குறிப்புக்கள்கொண்ட விவரங்களுடன் கூடிய திட்டமொன்றை பொதுக் காரியதரிசி தயாரித்து எல்லா தேசங்களுக்கும் அனுப்பவேண்டும் என்று கமிஷன் கேட்டுக்கொண்டது. தவிர யாதாஸ்துக்களை அனுப்பாத நாடுகள் ஏராளமாக இருந்தன. அவையும் விரைவில் அனுப்பி வைத்தால் மொத்தமான பரிசீலனையை அடுத்த கூட்டத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்று கருதப்பட்டது. இலங்கை, பிரான்ஸ், ஈரான், பிலிப்பீன்ஸ், பிரிட்டன், யு. எஸ். ஆகியவைதாம் இந்தப் பிரேரணையை கொணர்ந்தன.

14-வது கூட்டத்தில் முக்கியமாகக் கவனிக்கப்பட்டது நடைமுறை விஷயந்தான். சர்க்கார்கள் யாதாஸ்துக்களை அனுப்பி வைக்கிறார்கள் என்பதே பயனுள்ள நிகழ்ச்சிதான

யினும், விவரங்களுடன் கூடிய விமரிசனத்தை ஒவ்வொரு நாடும் தருவது பொருத்தமாக இருக்குமென்று கருதப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை யாதாஸ்து வந்தால் போதும் என்ற ஏற்பாட்டை சில நாடுகள் ஆட்சேபித்தன. ஒவ்வொரு வருஷமும் யாதாஸ்து வரவேண்டுமென அவை விரும்பின. ஆனால் மூன்று வருஷ தவணைக்குத்தான் பெரும் பாலான நாடுகளின் ஆதரவு இருந்தது.

ஒரு தனியம்சத்தை கமிஷனின் கவனத்துக்குச் சில மெம்பர்கள் கொணர்ந்தனர். சட்டத்துக்கும் நடைமுறைக்கு மிடையே பல நாடுகளில் விரிவான வேறுபாடுகள் இருக்கக் கூடும் என்றனர் பலர்: எனவே சட்ட நிலைமையைக் கூறுவ துடன் நில்லாமல், சட்டம் அமுலாகி வருவதைப் பற்றிய விவரங்களையும் யாதாஸ்துக்களில் குறிப்பிடவேண்டும் என்று அவர்கள் கோரினர். முதல் யாதாஸ்தில் சாதனைகள்தாம் முக்கியமாக இடம் பெற்றிருந்தன. என்னென்ன சிரமங்கள் குறுக்கிட்டன என்ற தகவல் அறிதாகவே இருந்தது, யாதாஸ் துக்களின் பரிசீலனை பாரபட்சமின்றி இருக்கும் என்பது தெளிவானால் தயக்கமின்றி தகவல்களைத்தர பல தேசங்கள் முன்வரலாம் என்று சிலர் கூறினர்.

யாதாஸ்துக்கள் 1954 முதல் 1956 இறுதிவரையுள்ள மூன்றாண்டுகளைப்பற்றியவை. அவற்றில் காணப்பெறும் சில விஷயங்கள் ருசிகரமானவை. மனித உரிமைப் பிரகடன கருத்துக்களும் விஷயங்களும் புதிதாகச் சுதந்திரமடைந்த பல தேசங்களின் அரசியல் சட்டங்களில் இடம் பெற்றுள்ளன. யாதாஸ்துக்களின் தயாரிப்புக்கான யோசனைகளைக் கொண்ட திட்டத்தில் என்னென்ன விஷயங்கள் இருக்கவேண்டும் என்றும் கவனிக்கப்பட்டது.

மனித உரிமைகளைப் பற்றிய பொது நிலவரம்; ஒவ்வொரு குறிப்பிட்ட உரிமையையும் பற்றி முழுத் தகவல்கள் (செய்த வை, விட்டவை உட்பட) மனித உரிமை சம்பந்தமுள்ள புதிய சட்டம் இயற்றப்பட்டால் எந்த சூழ்நிலையில், எந்தக் காரணத்தால், ஏன் அதை நிறைவேற்ற வேண்டியதாயிற்று

என்ற தகவலையும் விளக்கமாகச் சேர்க்க வேண்டுமெனக் கோரப்பட்டது.

மனித உரிமை வளர்ச்சிக்கான ஆலோசனைப் பணிகளின் விஸ்தரிப்பைக் கோரும் தீர்மானமொன்றை அமெரிக்கா பிரேரித்தது. நிதி உதவிப்பெருக்கு இதன் முக்கிய அம்சம். இதைப்பற்றிய தகவலை வருஷாவருஷம் பொதுக்காரியதரிசி தரவேண்டும் என்றும் தீர்மானம் கோரியது பிரான்சையும் பிரிட்டனையும் தவிர மற்ற 15 நாடுகள் அதை ஆதரித்தன.

யதேச்சையாகக் கைது செய்து காவலில் வைக்கலாகாது என்ற உரிமையைப் பற்றிய யாதாஸ்து மேல் பரிசீலனைக்கு உரியது என்று கருதப்பட்டது.

கருத்துரை அரங்குகளின் அமைப்பையும் பிரயோசனத்தையும் பற்றி விவாதம் நடந்தது. அந்தப் பகுதியிலுள்ள நாடுகளுக்கு என்று இவற்றை நடத்துவதில் சங்கடங்கள் இருப்பதாகச் சிலர் கூறினர். ஒரே விஷயத்தை ஒரு மத்திய அரங்கில் கவனிக்காமல், பல்வேறு பிராந்திய அரங்குகளில் விவாதிப்பது அதிகப் பயனுள்ளதாக இருக்கும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குள் எல்லா மனித உரிமைகளையும் பற்றி கருத்தரங்குகள் நடை பெறும் வகையில் திட்டமிடவேண்டும என்ற அபிப்பிராயம் பொதுப்படையாகத் தெரிவிக்கப்பட்டது.

சரியான செய்திகளைச் சேகரித்துப் பிரகாசப் படுத்துவ தற்கு பிற்பட்ட தேசங்களுக்கு பொருளாதார கவுன்சிலும் உனெஸ்கோவும் உதவியளிக்கவேண்டும் எனக்கோரும் தீர் மான மொன்றை இந்தியாவும் வேறு மூன்று நாடுகளும் கொணர்ந்து நிறைவேற்றிவைத்தன. இந்த விஷயம் வருஷா வருஷம் தொடர்ச்சியாகப் பரிசீலிக்கப்படவேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறியது.

உபாத்தியாயர்களையும் சர்க்கார் ஊழியர்களையும் தயாரிக்கும் பயிற்சிப் பள்ளிகளில் மனித உரிமைப் பிரகடனம் பாடத்திட்டத்தில் இடம் பெறவேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறியது.

கல்வி விஷயங்களில் பாகுபாடு காண்பிப்பது என்பதைக் குறித்து நடந்த விவாதத்தில் தீவிரமான கருத்து மாறுபாடு கள் வெளிப்பட்டன. எந்தப் பிரிவுக்கும் எதிரிடையாகப் பாகுபாடு செய்யலாகாது என்ற பொதுவிதி போதுமானது என்று சிலர் கருதினர். நேரிடையாகவோ மறைமுகமாகவோ எவர் விஷயத்திலும் எந்தப் பாகுபாடும் செய்யப்படலாகாது என்று வேறு சிலர் கூறினர்.

மனித உரிமைகள் மீறப்படுவதாக வரும் புகார்கள் கவனிக்கப்படும் விதம் திருப்திகரமாக இல்லையென்று பல மெம்பர்கள் புகார் செய்தனர். ஆயிரக்கணக்கான கடிதங்கள் இவ்விஷயமாக கமிஷனுக்கு வருகின்றன. பலர் உதவி கோருகின்றனர். புகார் தாக்கல் செய்து கொள்ளப்பட்டிருப்ப தாக பதில் எழுதுவதற்கு மேல் பெரும்பாலும் ஒன்றும் செய்யப்படுவதில்லை. தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அனுப் பும் பதில், விஷயம் கவனிக்கப்பட்டு வருவதாக ஒரு தப்பபிப் பிராயத்துக்கு இடம் தருகிறது. எனவே இம்மாதிரி பதிலை அனுப்புவதை விட சும்மா இருக்கலாம் என்றார் ஒரு பிரதி நிதி. எப்படி இவற்றைக் கவனிப்பது என்பதைப் பரிசீலிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. கமிட்டியின் நியமனத்தை ஒன்பது நாடுகள் ஆதரித்தன, ஏழு எதிர்த்தன.

யதேச்சையாகக் கைது செய்து காவலில் வைக்கும் விஷ யம் வந்தபோது ரஷியா, போலந்து ஆகியவை ஒரு தனி உரி மையைப்பற்றி விரிவான பரிசீலனை தேவையில்லை, மொத்த மாக விமரிசனம் செய்தால் போதும் என்று வாதித்தன. "யதேச்சையாக" என்ற சொல்லின் பொருள் மீது விசேஷ சர்ச்சை நிகழ்ந்தது. விரிவான விளக்கத்தை அளிக்க வேண் டும் என்ற கருத்து பரவலாகக் காணப்பட்டது. மேல் பரி சீலனையை ஒத்திவைப்பது என்று முடிவு செய்தார்கள்.

மத உரிமைகள், நடைமுறைகள், ராஜீய உரிமைகள், வேலை வாய்ப்பு முதலியவைபற்றி ஒரு துணைக்கமிஷன் பூர் வாங்க யாதாஸ்தைச் சமர்ப்பித்திருந்தது. மத உரிமைக் கமிட்டியின் தலைவர் டாக்டர் ஏ. கிருஷ்ணசுவாமி. இறுதி

யாதாஸ்தை அவர் சமர்ப்பிக்க 1960 வரை வாய்தா தரப்பட்டது. ராஜீய உரிமைக் கமிட்டி, வேலை வாய்ப்புக் கமிட்டி ஆகியவை இன்னும் தமது யாதாஸ்துக்களைத் தயாரிக்கவில்லை.

மனித உரிமைக் கமிஷன் ஒவ்வொரு ஆண்டும் கூட வேண்டும் என்று முடிவாயிற்று. முதலில் இப்படிக் கூடலாம், பிறகு இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை கூடினல் போதும் என்ற கருத்து பொதுப்படையாகத் தெரிவிக்கப்பட்டது. 1959 கூட்டம் ஜீனிவாவில் நடப்பது என்றும் முடிவாயிற்று.

## கருத்தரங்குகள்

1957 ஆகஸ்டில் பாங்காக்கில் மனித உரிமைப்பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. தமது நகர சபை அல்லது பஞ்சாயத்துக்கள் ஆற்றும் பணிகளைக் குறித்து மக்களுக்குள்ள பொறுப்பு அதில் கவனிக்கப்பட்ட விஷயங்களில் ஒன்று. பொது வாழ்வின் ஆசிய மாதர் அதிகமாகப் பங்கு பெறும் விஷயம் மற்ருென்று. ஆட்சியிலும் பொது வாழ்விலும், சமுதாய வளர்ச்சித் திட்டங்களை நடத்தி வைப்பதிலும் மாதர் பங்கு பற்றுவது அதிகப் பயன் தருவதாக அமையும் என்ற அபிப்பிராயம் பரவலாகத் தெரிவிக்கப்பட்டது.

பிலிப்பீன், சிலி நாடுகளில் 1958-ல் இரண்டு கருத்தரங்குகள் நடைபெற்றன. கிரிமினல் சட்டம், நடைமுறை ஆகியவற்றை அலசிப் பார்த்து மனித உரிமைகளைப் பாதுகாக்க என்ன செய்ய வேண்டும் என்பது இந்த பிராந்திய ஆலோசனைகளில் கவனிக்கப்பட்டது. சாதனைகளையும் சிரமங்களையும் பற்றிய தகவல்களை இம்மாதிரி பரிமாறிக் கொள்வது மனித உரிமைகளைப்பற்றிய கருத்துக்கள் தெளிவுபட்டு, செயலாற்றுதலுக்குத் துணைபுரியும் என்ற நம்பிக்கையை ஐ. நா. காரியதரிசி தெரிவித்துள்ளார்.

## 10-வது ஆண்டு விழா

1958 டிசம்பர் 10 ந்தேதி உலகெங்கும் மனித உரிமை தினமாக விசேஷ குதூகலத்துடன் கொண்டாடப்பட்டது.

மனித உரிமைப் பிரகடனம் வெளியான தினத்தின் பத்தாண்டு நிறைவு நாள் ஐ. நா. தலைமைக் காரியாலயத்தில் அசெம்பிளியின் தனிக்கூட்டம் இதற்காக நடந்தது. மனித உரிமைக் கமிஷன் தலைவரான ஸ்ரீ குணவர்த்தனேயும் அவருக்கு முன் இப்பதவியை வகித்த பெரியவர்களில் மூவரும், பிரகடனத்தின் சாதனைகளை விமரிசனம் செய்து பேசினர். மனித உரிமைகள் எங்கும் எல்லோருக்கும் கைகூடச் செய்வது ஐ.நா.வினுல் மட்டும் சாத்தியப்படாது; ஒவ்வொரு நாட்டிலும், சர்க்காரிலும் அதற்கு வெளியிலுமுள்ளவர்கள் உற்சாகத்துடன்கூட உழைப்பதன் மூலந்தான் ஏற்றம் காண முடியும் என்று கமிஷனின் முதல் தலைவரான ஸ்ரீமதி எலினுர் ரூஸ்வெல்ட் கூறினுர். அடுத்த பத்தாண்டுகளில் பிரகடனத்திலுள்ள மனித உரிமைகளெல்லாம் எல்லோருக்கும் கிடைக்கும்படி பாடுபடவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

ஸ்ரீ குணவர்த்தனே இரண்டு யோசனைகளைக் கூறினுர். பிரகடனத்திலுள்ள உரிமைகள் விஷயமாக உடன்பாடுகளை ஒவ்வொன்ருகத் தயாரித்து ஐ.நா. அசெம்பிளி ஒப்புக்கொள்ளச் செய்யும் பணி நடந்து வருகிறது; ஆனுல் சில உரிமைகள் விஷயத்தில்தான் இது பூர்த்தியாகி யுள்ளது; இன்னும் பல பாக்கியாக இருக்கின்றன. தனி மகாநாட்டை இதற்கென்றே கூட்டி எல்லா உடன்படிக்கைகளையும் பூர்த்தி செய்து விட வேண்டும் என்பது ஸ்ரீ குணவர்த்தனுவின் முதல் யோசனை. மனித உரிமைகள் மீறப்படுவதாக வரும் புகார்கள் சரிவர உடனுக்குடன் கவனிக்கப்படுவது அவசியம் என்றும் அவர் கூறினுர். இதுவரை அம்மாதிரி 64,000 புகார்கள் கமிஷனுக்கு வந்திருப்பதாக அவர் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட சர்க்கார்களுக்கு அவற்றை அனுப்பி வைத்து தகவல் கேட்பதுதான் இப்பொழுது பின்பற்றப்படும் நடைமுறை. புகார்களை அனுப்பியவர்களுக்கு இது நியாயம் வழங்குவதாகாது; மனச்சாட்சிப்படி ஐ.நா. தன் கடமையைச் செய்தது என்றும் சொல்வதற்கில்லை என்ருர் ஸ்ரீ குணவர்த்தனே.

புகார்களை விசாரிக்க ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டும் என்று பிரான்சைச் சேர்ந்த காஸ்ஸீன் தெரிவித்தார். சில குறைந்தபட்ச நடவடிக்கைகளை இவ்வகையில் தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும் என்பது அவரது யோசனை. சிவில் உரிமைகளையும் ராஜீய உரிமைகளையும்பற்றிய புகார்களை இந்தக் கமிட்டி கவனிக்கலாம் என்று அவர் அபிப்பிராயப் பட்டார்.

மனித உரிமைப் பிரகடனத்தை இன்னும் அதிகச் செல்வாக்குள்ளதாகச் செய்ய வேண்டுமென வற்புறுத்தினர். ஐ.நா. அசெம்பிளித் தலைவர் டாக்டர் மாலிக் மனித உரிமை தினத்தன்று சாதனைகளை எடுத்துரைத்து, செய்ய வேண்டியிருப்பதை தொகுத்துச் சொல்வது அவசியமெனக் கூறினர். ஐ.நா. பொதுக்காரியதரிசி தேசங்களை ஆள்வோர் மட்டுமின்றி தனிப்பட்டவர்களும் ஆத்ம பரிசோதனை செய்து கொண்டு, தார்மிகப் பொறுப்பாகிய மனித உரிமை விஸ்தரிப்பில் ஈடுபாடு கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

# 8. எதிர்காலம்

ஐ.நா. அசெம்பிளியில் மூன்ருவது கமிட்டி என்ற ஒரு அமைப்பு உண்டு. ஒவ்வொரு ஆண்டும் இதன் கூட்டத்தில் மனித உரிமைகள் விஷயமாக விரிவான பரிசீலனை நடைபெறுவது வழக்கம். ஐ.நா. இவற்றின் வளர்ச்சிக்காக என்ன செய்து வருகிறது என்பதுதான் இதில் முக்கியமாகக் கவனிக்கப்படும் விஷயம். இதில் அக்கறையுள்ள ஐ.நா. ஸ்தாபனங்கள் பலவுண்டு. மனித உரிமைக் கமிஷன், பொருளாதார, சமூக கவுன்சில், மாதர் அந்தஸ்து பற்றிய கமிஷன், பாகுபாட்டைத் தவிர்த்து மைனுரிட்டிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதுபற்றிய துணைக்கமிஷன், உனெஸ்கோ, ஐ.எல்.ஓ. ஆகியவை அவற்றில் சில அமைப்புக்கள். ஆனுல் ஐ.நா. அசெம்பிளிதான் எல்லாவற்றையும் மேல் பார்த்து, இறுதியாக அங்கீகரித்து, மேல் நடவடிக்கைகளுக்கு வசதி செய்து தரும் ஸ்தாபனம். மூன்ருவது கமிட்டி எனப்படும் மதிப்பீட்டுக் கமிட்டி பல விஷயங்களைக் கவனிக்கிறது அவற்றில் மனித உரிமை விஷயங்கள் மிக மிக முக்கியமானவை. சென்ற ஆண்டின் இறுதியில் மூன்ருவது கமிட்டி கூடி பல விஷயங்களை ஆராய்வதாக இருந்தது. மனித உரிமைகளை ஒழுங்காக அமுல் செய்வதற்கு ஏற்றபடி உடன்பாடுகளை நிறைவேற்றி வைப்பது அவற்றில் ஒன்று. ஆனுல் இம்மாதிரி உடன்பாடுகளைத் துரிதப்படுத்துவதைப்பற்றி ஐ. நா. மெம்பர்-நாடுகளிடையே கருத்து வேற்றுமை கொஞ்ச காலமாக வளர்ந்து வந்துள்ளது. உடன்பாடுகளைத் தயாரிக்கும் நடைமுறைகளில் அமெரிக்காவும் வேறு சில நாடுகளும் கொஞ்ச காலமாக ஈடுபட மறுத்து வருகின்றன. உடன்பாடுகள் அவசியமென்று அவை நினைக்கவில்லை. உடன்பாட்டு முறையில் எவ்வளவோ கோளாறுகள் இருந்தபோதிலும், உலகெங்கும் மனித உரிமைகள் வளர்ச்சி காணச்செய்ய அது நல்ல பயனுள்ளது என்று பெரும்பாலான நாடுகள் கருதுகின்றன.

எனவே அந்த முறை அடியோடு கைவிடப்படாமல் நீடித்து இருந்து வருகிறது; ஆனால் உடன்பாடுகள் உருப்பெறுவதில்தான் வர வர அதிகத் தாமதம் ஏற்பட்டு வருகிறது. உடன்பாடுகளைவிட செயல்முறை வேலைத் திட்டமே அதிக பயனுள்ளது என்று 1953-ம் ஆண்டில் அமெரிக்கா கூறியது. இந்தப் பிரேரணையின் விளைவாகத்தான் வளர்ச்சிக்கான ஆலோசனைப் பணிமுறை என்பது ஏற்பாடாயிற்று. இந்த முறையைத்தான் மூன்ருவது கமிட்டி கவனித்து, மேலும் விஸ்தரிக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்தது. பிற்பட்ட நாடுகளில் செய்திச் சுதந்திரம் உருப்பெறுவதற்கான தகவல்-சேகர அமைப்புக்களை உருவாக்க வேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட மற்ருெரு விஷயம்.

மனித உரிமைகளில் ஒன்று தேசங்களுக்கும் மக்களுக்குமுள்ள சுய நிர்ணய உரிமை 1951-ம் ஆண்டு முதல் ஐ.நா. வின் மூன்ருவது கமிட்டியின் முன் இது பல தடவை வந்துள்ளது. அரபு நாடுகளும் சுதந்திர ஆசிய நாடுகளும், அல்ஜீரிய, சைப்ரஸ், காமெருன்ஸ் உட்பட பல தேச மக்களின் சுய நிர்ணய உரிமையை வற்புறுத்தி வந்துள்ளன.

மனித உரிமை ஒவ்வொன்றையும் பற்றி உடன்பாட்டைக் கவனிப்பதும் மூன்ருவது கமிட்டிதான். 1957-ல் பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகளைப்பற்றிய உடன்பாட்டில் மூன்று ஷரத்துக்களை அது ஒப்புக்கொண்டது. ராஜீய, சிவில் உரிமைகளைப்பற்றிய உடன்பாட்டில் ஒரு ஷரத்து ஏற்கப்பட்டது. 1958-ம் ஆண்டுக்குள் எல்லா உடன்பாடுகளும் பூர்த்தியாகிவிட வேண்டும் என்பது 1956-ல் ஐ.நா. அசெம்பிளி செய்த தீர்மானம். ஆனுல் எதிர்பார்த்த வேகத்தில் இந்த வேலைகள் நடைபெறவில்லை. வேலையை முடுக்கிவிடுவதற்குப் பல யோசனைகள் கூறப்பட்டுள்ளன. எனினும் கணிசமான அபிவிருத்தி இதுவரை ஏற்படவில்லை.

பொருளாதார, சமூக கலாச்சார உரிமைகளைப் பற்றிய உடன்பாட்டில் நிறைவேறிய மூன்று ஷரத்துக்கள் (1) கல்வி பெற உரிமை, (2) கலாச்சார வாழ்வில் பங்கு பற்ற உரிமை,

(3) விஞ்ஞான வளர்ச்சியின் அனுகூலங்களை அனுபவிப்பதற்குள்ள உரிமை ஆகியவற்றைப் பற்றியவை. ராஜீய, சமூக உரிமைகளைப் பற்றிய உடன்பாட்டில் நிறைவேறிய ஒரே ஒரு முக்கியமான ஷரத்து வாழ்வதற்குள்ள உரிமைக்கு பொதுப்படையாக அங்கீகாரம் தருவது மனித உரிமைகளின் வளர்ச்சிக்கான ஆலோசனைப் பணிபற்றி மூன்று கருத்தரங்குகள் நடைபெற்ற விஷயம் ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது.

பல ஆசிய நாடுகளில் பொறுப்பான பதவிகளை வகிக்கும் மாதர், பாங்காக்கில் நடந்த தனி மகா நாட்டில் கலந்து கொண்டு, தமது அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டது பெரிய வெற்றி என்று கருதப்பட்டது. கிரிமினல் சட்டம், நடைமுறை பற்றி பிலிப்பீன்ஸில் நடைபெற்ற கருத்தரங்கில் பல தேசங்களைச் சேர்ந்த நீதிபதிகள், சர்க்கார்-வக்கீல்கள், போலீசார், காலேஜ் பேராசிரியர்கள், சர்க்கார் அதிகாரிகள் போன்றோர் கலந்து கொண்டனர். சட்டமும் நடைமுறையும் சம்பந்தப்பட்ட மற்ற விஷயங்களில் இதில் இணக்கமாகப் பரிசீலிக்கப் பெற்றன.

1958 மேமீ சிலியில் நடந்த கருத்தரங்கிலும் கிரிமினல் சட்டம், நடைமுறைபற்றிய ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்றது. நீதி மன்றங்களின் நடவடிக்கைச் சுதந்திரம், கைதியானவர்கள், காவலில் வைக்கப்படுவோர் போன்றோரின் உரிமைகள் (குடும்பத்தினருக்கு உடனே தகவல் தருவது, வழக்கறிஞர் உதவி அளிப்பது உட்பட) பலதரப்பட்ட பயனுள்ள அனுபவங்கள் இங்கு பரிமாறிக்கொள்ளப்பட்டது.

செய்திச் சுதந்திரம் பற்றிய நகல்-உடன்பாடு தயாராகி சில ஆண்டுகளாகிவிட்டன. அமெரிக்கா மனது வைத்தால் இதை ஐ. நா. அசெம்பிளி ஒப்புக்கொள்ளும்படி செய்வது சுலபம்; அதற்கு வேண்டிய வோட்டுக்கள் எளிதில் கிடைக்கும் என்று சவூதி அரேபியப் பிரதிநிதி கூறினர். ஆனால் இதை நிறைவேற்றி வைத்து தனது நேச நாடுகளில் சிலவற்றைச் சங்கடத்தில் ஆழ்த்த அமெரிக்கா விரும்பாததால் தான் அது இன்னும் நிறைவேறவில்லை என்பது தெளிவு

(1) செய்திகளை சுதந்திரமாக அனுப்புவது, (2) செய்தி வெளியீடுகளின் உரிமைகளும் பொறுப்புக்களும், (3) ஐ. நா. வும் துணையமைப்புக்களும் இத்துறை விஷயமாகச் செய்துள்ள பணிகள் ஆகியவைபற்றிய யாதாஸ்துக்களையும் சிபாரிசுகளையும் செய்திச் சுதந்திரக் கமிட்டி தயாரித்து வெளியிட்டுள்ளது.

## சுய நிர்ணய உரிமை

. சுய நிர்ணய உரிமை விஷயத்தைக் கவனிக்க மூன்று கமிஷன்கள் தேவை என்று 1957-ல் வற்புறுத்தப்பட்டது. (1) தமது இயற்கை வளங்களையும் செல்வத்தையும் சாசுவதமான ஆதிபத்திய அதிகாரத்துடன் ஆண்டு அனுபவிப்பதற்குள்ள உரிமைகள் எவ்வாறு இருக்கின்றன என்ற நிலவரத்தை சேகரித்து, இந்த உரிமைகளை பலப்படுத்துவதற்கான சிபாரிசுகளுடன் வெளியிடுவது. 2) இந்த உரிமை மறுக்கப்படுவதாக வரும் புகார்களைக் கவனித்து சமாதானச் சூழ்நிலையில் பைசலைக் காணத்துணைபுரிவது (3) சுயநிர்ணயம் என்ற கருத்தை—நுட்பமாக ஆராய்வது. முதலிரண்டையும் காலனியாட்சி முறையை எதிர்க்கும் நாடுகளும், மூன்றுவதை காலனிகளை வைத்துக் கொண்டிருக்கும் நாடுகளும் வற்புறுத்தின. சுயநிர்ணய உரிமை அடிப்படையானது என்று முதல் கோஷ்டி வாதிக்கிறது. அடிப்படை உரிமை தனி நபர்களுக்கு உண்டேயன்றி பலர் சேர்ந்த சமுதாயத்துக்கு அல்ல என்பது மற்றக் கட்சியின் வாதம். முடிவெதையும் இதுவரை காண முடியவில்லை. இவ்வாண்டிலும் இது பரிசீலனைக்கு வருகிறது

## தென் ஆப்பிரிக்காவின் தனிப்போக்கு

ஐ.நா தோன்றியது முதல் இதுவரை வருஷம் தவருமல் அதன் பல அமைப்புக்கள் கவனித்து தீர்மானங்களை நிறைவேற்றி வந்துள்ள விஷயம் தென் ஆப்பிரிக்க சர்க்காரின் போக்குத்தான். அங்கு சிறுபான்மையோரான வெள்ளையருக்குத்தான் பிரஜா உரிமை உண்டு. பெரும்பாலோரான பிற இனத்தவருக்குக் கிடையாது. இன அடிப்படையில் ஜாகைகளையும், வேலை ஸ்தலங்களையும், வாழ்க்கை வசதிகளை

யும பிரித்து இன மண்டல வாழ்க்கையை மக்கள் மீது நிர்ப் பந்தமாக அங்கு திணித்து எண்ணற்ற கஷ்டங்களுக்கு அங் குள்ள ஆப்பிரிக்கரையும், இந்திய வமிசா வழியினரையும் பிற ஆசியாக்காரர்களையும் வதைத்து வருகிறார்கள். இவற்றில் ஒரு அம்சத்தையோ அல்லது பலவற்றையோ கண்டித்துத் தீர்மானத்தை நிறைவேற்றாத ஐ.நா. அசெம்பிளிக் கூட்டமே இல்லையென்று சொல்லலாம். ஆனால் ஆப்பிரிக்காவில் காலனி களை வைத்திருக்கும் ஐரோப்பிய நாடுகள் முழு மனதுடனும், அமெரிக்கா மறைமுகமாகவும் கொடுத்து வரும் ராஜீய ஆதர வின் காரணமாக, உலக அபிப்பிராயத்தை துச்சமாக மதித் துப் புறக்கணித்து வருகிறது தென் ஆப்பிரிக்கா. தன் கொள்கையை மறு பரிசீலனை செய்யவேண்டுமென ஒவ் வொரு ஆண்டும் தென் ஆப்பிரிக்க சர்க்காரை ஐ.நா. தீர்மா னம் கேட்கிறது. இது உள்நாட்டு விவகாரம் என்று சொல்லி, இதை விவாதிக்கவோ இதைப்பற்றித் தீர்மானிக்கவோ ஐ.நா.வுக்கு அதிகாரமில்லை என்று அது விவாதித்து வருகி றது. தன் ஆட்சேபணையை வலியுறுத்தும் வகையில் நடு வில் இரண்டு வருஷ காலம் ஒரு நோக்கரை மட்டும் அனுப்பி விட்டு மற்றபடி நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாமல் இருந்து வந்தனர் அந்நாட்டின் சர்க்கார். இவ்வாண்டு தமது ஆட்சேபணையைக் கைவிடாமல் நடவடிக்கைகளில் மட்டும் அவர்கள் கலந்து கொள்கிறார்கள். தென் ஆப்பிரிக்க இனப் பிரச்னையை, உலகெங்குமுள்ள இனப்பிரச்னையின் பகுதியாக மதித்து உலக வியாபகமான பரிசீலனையை மேற்கொண் டால், தென் ஆப்பிரிக்கா ஒருக்கால் ஒத்துழைக்கக் கூடும் என்று முந்திய ஐ.நா. அசெம்பிளிக் கூட்டத்தில் யு.எஸ் பிரதிநிதி சொல்லிப் பார்த்தார். தென் ஆப்பிரிக்கா விஷயத் தில் உறுதி தளரவே கூடாது என்று பல ஆசிய நாடுகள் வற்புறுத்தின.

ஐ.நா.வின் மனப்பான்மையில் சமரசப் போக்கு சற்று அதிகமாகக் காணப்பட்டபோதிலும் தென் ஆப்பிரிக்கா சளைக்கவில்லை. அது மட்டுமல்ல. அதன் சட்டதிட்டங்கள் முன்னைவிட அதிக மோசமாகின்றன. ஹோட்டல்கள், **சினி**

மாக்கள் தனித்தனியாக இருக்கவேண்டுமென சட்டமியற்றி யுள்ளனர். சிலவகை வேலைகள் இந்த இனத்தவருக்குத்தான் என்று சட்டம் செய்துள்ளனர். வெள்ளையருக்கு மட்டும் வேலை விஷயத்தில் முழுச் சுதந்திரம் உண்டு. இதுவரை வேறு இனத்தவர் மிகுதியாயிருந்த ஆடைத் தயாரிப்புத் தொழில் வெள்ளையர்களின் ஏகபோக மாக்கப்பட்டுள்ளது. தேசத்தில் பத்தில் ஒன்பது பங்கை ஆறில் ஒரு பங்கினரான வெள்ளையரின் ஏகபோக உரிமைப் பிரதேசம் என்று சட்ட மியற்றி விட்டார்கள். உலக அபிப்பிராயம் இந்தப் போக்கை யெல்லாம் கண்டித்து வருவது வீண் போகவில்லை. பெரிய உரிமைப் போராட்டங்களை காந்திய முறையில் நடத்துவதற் கான தைரியத்தை வெள்ளையரல்லாதாருக்கு அது அளித்துள் ளது தவிர இப்போதைய போக்கை பகிரங்கமாக எதிர்க்கும் மனிதாபிமானம் படைத்த வெள்ளையர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் தென் ஆப்பிரிக்காவிலேயே அதிகரித்து வருகிறது. மேலும் ஆப்பிரிக்காவில் பல புதிய நீக்ரோ-நாடுகளும் அரபு சமுதாயங்களும் சுதந்திரம் பெற்றிருப்பதன் விளைவாக, தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக நிர்ப்பந்தங்களைப் பிரயோகித்து அதை நல்வழிக்குத் திருப்பும் முயற்சிகள் கட் டுப்பாடாக நடந்து வருகின்றன. கிரீஸ், அயர்லாந்து முதலி யவை ஆசிய நாடுகளுக்கு ஐ நா வில் ஆதரவு காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

இனமண்டலக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள சமூகத்தினரில் இந்திய வம்சாவழியினரும் இருக்கிறார் கள். இந்தியாவும் பாகிஸ்தானும் தென் ஆப்பிரிக்க சர்க்காருடன் பேசி உடன்பாடு காணவேண்டும் என்று ஐ. நா. அசெம்பிளி பணித்தது. ஆனால், பேச்சுக்குத் தேதி குறிப்பிடுமாறு அனுப்பிய அழைப்புகளுக்குத் தென் ஆப்பிரிக்க சர்க்கார் பதில்கூடப் போடவில்லை. இதனால் இது மீண்டும் விவகார விஷயமாகிவிட்டது. பிரிட்டனும் அமெரிக் காவும் கடமை உணர்ச்சியுடன் நடந்து கொள்ள முன் வந்தா லன்றி அமைதியான முறையில் தென் ஆப்பிரிக்க சர்க்காரின் போக்கை மாற்ற முடியாது. ஐ. நா. வின் சாஸனம். மனித

உரிமைப் பிரகடனம் ஆகியவற்றையும் தீர்மானங்களையும் துச்சமாக மதிக்கும் அந்த நாட்டை உலக பகிஷ்காரத்துக்கு உட்படுத்துவது ஒன்றுதான் பயனளிக்கும் போலத் தோன்றுகிறது. அதற்கான இயக்கமும் தோன்றியுள்ளது. ஐ. நா. விலிருந்து இந்நாட்டை விலக்கிவிடுவதும் நியாயமாக இருக்கும் வல்லரசுகள் இனியும் வாளாவிருந்தால் சுதந்திர ஆப்பிரிக்க தேசங்கள் தம்மிஷ்டப்படி ஒருமுகமான தனி நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்; பிற அரபு, ஆசிய நாடுகள் அவற்றை ஆதரிக்கும். அதன் விளைவு பிரமாதமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

## பிறநாடுகளில்

உரிமையுள்ளோருக்கு அதை மறுத்து நாடற்றவர்களாக்கி, பிழைப்புக்கான வாய்ப்புகள் விஷயத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாகுபாடு செய்து இந்திய வமிசாவழியினருக்கு மனித உரிமைகளே இல்லாதபடி செய்துவரும் அக்கிரமம் இலங்கையிலும் வளர்ந்து விட்டது. ராஜீய காரணங்களுக்காக இதை ஐ. நா. வில் இந்தியா சர்க்கார் இன்னும் விவகார விஷயமாக்கவில்லை. ஆனால் இப்போதைய போக்கு நீடித்தால் என்னவாகும் என்று சொல்வதற்கில்லை.

ஹிந்து மைனாரிட்டி விஷயத்தில் கொடுமைகள் பல புரிந்து, பாகுபாடு செய்து, அகதிகளாக அவர்கள் ஓடும்படி பாகிஸ்தான் செய்து வரும் அக்கிரமம் மனித உரிமைப் பிரகடனத்தை மீறியதுதான். பர்மாவிலும் மலேயாவிலும் சிங்கப்பூரிலும் சட்டபூர்வமாக இல்லாமல் நடைமுறை மூலம் பாகுபாடுகள் இந்திய வமிசாவழியினருக்கு எதிரிடையாக செய்யப்பட்டு வருகின்றன என்று புகார்கள் கிளம்பியுள்ளன.

'பிரிட்டன் போன்ற முற்போக்கான நாடுகளிலேயே வெள்ளையரல்லாத காமன்வெல்த் பிரஜைகள் வேலை பெறுவதை எதிர்த்து தொழிற்சங்க வாதிகள் கூட ஆட்சேபிக்க முற்பட்டுள்ளனர். ஆனால் சட்டபடியோ நடைமுறையிலே பிரிட்டனில் பாகுபாடு குறிப்பிடத்தக்கவாறு இல்லை. பாகு

பாடு கூடாது என்று பொறுப்புள்ளவர்கள் கூறிவருகிறார்கள்.

## இந்தியாவில் மனித உரிமைகளின் நிலவரம்

பால், பிறப்பிடம், இருப்பிடம், நிற, இன, மத, ஜாதி காரணமாக மக்களிடையே எவ்விதமான பாகுபாடும் செய்யலாகாது என்ற பிரதான நியதி இந்தியாவின் அரசியல் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இவையும் மனிதஉரிமை பிரகடனத்திலுள்ள மற்ற உரிமைகளும் நமது அரசியல் சட்டத்தில் ஏழுவகை ஜீவாதாரஉரிமைகளாக 14முதல் 18ஷரத்து வரை) சேர்க்கப்பட்டுள்ளன. ஹரிஜனங்களுக்கும் பிற்பட்ட நிலையிலுள்ள வகுப்புகளுக்கும் கல்வி விஷயத்திலும் வேலைகள் விஷயத்திலும் வீதாசாரங்களை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் மலைஜாதிகளுக்குச் சில விசேஷச் சலுகைகள் தரப்பட்டுள்ளன. எல்லா அடிப்படைச் சுதந்திரங்களும் ஜீவாதார உரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆண், பெண் சமத்துவம் நமது அரசியல் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டிருப்பதுபோல இன்னும் பல மேலைநாடுகளில்கூட இன்னும் அமையவில்லை. உதாரணமாக பிரிட்டனில் ஒரே வேலைக்கு ஆண்களுக்கு வேறு கூலி விகிதம், பெண்களுக்கு வேறு கூலி விகிதம் இன்னும் இருந்து வருகிறது. நம் நாட்டில் பால் வேற்றுமையின்றி சம வேலைக்கு சம கூலி தரப்படுகிறது. வேலை வாய்ப்புக்கள் விஷயத்திலும் பெண்களுக்கு இங்கு அதிக உரிமை உண்டு. ஸ்விட்சர்லாந்து எவ்வளவோ முற்போக்கான நாடு. ஆனால், பெண்களுக்கு வோட்டுரிமை தர வேண்டும் என்ற பிரேரணை பல தடவை கவனிக்கப்பட்டு அண்மையில்கூட அங்கு நிராகரிக்கப்பட்டுவிட்டது. எல்லா பிரஜைகளுக்கும் சமவுரிமை, பாகுபாடின்மை நம் நாட்டில் சட்டபூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளன. கோர்ட்டுகள் மூலம் ஜீவாதார உரிமைகளை உறுதி செய்துகொள்ளும் உரிமை ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு. நல்வாழ்வும் சம சந்தர்ப்பமும், வேலை வாய்ப்புகளும் எல்லோருக்கும் கிடைக்கச் செய்வதற்கு அரசாங்கம் பாடுபடவேண்டும் என்று சொல்லி

சில கட்டளைக் கோட்பாடுகளும் (Directive Principles) நமது அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. ஜீவாதார உரிமைகளை உறுதி செய்யக் கோர்ட்டுகள் இருக்கின்றன. கட்டளைக் கோட்பாடுகளை சமூக, ராஜ்ய நிர்ப்பந்தங்கள் மூலமாகவும், பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டியுந்தான் அடைய முடியும். இந்தக் கோட்பாடுகளில் ஒன்று மதுவிலக்கு. இதை சட்டத்தின் மூலம் நாட்டின் பல பகுதிகளில் அமுல் நடத்தி வருகிறார்கள். இது சரியான வழிதானு, ஒரு வகைச் 'சுதந்திரத்தை'ப் பறிப்பதாக இல்லையா என்பது சர்ச்சைக்குரிய விஷயந்தான்.

நம் நாட்டின் நெடு நாளைய சாபத்தீடு தீண்டாமை. மனித உரிமைகளைப் பற்றிய சிந்தனைகள் மேலைநாடுகளில் கோர்வையாக உருப்பெறுவதற்கு முன்னமேயே இது மனிதனது கண்ணியத்துக்கும் சிறப்புக்கும் முரண்பட்டது என்பதை உணர்ந்து, இதை ஒழிக்க முற்பட்டார் மகாத்மா. சென்னை ராஜ்யத்தில்தான் முதன் முதலாக இது சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டது. பிறகுதான் அரசியல் சட்டத்தில் தீண்டாமையொழிப்பை உறுதி செய்தார்கள். சட்டபூர்வமாக மட்டுமின்றி நடைமுறையிலும் தீண்டாமை நகரங்களிலிருந்து ஒழிந்துவிட்டது; கிராமங்களிலிருந்து வேகமாக மறைந்து வருகிறது. இந்த உரிமைச் சட்டம் இயற்றப்பட்டதை கட்டுப்பாடான எதிர்ப்பின்றி மக்கள் ஏற்றுக்கொண்ட விதம் பாரத சமுதாயத்துக்கு விசேஷப் பெருமையைக் கொடுத்தது. மொத்த மக்களில் நான்கில் ஒரு பங்கினர் இம்மாதிரி விமோசனம் அடைந்தவர்கள் என்பதை நினைத்துப் பார்த்தால், இதன் முழுப் பொருளும் விளங்கும்.

இந்திய அரசியல் சட்டம் அமுலாகத் தொடங்கிய பிறகு அரசியல் சட்டத்துக்குச் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. அந்தத் திருத்தங்கள் மூவகை நோக்கமுள்ளவை. (1) ஹரிஜனங்களுக்கு மட்டுமின்றி பிற்பட்ட வகுப்புக்களுக்கும் கல்வி, வேலைச் சலுகைகளை அளிப்பது. (2) நிலவுடைமை விஷயமாக சீர்திருத்தங்களைச் செய்வதைச்

சுலபமாக்குவது. (3) பொதுநலனை முன்னிட்டு அவசியமென தோன்றும் தொழில்களையோ தொழில் ஸ்தாபனங்களையோ அரசாங்கம் ஏற்று நடத்துவது. இந்த மூன்றும் முதலில் 1950-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்டத்தில் இடம் பெருதவை. நல்லாட்சிக்கும் பொருளாதார நீதி கிடைக்கச் செய்யவும் இவை அவசியம் என்று கருதப்பட்டது. ஆனால் இவையும் பாகுபாடற்ற சம சந்தர்ப்ப ஷரத்தும் எவ்வளவோ வகைகளில் மீறப்படுகின்றன. துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன. கோர்ட்டுகளை அணுகி நியாயம் கோர இயலாதபடி உருமயக்கம் செய்கிருர்கள் என்றெல்லாம் அவ்வப்பொழுது பரவலாகப் புகார்கள் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் பசையில்லை என்று சொல்வதற்கில்லை. பிற உடைமைகளைப்பற்றிய உரிமைகளிற் போலவே நிலவுரிமைகளில் கைவைக்க வேண்டுமாயின் நியாயமான நஷ்ட ஈடு தர வேண்டும் என்று அசல் சட்டம் பொதுப்படையாகக் கூறியது. இதை சட்டப்படி நஷ்டஈடு கொடுத்தால் போதும் என்று மாற்றினுர்கள். இதை ஆட்சேபித்துக் கோர்ட்டுகளை அணுகி பரிகாரம் தேட உரிமையில்லை. சமீப காலத்தில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு சட்டங்களில் கோர்ட்டுகளை அணுக முடியாதபடி செய்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சம். இது மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் பாதிப்பதுடன், சிறிய உடைமையாளருக்கும் அநீதி விளைவிப்பதாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டு வலுத்து வருகிறது. மார்க்கெட் நிலவரத்தில் முழு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு சட்டத்தில் இடம் இருக்க வேண்டும் என்று கருதுவோர் நிறைய இருக்கிருர்கள். பஸ் சர்வீசுகளையும் மின்சார விநியோக கம்பெனிகளையும் சர்க்கார் எடுத்து நடத்துவது பற்றிய நடவடிக்கையொன்று தொழில்-சுதந்திரத்தை பாதிப்பதாக இருக்கிறது என்று சொல்லி சுப்ரீம் கோர்ட் அபிப்பிராயம் கூறியதன்பேரில், மேலே குறிப்பிட்ட மூன்ருவது மாறுதல் 1955 ம் ஆண்டில் செய்யப்பட்டது. இம்மாதிரி எடுத்துக் கொண்ட அதிகாரத்தின் வரம்பை விஸ்தரித்துத்தான் அரசாங்கம் பெரிய அளவில் பல்வேறு வர்த்தக வியா

பாரப் பணிகளைப் பரவலாக மேற்கொள்ள முற்பட்டது. இந்தப் போக்கு பிரஜைகளுக்குப் பல்வேறு பிழைப்புக்கள் இல்லாதபடி செய்து அரசாங்க தயவில் ஆளும் கட்சியின் தாட்சண்யத்தில் பெரும்பாலான மக்களை ஊதியத்துக்கு உழைப்பவர்களாக்கி விடும் அபாயம் இருப்பதாகப் பலர் கருதுகின்றனர். சமுதாய அமைப்பை வேகமாக மாற்றியமைப்பதில் கண்ணுங் கருத்து முள்ள கட்சிகள் தனி மனிதனின் உரிமைகளையும் சுதந்திரங் களையும் மதியாது, சர்வாதிகாரப் போக்கில் செயலாற்றி சுதந்திரமே இல்லாத நிலைமையைத் தோற்றுவித்துவிடக் கூடும் என்பது பல பேருடைய கருத்து.

கருத்துச் சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம், மதச் சுதந்திரம், மொழி, லிபியுரிமைகள் அரசியல் சட்டத்தின் 20, 21-வது ஷரத்துக்களில் உறுதி செய்யப்பட்டுள்ளன. ஆனால், இந்த சுதந்திரங்களைத் துஷ்பிரயோகம் செய்து, துவேஷம் சகிப்புத்தன்மையற்ற நிலை, ஒழுக்கக் குறைவு, கட்டுப்பாடின்மை, பயமுறுத்தல்-போக்கு, உருட்டல்-மிரட் டல், பலாத்காரப் பிரயோகம் ஆகியவை சகஜமாக்கப்பட்டு வருகின்றன. இவை உண்மையில் முற்போக்குள்ள ஜனநாயக நாடுகளில் அனுமதிக்கப்படுவதில்லை. காலித்தனம் என்று கருதி அந்த அடிப்படையில் அங்கு இவை விஷயத்தில் நட வடிக்கை எடுக்கிறார்கள். இங்கு உரிமைகளின் பெயரால் அவை வளர்க்கப் பட்டுவருகின்றன. ஆட்சியாளர் கவலைப் படுவதாகக் காணோம். இது சிறுபிள்ளைத்தனம் நிறைந்த விபரீத நிலை இது மாறினால்தான் தேசம் விரிவான அடிப் படையில் ஏற்றம் காண இயலும் என்று கருதி, இதற்கேற்ப உரிமைகளையும் கடமைகளையும் சரிவர இணைக்க வேண்டிய பொறுப்பு இருப்பதாகக் கருதுவோர் நிறைய இருக்கிறார்கள்.

ஆலயங்கள், பிற அற நிலையங்கள் ஆகியவற்றின் விஷயமாக அரசாங்கத்தின் குறுக்கீடு வரம்பு மீறியதாகவும், அரசியல் சட்டம் உறுதி செய்யும் மத சுதநதிரத்தை வில்லங் கப்படுத்துவதாகவும் இருக்கிறது என்று இங்குமங்கும்

கூறப்படுகிறது. நிர்வாக ஒழுங்கு முறைக்கு குறுக்கீடு அவசியம் என்கின்றனர் சர்க்கார்.

## அமெரிக்க நீக்ரோப் பிரச்னை

பல வகைகளில் மிக முற்போக்காக இருந்துவரும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் எல்லா மனித உரிமைகளையும் நீக்ரோ இனத்தவர் அனுபவிக்கவில்லை என்பது அடிக்கடி எழும் புகார். இது அடியோடு ஆதாரமற்றது அல்ல. ஆனால், நீக்ரோக்கள் விஷயத்தில் எந்த விதமான பாகுபாடும் இருக்கலாகாது என்று சட்டமியற்றி இயன்ற அளவு மத்திய சர்க்கார் அமுல் நடத்தி வருகின்றனர். இதற்குச் சாதகமான மனப்பான்மை அமெரிக்காவில் வளர்ந்துவருவது குறிப்பிடத் தக்கது.

வரி வருமானங்களைக் கொண்டு நடத்தும் பள்ளிக்கூடங்களில் எல்லா இனத்தவரும் சேர்ந்து படிக்க உரிமையுள்ளவர்கள் என்று 1954-ம் ஆண்டில் யு. எஸ். சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது. நீக்ரோக்களும் வெள்ளையரும் தனித்தனிப் பள்ளிக்கூடங்களில்தான் படிக்க வேண்டும் என்ற சட்டம் அதற்கு முன் 48 அமெரிக்க ராஜ்யங்களில் இருந்து வந்தது. இவற்றில் பத்து ராஜ்யங்களில் ஆரம்ப வகுப்புகளில் எல்லோரும் சேர்ந்து படிப்பதற்கு சென்ற ஆண்டில் வழி செய்திருக்கிறார்கள். ஆர்கான்ஸஸ் ராஜ்யத்தில் லிட்டில் ராக் என்ற தலை நகரில் நீக்ரோ மாணவர்களை ஏற்க மறுத்துக் கலகம் நடைபெற்றது. கவர்னர் பிடிவாதமாக ஆட்சேபித்தார். ஆனால், ஜனாதிபதி படைகளை அனுப்பி இணைப்புக் கொள்கையை ஏற்கும்படியாக நிர்ப்பந்தித்தார். இது மிக உறுதியான நடவடிக்கை. இன்னும் ஏழு ராஜ்யங்களில் இன அடிப்படையில் குழந்தைகள் பிரிந்துதான் படிக்கின்றன. சேர்ந்து படிக்கும் கொள்கைக்கு எதிர்ப்பு அதிகமாகக் காணப்படுவது தெற்கத்திய ராஜ்யங்களில்தான்.

1957-ம் ஆண்டில் நிறைவேறிய சிவில் உரிமைச் சட்டப்படி வோட்டுரிமை நீக்ரோக்களுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. சிவில் உரிமைகளின் அனுபோகத்தைக் கவனித்து

நடவடிக்கைகளைச் சிபார்சு செய்ய ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது. பல துறைகளில் இன அடிப்படையில் பாகுபாடுகள் பல இருந்து வருகின்றன என்பது உண்மையே. ஜாகை, பிரயாணம், ஓட்டல், தியேட்டர், விளையாட்டு போன்ற வசதிகள் விஷயத்தில் பலவகைப் பாகுபாடுகள் இருந்து வருகின்றன. ஆனால் இவையெல்லாம் செல்லத் தகாதவை என்பதை பல தீர்ப்புக்கள் மூலம் சுப்ரீம் கோர்ட் அறிவித்துள்ளது அந்தத் தீர்ப்புக்களை தெற்கத்திய ராஜ்யங்களில் இன்னும் வெவ்வேறு அளவில் எதிர்ப்பு இருந்துவருகிறது. ஆனால் அதேசமயத்தில் அவற்றிற்குத் தலைவணங்கித் திருந்தவேண்டும் என்று கருதுவோரின் செல்வாக்கும் அங்கு வலுத்து வருகிறது. இந்தப் போக்கு நீடித்தால் இன்னும் ஒரு தலைமுறை நீக்ரோக்கள் சட்டபூர்வமாகவும் நடைமுறையிலும் சமவுரிமையுள்ளவர்களாகி விடுவர் என்றே எதிர்பார்க்கலாம்.

மனித உரிமைகள் பிற உரிமைகளைப் போன்றவைதாம் கஷ்டப்பட்டுப் போராடித்தான் இவற்றை அடைய வேண்டுமா? அல்லது உலக அபிப்பிராயம் நல்லபடி உருவாகி, அமைதியான சூழ்நிலையில் உலக மக்கள் எல்லோருக்கும் அடுத்த பத்து ஆண்டுகளிலேனும் இவை உறுதிப்படுமா? இதுதான் கேள்வி. இதற்குத் திட்டவட்டமான பதிலைக் கூற முடியாது. ஆனால் இதுவரை நடந்திருப்பவற்றைக் கொண்டு மதிப்பிட்டால், மனிதாபிமானம் வளர்ந்து போகப் போக மனித உள்ளம் விரிவடைந்து, தரும நியாயத்துக்கு அதிக மதிப்பு ஏற்படுவது அசாத்தியமல்ல. ஆனால் ஒரு விஷயத்தை மறக்கலாகாது. சொந்த நாட்டிற்கு வெளியேயுள்ளவர்களின் மனித உரிமைகளுக்காகப் போரிடும் மக்கள், தம் நாட்டிற்குள்ளேயே இனம், மொழி, மதம், நிறம், ஜாதி போன்ற காரணங்களுக்காக எவ்விதமான பாகுபாடும் செய்யாமல் உண்மையான மனிதாபிமானத்துடன், மனித உரிமைப் பிரக்ஞையுடன் எல்லா சந்தர்ப்பங்களிலும் செயலாற்ற வேண்டும். அதுதான் மனிதப் பண்பு அதுதான் மனித உரிமைப் பிரகடன உணர்ச்சி. அது

வலுத்துக் கொண்டே போகும்படி செய்தால் நிலைமை போகப்போக நல்லபடிமாறும் என்பதில் ஐயமே இல்லை.

### மானிட உரிமைப் பிரகடனம் முழு வாசகம்

அகில உலக மானிட உரிமைப் பிரகடனம் ஐ. நா. அசெம்பிளியில் 1948 டிசம்பர். 10 உ நிறைவேறி வெளி யிடப்பட்டது. எல்லா தேசங்களிலும், அவற்றின் ராஜீய நிலைமை எவ்வாருக இருந்தபோதிலும் இதை வெளியிட்டு, பிரசாரப்படுத்தி, படித்து விளக்கிக் கூறவேண்டும்; எல்லா கல்வி நிலையங்களிலும் முக்கியமாக இப்பணி நடைபெற வேண்டும் என்று ஐ. நா. அசெம்பிளி கோரியது.

### பீடிகை

பிரகடனத்தின் பீடிகை பின் வருமாறு கூறுகிறது :—

மனித குடும்பத்திலுள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் சுயமான கண்ணியமும், பார்தீனம் செய்யக் கூடாத சமத்துவ உரிமைகளும் உண்டு என்பதை அங்கீகரிப்பதுதான் உலகில் சுதந்திரம், நீதி, சமாதானம் ஆகியவற்றின் அஸ்திவரமாகையாலும், மனித உரிமைகளை மதித்து நடக்காமையாலும், அலட்சியப் படுத்தியதாலும், காட்டு மிராண்டித் தனமான செயல்கள் நிகழ்ந்து மனித வர்க்கத்தின் மனச் சாட்சி புண்பட்டதாலும், அதன் விளைவாக மக்கள் அடைய வேண்டிய உயர் நிலை என்பதில், மானிடர்களெல்லாம் பேச்சுச் சுதந்திரம் மத சுதந்திரம், அச்சத்தினின்று விடுதலை இல்லாமை என்பது இல்லாத நிலை ஆகியவற்றை அனுபவிப்பதாக இருக்கவேண்டும் என்ற கருத்துள்ள உலகம் தோன்றியிருப்பதாலும், கொடுங் கோன்மைக்கு அடக்குமுறைக்கும் எதிரிடையாகக் கலகம் செய்தாக வேண்டிய இறுதி நிர்ப்பந்தம் மக்களுக்கு ஏற்படாமலிருக்க வேண்டுமாயின், சட்டத்தின் ஆட்சியின்கீழ் மனித உரிமைகளுக்குப் பாதுகாப்புக் கிடைக்க வேண்டுமாகையாலும், தேசங்களிடையே நேச உறவு வளர்ச்சியடைவதற்கு உழைக்க வேண்டியது அத்தியாவசிய

மாகையாலும் ஐ.நா. வில் சேர்ந்துள்ள தேசங்களின் மக்கள் அடிப்படையான மனித உரிமைகளிலும், மனிதப் பிறவி யின் கண்ணியத்திலும் மதிப்பிலும், ஆண் பெண் சம உரிமையிலும் தமக்குள்ள நம்பிக்கையை ஐ. நா. சாஸனத்தில் மீண்டும் உறுதி செய்திருப்பதாலும் விரிவடைந்து வரும் சுதந்திர நிலையில் சமுதாய வளர்ச்சி கண்டு, வாழ்க்கைத்தரம் மேம்படுவதற்குப் பாடுபடுவது என்று சங்கற்பம் செய்து கொண்டிருப்பதாலும், மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் எங்கும் அமுலாகி கௌரவிக்கப் பெறுவ தற்கு ஐ. நாவுடன் ஒத்துழைத்துப் பாடுபடுவதாக மெம்பர் நாடுகள் உறுதி செய்திருப்பதாலும், இந்த வாக்குறுதி பூராவாக நிறைவேறச் செய்வதற்கு இந்த உரிமைகளையும் சுதந்திரங்களையும் பற்றி பொதுப்படையான கருத்து இருக் கச் செய்வது மிகமிக முக்கியமாக இருப்பதாலும், இக் காரணங்களால் இப்பொழுது **பொதுச் சபையானது** எல்லா மக்களும் எல்லா தேசங்களும் அடைய வேண்டிய பொது நிலை என்று, அகில-உலக மனித உரிமைச் சாஸனத்தைப் பொதுச் சபை பிரகடனம் செய்கிறது ஒவ்வொரு தனி நபரும், ஒவ்வொரு சமுதாய அமைப்பும், இந்தப் பிரகட னத்தை இடைவிடாது மனதிற்கொண்டு, போதனை செய் தும், கல்வி புகட்டியும், இந்த உரிமைகளுக்கும் சுதந்திரங் களுக்கும் கௌரவம் கிடைக்கச் செய்ய வேண்டும்; ஒவ்வொரு தேசமும் தனியாகவும் பல தேசங்கள் சேர்ந்தும், இவை எங் கும் பயனுள்ள வகையில் மெம்பர்-நாடுகளிளிலுள்ள மக்கள் விஷயத்திலும், தமது அதிகார வரம்புக்கு உட்பட்ட பகுதி களின் மக்களிடையேயும் அங்கீகாரம் பெற்று அமுலாகச் செய்வதற்கான முற்போக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**ஷரத்து 1.** கண்ணியம், உரிமைகள் ஆகியவற்றில் சம மாகவும், சுதந்திரமுள்ளவர்களாகவும் எல்லா மானிடர்களும் பிறக்கிறார்கள். அவர்கள் பகுத்தறிவும் மனச்சாட்சியும் படைத்தவர்கள். சோதர உணர்ச்சியுடன் ஒருவர் பால் நடந்து கொள்ளவேண்டியவர்கள்.

**ஷரத்து** 2: இனம், நிறம், பால் மொழி, மதம், ராஜிய அல்லது வேறு கருத்து, தேசிய அல்லது சமூக நலங்கள், சொத்து, பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து என்ற எவ்வித மான பாகுபாடு மின்றி, இந்தப்பிரகடனத்தில் செப்பியுள்ள எல்லா உரிமைகளையும் சுதந்திரங்களையும் அனுபவிக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

ஒரு நபருக்குச் சொந்தமான தேசம் அல்லது பிரதேச மானது சுதந்திர, தருமகர்த்தா, சுயாட்சியில்லாத அல்லது தன் ஆதிபத்தியத் தன்மைக்கு வேறு வில்லங்கம் போன்ற எந்த அந்தஸ்து படைத்ததாக இருந்தபோதிலும், ராஜிய, விவகார வரம்பு அல்லது சர்வதேச அந்தஸ்துக் காரணமாக எந்தவிதமான பாகுபாடும் அதன் மக்களிடையே செய்யப் படலாகாது.

**ஷரத்து** 3: ஒவ்வொரு நபரும் வாழ உரிமை பெற்றவர் சுதந்திரமாகவும் சரீரத்துக்கு பந்தோபஸ்துடனும் வாழ உரிமையுண்டு.

**ஷரத்து** 4: அடிமை நிலையில் அல்லது அடிமையை ஒத்த நிலையில் எவரையும் வைத்திருக்கலாகாது. அடிமைத் தனமும் அடிமை வியாபாரமும் எலலாவகைகளிலும் தடுக்கப் பட வேண்டும்.

**ஷரத்து** 5: எவரையும் சித்திர இம்சைப் படுத்தலாகாது. குரூரமும், மனிதத்தன்மையற்றதும், இழிவு படுத்துவது மான நடவடிக்கைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்த லாகாது.

**ஷரத்து** 6: எல்லாவிடங்களிலும் சட்டப்படி நடத்தப் பட வேண்டிய நபர் என்று அங்கீகாரம் பெறுவதற்கு ஒவ் வொருவருக்கும் உரிமையுண்டு.

**ஷரத்து** 7: சட்டத்தின் முன் எல்லோரும் சமம்: எவ்வித மான பாகுபாடு மின்றி சட்டத்தின் சம பாதுகாப்புக்கு எல்லோரும் உரித்தானவர்கள்: இந்தப் பிரகடனத்தை மீறி பாகுபாடு செய்யப் படாமலும், அப்படிச் செய்ய வேண்டுமென

தூண்டப்படுவதற்கு எதிராகவும் சம பாதுகாப்புப் பெற எல்லோருக்கும் உரிமையுண்டு.

**ஷரத்து** 8: அரசியல் சட்டம் அல்லது வேறுசட்டம் அளிக்கும் ஜீவாதார உரிமைகளை மீறிய செயல்கள் விஷயமாக, தகுதியுள்ள தேசிய மன்றங்கள் மூலம் பயனுள்ள பரிகாரம் பெற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

**ஷரத்து** 9: யதேச்சையாகக் கைது செய்து, காவலில் வைப்பது, வெளியேற்றுவது ஆகியவற்றிற்கு எவரையும் உட்படுத்தலாகாது.

**ஷரத்து** 10: எதிர் வழக்காடுவதற்கு அவசியமான எல்லா உத்தரவாதங்களுடன் கூடிய பகிரங்கமான விசாரணையில், சட்டப்படி குற்றவாளி என்று ருசுவாகும் வரை, தண்டனைக்குரிய குற்றச்சாட்டுக்கு உள்ளாகிய ஒவ்வொரு நபரும் குற்றமற்றவர் என்று கருதப்படுவதற்கு உரிமையுள்ளவர்.

**ஷரத்து** 11: ஒரு செயல் அல்லது செயல் படாமையானது, அது நிகழ்ந்தபோது தேசிய அல்லது சர்வதேசிய சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாக இருக்கவில்லையென்றால், அந்தக் குற்றத்தை இழைத்ததாக எவர் விஷயத்திலும் முடிவு செய்யலாகாது.

**ஷரத்து** 12: அந்தரங்க, குடும்ப, வீட்டு, கடிதம் போக்குவரத்து விவகாரங்களில் எவர் விஷயத்திலும் யதேச்சையாகக் குறுக்கிடலாகாது. அவரது மானத்தையும் கியாதியையும் தாக்கலாகாது. அத்தகைய குறுக்கீடுகள் அல்லது தாக்குதல்களினின்று பாதுகாப்புப் பெற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

**ஷரத்து** 13: (1) ஒவ்வொரு நாட்டின் எல்லைக்குள் சுதந்திரமாக சஞ்சரித்து வசிக்க ஒவ்வொரு நபருக்கும் உரிமையுண்டு.

(2) சொந்த நாடு உட்பட எந்த தேசத்தையும் விட்டு, வெளியே செல்லவும் தன் நாட்டிற்குத் திரும்பவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

**ஷரத்து 14:** (1) பிறநாடுகளில் அடைக்கலம் புகுந்து இம்சையற்ற பாதுகாப்பை அனுபவிக்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) ராஜீயத் தன்மையற்ற குற்றங்களை உண்மையில் இழைத்திருந்தாலும், ஐ.நா.வின் நோக்கங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் முரணான செயல்கள் விஷயத்திலும் இந்த உரிமையைக் கோரிப் பெற இயலாது.

**ஷரத்து 15:** (1) ஒரு தேசிய இனவுரிமையைப் பெற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) தேசிய இனவுரிமையை எவரிடமிருந்தும் யதேச்சையாகப் பறித்துவிடலாகாது. தன் தேசிய இனத்தை மாற்றிக் கொள்ளும் உரிமையையும் எவருக்கும் மறுக்கலாகாது.

**ஷரத்து 16:** (1) முழு வயதடைந்த ஆண்களும் பெண்களும் இனம், தேசிய இனம், மதம் ஆகிய வரம்புகளின்றி திருமணம் செய்துகொண்டு குடும்பம் நடத்த உரிமையுள்ளவர்கள். திருமணம் செய்துகொள்வது, மண வாழ்க்கை, மண முறிவு ஆகியவற்றில் சமவுரிமைக்கு அவர்கள் உரித்தானவர்கள்.

(2) சதிபதிகளாகிறவர்கள் தாமாகவே முழு சம்மதம் அளித்துத்தான் திருமணம் செய்து கொள்ளலாம்.

(3) சமூகத்தில் இயற்கையான அடிப்படையான தொகுப்பு குடும்பம் சமுதாயமும் ராஜாங்கமும் அதற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியவை.

**ஷரத்து 17:** (1) தனியாகவும் பிறருடன் சேர்ந்தும் சொத்தை வைத்துக்கொள்ள ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) எவருடைய சொத்தையும் யதேச்சையாகப் பரித்துவிடலாகாது.

**ஷரத்து** 18 : சிந்தனை, மனச் சாட்சி, மத சுதந்திரங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு. மதத்தை அல்லது நம்பிக்கையை மாற்றிக்கொள்வதற்குள்ள சுதந்திரமும் இதில் அடங்கும். தனியாக அல்லது பிறருடன் சமுதாயமாகச் சேர்ந்து, வெளிப் படையாக அல்லது தனிமையில் தன் மதத்தை தோற்றுவிக் கவும், அதை போதிக்கவும், பின்பற்றவும், பூசிக்கவும் கொண்டாடுவதற்கும் உள்ள உரிமையும் இதில் அடங்கும்.

**ஷரத்து** 19 : ஒரு கருத்தைக் கொள்ளவும் அதை எடுத் துரைக்கவும் ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் உண்டு. குறுக்கீ டின்றிக் கருத்தைக் கொள்ளும் உரிமை இதில் அடங்கும். எந்த வழியிலும், எல்லையைப் பொருட்படுத்தாது தகவல் களைத் கோரிப் பெறவும், அளிக்கவும் சுதந்திரமுண்டு.

**ஷரத்து** 20 : (1) அமைதியாகக் கூடவும் ஒன்று சேர கூவும் ஒவ்வொருவருக்கும் உரிமை யுண்டு.

(2) எந்த சங்கத்திலும் இருக்க வேண்டு மென எவரும் நிர்ப்பந்திக்கப் படலாகாது.

**ஷரத்து** 21 : (1) தன் நாட்டின் ஆட்சியில் நேரடி யாகவோ சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளைக் கொண்டோ பங்குபெற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) தன் நாட்டில் சர்க்கார் வேலைகளில் பங்கு பெற ஒவ்வொருவருக்கும் சமவுரிமை உண்டு.

(3) மக்களின் இஷடமே சர்க்காரது அதிகாரத்தின் அடிப்படையாக இருக்க வேண்டும் குறிப்பிட்ட கால இடை வெளிகளுடன் உண்மையான தேர்தல் மூலம் மக்களின் இஷ்டம் வெளிப்பட வேண்டும். எல்லோருக்கும் சமவோட்டுரி மையுடன், இரகசியமான வாக்கெடுப்பு, அல்லது அதற்குச் சமமான வாக்குப் பதிவு முறைகளில் தேர்தல் நடைபெற வேண்டும்.

**ஷரத்து 22:** சமுதாய உறுப்பினர் என்ற வகையில் க்ஷேமநல உத்தரவாதம் பெற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. தன் கண்ணியத்துக்கும் தன் தனி விசேஷநிலை சுதந்திரமாக வளர்ச்சியுறவும் இன்றியமையாத பொருளாதார, சமூக நல, கலாச்சார உரிமைகளை அந்தந்த நாட்டின் அமைப்புக்கும் வாய்ப்புக்கும் இசைந்தவகையிலும், தேசிய முயற்சியின் மூலமாகவும், சர்வதேச ஒத்துழைப்பைக் கொண்டும் அடைவதற்கு ஒவ்வொருவருக்கும் பாத்தியதை உண்டு.

**ஷரத்து 23:** (1) உழைக்க உரிமை, என்ன பிழைப்பு வேண்டுமென்பதை நிர்பபந்தமின்றி தேர்வு செய்து கொள்ள நியாயமான, அனுகூலமான வேலைநிலைமைக்ருக்கு, வேலையில்லாமைக்கு எதிராகப் பாதுகாப்புக்கு ஆகியவற்றிற்கு உரிமை எல்லோருக்கும் உண்டு.

(2) சமவேலைக்கு சம ஊதிய ஊரிமை பாகுபாடின்றி எல்லோருக்கும் உண்டு.

(3) வேலை செய்யும் ஒவ்வொருவரும் பெறும் ஊதியம் நியாயமானதாகவும் அனுகூலமுள்ளதாகவும், அவசியமாயின் வேறு வித க்ஷேமநலப் பாதுகாப்புடன் சேர்ந்து, தானும் குடும்பமும் மானிட கண்ணியத்துடன் வாழ்வதை உறுதிதாகவும், இருக்கவேண்டும்.

(4) தன் நலன்களின் பாதுகாப்புக்காக தொழிற்சங்கங்களை அமைக்கவும் அவற்றில் சேரவும் ஒவ்வொருக்கும் உரிமையுண்டு.

**ஷரத்து 24:** ஓய்வுக்கும் உழைப்பில்லாத நேரத்துக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. வேலை நேரத்துக்கு நியாயமான வரம்பு, காலக்கிரமப்படி சம்பளத்துடன் கூடிய விடுமுறை இதில் அடக்கமானது.

**ஷரத்து 25:** (1) தானும் குடும்பமும் தேகதிடத்துடன் நல்வாழ்வு நடத்துவதற்குப் போதுமான வாழ்க்கை நிலைமைக்கு உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. உணவு, ஆடை, ஜாகை, வைத்திய பாதுகாப்பு, அவசியமான க்ஷேமநல வசதி

கள் வேலையில்லாமை, நோய், உடற்ஊனம், கைம்மை, மூப்பு, தன் சக்தியை மீறிய சந்தர்ப்பங்களால் பிழைப்புக்கான வாய்ப்பு இல்லாது போதல் ஆகியவற்றிற்கு எதிராக பாது காப்புரிமை ஆகியவை இந்த வசதிகளில் சேர்ந்தவை.

(2) தாய்மையும் குழந்தைப் பருவமும் விசேஷ ஜாக் கிரதையும் உதவியும் பெற உரிமையுள்ளவை. விவாகஉற வின் மூலமாக அல்லது அதற்குப் புறம்பாகப் பிறந்தாலும் எல்லாக் குழந்தைகளும் சம அளவில் க்ஷேமநலப் பாதுகாப் புக்கு உரித்தானவர்கள்.

ஷரத்து 26: (1) கல்வி பெற உரிமை ஒவ்வொரு வருக்கும் உண்டு. ஆரம்ப அஸ்திவார கட்டங்களிலேனும் கல்வி இலவசமாயிருக்கவேண்டும். ஆரம்பக்கல்வி கட்டாய மாயிருக்க வேண்டும். தொழில் நுட்ப, உயர் பள்ளிக் கல்வி பொதுப்படையாக கிடைக்கச் செய்யவேண்டும். தகுதியின் அடிப்படையில் உயர் தரக் கல்வி எல்லோருக்கும் கிட்டுவதாக இருக்கவேண்டும்.

(2). மானிடத் தனி நிலை முழுவளர்ச்சி காண்பதையும், மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் விஷயத்தில் மரியாதையும் வலுப்படுத்துவதையே கல்வி நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

எல்லா தேசங்கள், மதப் பிரிவுகள் ஆகியவற்றிடையே நல்லுணர்வும், சகிப்புத்தன்மையும் நட்பும் வளரச் செய்ய வேண்டும். கல்வி, சமாதானத்தை நிலைநிறுத்த ஐ.நா.வின் நடவடிக்கைகளுக்கு ஆக்கம் அளிக்கவேண்டும்.

ஷரத்து 27 (1) சமுதாயத்தின் கலாச்சார வாழ்வில் சுதந் திரமாகப் பங்கு பற்றவும் கலைகளை அனுபவிக்கவும், விஞ் ஞான வளர்ச்சியிலும் அது தரும் நலன்களிலும் பங்கு பெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

(2) தனது விஞ்ஞான, இலக்கிய, கலைத்துறைப் படைப்பு கள் மூலம் தன் ஆத்மீக, பொருள்வகை நலன்களுக்குப் பாது காப்புப் பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

**ஷரத்து** 28 : இந்தச் சாஸனத்தில் செப்பியுள்ள உரிமைகளும் சுதந்திரங்களும் முழுமை அடையக் கூடிய சமுதாய, சர்வதேச அமைப்புக்கு உரிமை ஒவ்வொருக்கும் உண்டு.

**ஷரத்து** 29 : (1). சமுதாயத்தின்பால் ஒவ்வொருவருக்கும் கடமைகள் உண்டு. அவற்றைச் செய்துதான் அவனது தனி நிலை முழுவளர்ச்சி காண இயலும்.

(2) ஒவ்வொருவரும் அனுபவிக்கும் உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் வரம்புகள் உண்டு. அவைசட்டத்தின் மூலம் நிணயிக்கப்பட வேண்டும். பிறரின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் அங்கீகரித்து அவற்றிக்கு மரியாதை கிடைக்கச் செய்வதற்காகவும், ஜனநாயக சமுகத்தில் ஒழுக்கம், பொது அமைதி, மக்களது க்ஷேமலாபம் ஆகிய வற்றின் நியாயமான தேவைகளுக்கும் எற்பவும் மட்டுமே வரம்புகள் வேண்டும்.

**ஷரத்து** 30 : இங்கே செப்பியுள்ள உரிமைகளையும் சுதந்திரத்தையும் அழிப்பதை நோக்கமாகக் கொண்ட எந்தச் செயலிலும் எந்த அரசாங்கமோ, தனி நபரோ, கோஷ்டியோ ஈடுபடுவதற்கு உரிமை யிருப்பதாக இந்தப் பிரகடனத்தி லுள்ள எதற்கும் விளக்கம் செய்யப்படலாகாது.

மனிதப் பிறவி இயற்கையான சிறப்புகள் கொண்டது. ஒவ்வொரு தனி மனிதனும் வாழ்வில் முழுமை காண உரிமை உள்ளவன்; இது நாகரீக வாழ்வின் அடிப்படை என்பது தொன்மையான கோட்பாடு. தனி மனிதனது வாழ்வு முழு மலர்ச்சி காணவேண்டுமாயின் சர்க்காருக்கும் மக்களுக்கும் இடையே இருக்கவேண்டிய உறவு நிலை திட்டவட்டமாக உருப் பெறுவது அவசியம் என்பதும் பழைய கோட்பாடே. சர்க்கார் எவற்றில் குறுக்கிடலாம்? எந்த அளவு குறுக்கிடலாம்? உறுதி செய்யவேண்டிய உரிமைகள் யாவை?

# MANITHA URIMAIGAL

(HUMAN RIGHTS)

A. G. VENKATACHARI

தமிழகம், 59, பிராட்வே, சென்னை - 1

Jacket Printed at Neo Art Press, Madras-2